கோகுலம்

GOKULAM

டிசம்பர் '89 விலை ரூ. 3/–




PARRY'S PAGE
சவாரி செல்வோம் வாருங்கள்!
சென்ற தடவை நாங்கள் (என் குட்டித் தோழர்கள் கோமில்க், காபி பைட், ட்ரை-மீ மற்றும் நான்) உங்களை மிருகங்கள் உலகத்திற்கு அழைத்துச் சென்றோம். இந்த தடவை நாம் உல்லாசமாகச் சவாரி செய்யப்போகிறோம். போக்குவரத்து உலகைச் சுற்றி வருவோம். வழக்கம்போல இந்த பாரிஸ் பேஜை வெட்டி எடுத்து வையுங்கள். சீக்கிரமே உங்களுக்கென்று சொந்தமாக ஒரு சின்னக் கலைக்களஞ்சியமே உருவாகிவிடும்.
ரைட் சகோதரர்கள், சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு, முதல் விமானத்தில் பறந்தனர். இன்று உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானமான போயிங் 747'ன் இறக்கைகளின் வீச்சளவு ரைட் சகோதரர்களின் முதல் விமானப் பயணத்தூரத்தை விட அதிகமானது!
போக்குவரத்துத் துறையில் மிகவும் பிரமிப்பூட்டும் சாதனை, கான்கார்ட் விமானம். இது ஒலியை விட வேகமாகச் செல்லக்கூடியது. இந்தப் பயணிகள் விமானம் மணிக்கு 2,170 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கக் கூடியது.
நீராவி என்ஜின் வாகனங்களைக் கண்டு பிடிப்பதற்கு முன்பு, மக்கள் பொதுவாக நடந்தே பயணம் செய்தார்கள். சில துணிச்சல்காரர்கள் குதிரை வண்டிகளில் சென்றார்கள். இல்லாவிடில் பாய்மரக் கப்பல்களில் பயணம் செய்தனர். இது கடினமானது மட்டுமல்ல, சீக்கிரம் களைப்படையவும் செய்து விடும். இச்சமயம், 1769'ல் ஜேம்ஸ் வாட் நீராவி என்ஜினைக் கண்டு பிடித்தார். அதற்குப் பிறகு ஜார்ஜ் ஸ்டீவன்சன் என்ற பிரிட்டிஷ்காரர், மணிக்கு 46 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக்கூடிய என்ஜினை உருவாக்கினார். அதன் பிறகு உலகெங்கும் ரயில் வண்டிகள் வந்தன. ரயில் பயணம் மிகவும் சிக்கனமானதாகவும், வசதியானதாகவும் அமைந்தது. இன்று, பிரான்சின் அதிவேக TGV ரயில் வண்டி, மணிக்கு 380 கிலோமீட்டர் வேகத்தில் செல்கிறது!
படத்தில் உள்ளது போன்ற மரக்கட்டைத் தெப்பங்களில், முற்காலத்தில் கடல் பயணிகள் சென்றனர். இன்று, குவீன் எலிசபெத்-2 என்னும் உலகின் மிகப்பெரிய பயணிகள் கப்பலில் 2000 பேர் பயணம் செய்ய முடியும். இதில் உணவு விடுதிகள், சொகுசு அறைகள், சமையல் கூடங்கள், ஏன் ஒரு நீச்சல் குளம் கூட உண்டு.
ஹோவர்கிராஃப்ட் என்பது என்ன? இது ஒரு பறக்கும் கப்பல். தண்ணீரின் மேல் ஒரு காற்று மெத்தையை உண்டாக்கிப் பறந்து செல்கிறது. சாதாரணக் கப்பல்களை விட இது மிக வேகமாகச் செல்லக்கூடியது.
வழியைக் கண்டு பிடியுங்கள்!
முதலாவது கார்?! ஆமாம், இப்படித்தான் அது இருந்தது. இது நீராவியால் ஓடியது. வேகம் மணிக்கு 5 கிலோ மீட்டர்! ஆனால் உண்மையில் கார்கள் என்பவை 1885'ல் டாய்ம்லெரும் 1886'ல் பென்ஸ் என்பவரும் உருவாக்கியவை தான். இவை பெட்ரோலால் ஓடின.
Parry's
THE KING OF SWEETS
புதிய பாரீஸ் பேஜுல் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? எங்களுக்கு எழுதுங்கள்: பாரீஸ்-மிட்டாய் மன்னன் அஞ்சல் பெட்டி எண் 2040, சென்னை 600 001.
HTA 7326



கோகுலம்

1989 டிசம்பர் மாத இதழ்
மலர் — 7 ◦ இதழ் 11

அன்புத் தம்பி தங்கைகளே!

உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் நல்லாசிகள். நலம்பெற வாழ்த்துக்கள்.

நாம் இன்ன இனம், இன்ன மதம் என்ற சின்ன வட்டத்தை விட்டு, 'எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் இந்நாட்டு மன்னர் — ஆம், எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற எல்லையற்ற பெருவெளிக்கு வந்துவிட வேண்டும். அது எப்படி?

எந்தச் ச ம ய க் குரவரானாலும், எந்தப் பொது விழாவானாலும் அதன் அடிப்படைக்குப் போய்விட்டால் நம்மிடையே விருப்பு வெறுப்புக்கு இடமில்லாமல் போய்விடும். மனித சமுதாயத்துக்கு நலம் பயக்காத கொள்கையுடைய எந்தச் சமயமாகட்டும்; விழாவாகட்டும்; தலைமையாகட்டும் — நீடித்து நிலைக்க மாட்டா. கொஞ்சம் கொஞ்சமாய்த் தேய்ந்து மறைந்து காணாமற் போய்விடும்.

எனவே, நெடுங்காலமாய்த் தொடர்ந்து கொண்டாடப்பெறும் இந்தக் கிறிஸ்துமஸ் திருவிழா நாயகனின் சிறப்பை — அவன் மனித இனத்துக்குச் சுட்டிக்காட்டிய செய்தியை இந்த நாளில் நினைவு கூர்வோமாக.

அமரகவி பாரதியார் ரத்தினச் சுருக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்:

'ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்;
எழுந்துயிர்த்தனன் நாள்ஒரு மூன்றில்,
நேசமா மரியா மக்தலேநா
நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்.

தேசத்தீர் இதன் உட்பொருள் கேளீர்:
தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாசமின்றி நமை நித்தங் காப்பார்;
நம்அ கந்தையை நாம்கொன்று விட்டால்.

தத்துவம் மொத்தத்தையும் எத்தனை அழகாகத் திரட்டித் தந்து விட்டார் நம் கவிஞர்! எல்லா அழிவுக்கும் அடிப்படைக் காரணம் அகந்தை தான்! அதை மட்டும் கொன்று விடுங்கள்; நீங்கள் என்றும் நின்று நிலைத்திருப்பீர்கள். அதைச் சொல்லத்தான் ஏசு அவதரித்தார். — பாரதி சொல்கிறார்.

அதன்படி அகந்தையொழிந்த அன்பு வழி நின்று உலகம் மேம்பட வாழ்வோமாக!

அன்பு அண்ணன்,

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
— பாரதியார்.

டிசம்பர் மாதம். குளிர்தான். ஆனாலும் கிறித்துவர்களின் பண்டிகையான கிறிஸ்துமஸ் பண்டிகை. அந்த 'சாண்டா கிளாஸ்' என்ற கிறிஸ்துமஸ் தாத்தா எவ்வளவு பேர்களுக்கு மகிழ்ச்சி தருகிறார். பரிசு தருகிறார்?

''நீங்களும் கிறிஸ்துமஸ் தாத்தாவாக வந்தால் யாருக்கு என்ன பரிசு கொடுப்பீர்கள்?'' என்று கிறிஸ்துமஸ் விழா கொண்டாடும் பள்ளி மாணவ, மாணவியர் ஆறு பேரைக் கேட்ட போது —

* ரிப் ராபின்



நான் கிறிஸ்துமஸ்

ஜெயந்தி சற்குணர்: தினமும் பள்ளிக்குப் பஸ்ஸில் போகிறேன். ஒரு நாள் அப்படிப்போய்க்கொண்டிருக்கும் போது பஸ் நின்று விட்டது. காரணம், கண்டக்டர் டிக்கெட் கொடுப்பதற்குத்தான். ஜன்னல் ஓரத்தில் அமர்ந்து கையில் பிரித்த புத்தகம் இருந்தாலும், கண்கள் சாலையையே பார்த்துக் கொண்டிருந்தன. அப்போதுதான் அந்த நெகிழ்ச்சியான காட்சி கண்ணில் பட்டது. வயதான பாட்டியொருத்தி இடக்கையில் சின்னத் துணி மூட்டையுடனும், வலது கையில் வளைந்த தடியுடனும் சாலையைக் கடப்பதற்கு முயற்சி செய்கிறார். அப்போது ஒரு பள்ளிச் சிறுவன் — சுமார் 10 வயது — அக்கிழவியிடம்மெதுவானகுரலில் பேசுகிறான். பாட்டி எதிர் நடை பாதையைக் காட்டுகிறார். அச்சிறுவன், அப்பாட்டியை ஆதரவுடன் பிடித்து, மிகக் கவனமாகச் சாலையைக் கடந்து, எதிர் நடை பாதைக்கு அழைத்துச் செல்கிறான். பாட்டி, முகத்தில் மலர்ச்சி. பாசத்துடன் அச்சிறுவனின் தலையில் கை வைத்து ஆசீர்வாதம் செய்கிறாள். பாட்டி ஏதோ தர முயல சிறுவன் சிரிப்புடன் மறுத்து விடுகிறான். அந்தக் காட்சி என் நினைவை விட்டு அகலவே இல்லை.



* ஜெயந்தி சற்குணர்

என் மனத்தில் நெகிழ்ச்சி ஏற்படுத்திய நிகழ்ச்சி இது. நான் கிறிஸ்துமஸ் தாத்தாவாக இருந்தால் அச்சிறுவனுக்கு ஒரு பரிசு தருவேன். அது அவனுக்கேற்ற

* எஸ்தர் ஜார்ஜியானா



காலையிலே தமிழ் படிக்கிறேன். எப்படியோ இரண்டு பேரும் பரீட்சையிலே நல்லா மார்க் வாங்கணும்.''

பொட்டில் அடித்த மாதிரி இருந்தது உரையாடல். எவ்வளவோ மாணவர்கள், புத்தகங்களை வீசியெறிவதையும், படிக்காமல் வருவதையும் பார்த்த எனக்கு, மேற்கண்ட சம்பவத்தில் பாடப் புத்தகத்தைக் கடனாகக் கொடுக்க முன்வந்த சிறுமி மீது அலாதிப் பரிவு உண்டாயிற்று.

கிறிஸ்துமஸ் தாத்தாவாக நான் இருந்தால், கடனாகத் தரும் சிறுமிக்கு ஒரு நல்ல அகராதியை வாங்கித்தருவேன். நிறையச் சொற்களைத் தானும் கற்றுக் கொண்டு, மற்றவருக்கும் வழிகாட்டுவாள்,

தாத்தாவாக வந்தால்...

காலணிகளாக இருக்க வேண்டும். நண்பகல் வெய்யிலில் தார் ரோடில் காலணிகள் இல்லாமல் இருந்தும் அவன் பொறுமையாகச் செய்த தொண்டு என்னை நெகிழ்த்தியதே காரணம்.

ஜிம் ராபின்: சாதாரணமாகவே எனக்கு நல்லாப் படிக்கிறவங்களைப் பிடிக்கும். லைப்ரரிக்குப் போய்விட்டுவருபவர்களைப்பெருமையாகப் பார்ப்பேன். என் வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் உள்ள கடைக்கு நான் சோப் வாங்கப் போன போது, அருகே இருந்த சின்ன சைக்கிள் ஷாப் கடையில் கேட்ட உரையாடல் என்னை ஈர்த்தது.

''டேய், சுகுமார், நீயும் பரீட்சைக்குப் படிக்கணும்; நானும் படிக்கணும். சரி, என் புத்தகத்தை உனக்கு இப்போ தர்றேன். ராத்திரி நீ தமிழ் படிச்சுடு. காலையிலே நானே உனக்கு மற்ற சப்ஜெக்ட்ஸ் கொண்டாந்து தர்றேன். நான்

ஒரு மெழுகுவர்த்தி இன்னொரு மெழுகுவர்த்தியை ஏற்றுவது போல.

எஸ்தர் ஜார்ஜியானா: அரட்டை



* ஜோசப் ராஜா சாமுவேல்

* ஜானி ஜெர்லின்



அடித்துக் கொண்டு, என் சினேகிதிகளுடன் பள்ளிக்குப் போகும் போது, ரோடில் பல காட்சிகள் தென்பட்டாலும், என்னால் மறக்க முடியாத நிகழ்ச்சி ஒன்று உண்டு. சில வீடுகளில் காம்பவுண்டு சுவர் இல்லாமல் முள் வேலிகள் போட்டிருக்கிறார்கள். ஒரு நாள், ஒரு சிறுவனின் 'ஸ்... ஸ்... அப்பா...' என்ற குரலும், 'மே... மே...' என்ற ஆட்டுக் குட்டியின் குரலும் என் கவனத்தை இழுத்தன. சற்றுத் திரும்பிப் பார்த்தால், சின்ன அழகான ஆட்டுக் குட்டி ஒன்று, முள் வேலியின் சதுரம் ஒன்றில் எக்குத் தப்பாகத் தலையை விட்டு, உள்ளே பாதி போய் விட்டது. இரு கால்கள் உள்ளே, பின் கால்கள் வெளியே. முட்கள் குத்தி, வலியால் குரல் கொடுத்திருக்கிறது. இந்த எட்டு வயதுச் சிறுவன், தன் வாட்டர் பாட்டில், ஸ்கூல் பையை வைத்துவிட்டு, கஷ்டப்பட்டு, 'ப்பா... ப்பா...' என்று அதை வெளியே இழுக்க முயற்சி செய்ததில், இவனுடைய சட்டை முள்வேலியில் சிக்கி டர்ரென்று கிழிபட்டு விட்டது. அதை ஒரு நிமிடம் பார்த்துவிட்டு, கீறலால் ஏற்பட்ட எரிச்சல் இருந்தாலும், ஆட்டுக்குட்டியை வெளியே எடுத்து விட்டான். அவன் முகத்தில்தான் எத்தனை பெருமை!

நான் அவனுக்கு மூன்று செட் சட்டைகள் தருவேன் — கிறிஸ்துமஸ் தாத்தா பரிசாக!

<u>ஜோசப் ராஜா சாமுவேல்:</u> கிறிஸ்துமஸ் தாத்தா வேடம் போட எனக்கு ஆசைதான். ஆனால் நான் போதுமான அளவு குண்டாக இல்லையே! சரி, விஷயத்துக்கு வருகிறேன்.

மழை நாட்களில் அதிகம் விளையாட விட மாட்டாங்க. ஜுரம் வந்துடும்னு பயம் காட்டுவாங்க. அப்படி ஒரு நாள் — வெளியே மழை கொட்டிக் கொண்டிருக்கிற சமயம், ஜன்னல் கம்பிகளிலே முகத்தை அழுத்திக்கிட்டு, நான் வேடிக்கை பார்த்துக்கிட்டிருந்தேன்.

அம்... மாடி... ஓர் எட்டு ஒன்பது வயசுப் பெண் அவள் இடுப்பில் ஒன்றரை வயசுக் குழந்தை. நல்ல மழை கொட்டுது. அந்தப் பெரிய பெண் தலையிலே பிளாஸ்டிக் பேப்பர். அதுவும் கிழிசல். இருந்தாலும், ஒரு கையால் அந்தப் பேப்பரை ஒரு மாதிரியாய்ப் பிடிச்சுக்கிட்டு, கால்களைத் தண்ணிரில் சளசளத்துக் கொண்டே அக்குழந்தையை — தம்பியாக இருக்கலாம் — எடுத்துப் போன காட்சி மனசிலே ரெகார்ட் ஆயிடுச்சி. சின்ன பாப்பாவும் ஸ்மைலிங். ஆனால் பாவம், அந்தக் கிழிசலான பிளாஸ்டிக் பேப்பர் காற்றிலே பறக்குது.

கிறிஸ்துமஸ் தாத்தாவாக நான் வேடம் போட்டால், அருமையான ப்ரஸ் பட்டன் குடை ஒன்றை



அச்சிறுமிக்குப் பரிசாகத் தருவேன்.

ஜானி ஹெர்ஸிஸ்: பிரார்த்தனை செய்யும் உதடுகளை விட, பணி புரியும் கைகள் மேலானவை என்று பெரியவங்க சொல்வாங்க. அதை நான் கண் முன்னாடியே பார்த்தேன். என் உறவினரின் நண்பர் ஒருவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அட்மிட் ஆகியிருந்தார். அப்போது ஒரு நாள் மாலை, நான் என் உறவினருடன் சென்றிருந்தேன். அங்கு ஒரு வார்டில் நான் பார்த்த காட்சி என்னை அசத்தி விட்டது. சுமார் 12 வயதுச் சிறுவன் ஒருவன் ஒரு வயோதிகரின் கட்டில் அருகே அமர்ந்திருந்தான். சரி, பேரனாக இருக்கும் என்று நினைத்தேன். விசாரித்ததில் அப்படியில்லை. அச்சிறுவன் தினமும் வருவானாம். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறவர்களிடம் ஆறுதலாகப் பேசி, அவர்கள் சீக்கிரம் குணம் அடையப் பிரார்த்தனை செய்வானாம்! ஓ காட்! இதோ, இவன்தானே லட்சியச் சிறுவன்.

இத்தகையசிறுவனுக்காக,நான் கிறிஸ்துமஸ் தாத்தாவாக இருந்தால் என்ன பரிசு கொடுப்பேன், தெரியுமா?

பெரிய பிளாஸ்க், பழங்கள் எடுத்துச் செல்ல ஓர் அழகான தோல்பை.

அவன் தொண்டு மேன்மேலும் வளருமே?

லியோ ரொஸாரியோ: பொதுவாகவே என் நண்பர்களைப் பற்றி நன்கு மதிப்பீடு செய்து வைத்திருப்பவன் நான்.



* லியோ ரொஸாரியோ

பக்கத்துத் தெருவில் ஒரு பையனைப் பற்றி நான் விசாரிக்கச் சென்றேன். அதுவும் விடியற்காலை. அதாவது ஆறு மணியிருக்கும். விடியற்காலை தூக்கம் ப்ளம் கேக் மாதிரி. அதை விட்டு விட்டு, அந்தப் பையன் எங்கே போகிறான்? எனக்கு ஆவல். ஒரு வேளை ஓட்டப் பயிற்சி, உடற்பயிற்சி செய்கிறானோ?

அவன் வீடு சென்று கேட்டதில், அதிர்ச்சி. அவன் சேரி வாழ் மக்களுக்குச் சேவை செய்யப் போகிறான்! என் மனசு நெகிழ்ந்து விட்டது.

காலை வேளைகளில் குடிசைப் பகுதிகளுக்குச் சென்று தன்னால் ஆன சேவைகளைச் செய்து விட்டு... பிறகு வீடு வந்து, சாப்பிட்டு... பள்ளிக்குச் செல்கிறான்! அதுவும், பள்ளி சற்றுத் தொலைவில் இருக்கிறது. நடந்து தான் போகிறான்.

நான் கிறிஸ்துமஸ் தாத்தாவாக இருந்தால், நிச்சயம் அந்தப் பையனுக்கு ஒரு சைக்கிள் பரிசு கொடுப்பேன்.


பேட்டி: 'பிரகலாதன்.'

புகைப்படங்கள்: பிரபுசங்கர்.

"நாம் செய்த தவறுக்கு 'சாரி' சொன்னால், நம்மைத் திட்டவோ, அடிக்கவோ மாட்டாங்க இல்லையா, மம்மி?"

"ஆமா! எதுக்கு கேட்கிறே?"

"சாரி மம்மி...' பந்து ஆடும் போது அது பட்டு நம்ப ட்டீ. வி. கண்ணாடி உடைஞ்சுப் போச்சு!"



மறைந்த இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு சோவியத் நாட்டிற்கு ஒருமுறை சென்றிருந்தார். இந்தியக் குழந்தைகளுக்காக சோவியத் குழந்தைகள் நேருவிடம் தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

"இந்தியக் குழந்தைகளின் சார்பாக சோவியத் குழந்தைகளுக்கு நான் ஏதாவது செய்ய வேண்டிய தருணம் வந்து விட்டது." என்று அப்போதுதான் சொன்னார் நேருஜி. அதன்படிதான் இரண்டு யானைகளைப் பரிசாக அளிப்பது என்று நேரு முடிவெடுத்தார்.

'இந்த இரண்டு யானைகளும் பெரியவை. ஆனாலும் இவை குழந்தைகள்தாம். ஏனெனில் இவற்றுக்கு வயதே ஓராண்டுதான். இந்த யானைகள் இந்தியாவின் தூதுவர்களாக சோவியத் நாட்டிற்குச் செல்லட்டும். இந்தியக் குழந்தைகளின் நல்வாழ்த்துக்களை சோவியத் குழந்தைகளுக்கு அளிக்கட்டும்,' என்று நேரு எழுதினார்.

இந்த யானைகளின் பயணத்தின் போது நடந்த சுவாரஸ்யமான சம்பவங்களைக் கதை கதையாய்ச் சொல்கிறது மாஸ்கோ வானொலி நிலையம்.

ஸ்டாவரப்பல் என்ற கப்பலின் கேப்டன் தன்னுடைய பதிவேட்டில் இப்படி எழுதினார்:

1955 ஆம் ஆண்டு ஆகஸ்டு 5 ஆம் தேதி வெள்ளிக்கிழமை ரவி, சசி என்ற இரண்டு யானைகளைக் கப்பலில் ஏற்றினார்கள்.

இந்த இரண்டு யானைகளையும் உத்தேஸா துறைமுகத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். இந்த இரண்டு யானைகளைக் கப்பலில் ஏற்றுவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

முதலில் ஒரு பெரிய பாரந்தூக்கியை வைத்து ரவி என்ற யானையை அடைத்திருந்த கூட்டை ஒரு வழியாகக் கப்பலில் ஏற்றினோம். ரவி சிறிதும் பயப்படவேயில்லை. அந்தப் பெரிய கூண்டு ஒரு வழியாகக் கப்பல் தளத்தை அடைந்ததும் ரவி முன்னங் கால்களையும் பின்னங்கால்களையும் நன்கு ஊன்றி அழகாக நின்று கொண்டிருந்தது. நாம் எப்படிக் கப்பலில் ஏறினோம் என்பதே புரியாதது போல் அது சுற்று முற்றும் பார்த்துக் கொண்டிருந்தது.



நேருஜி அனுப்பிய குட்டி யானைகள்

இரா. கிருஷ்ணமூர்த்தி

அடுத்தபடியாக, சசி யானையை ஏற்ற வேண்டிய தருணம் வந்தது. அந்தச் சசியோ பேசாமல் ஓரிடத்தில் நிற்பதற்குப் பதிலாக அங்குமிங்கும் கூண்டிற்குள் அலைந்து ஒரேயடியாக பிளிறத் தொடங்கியது. அது என் பயப்பட்டது என்பதைப் பற்றி யாருக்குமே ஒன்றும் புரியவில்லை. ஒரு வேளை, கூண்டு உடைந்து விட்டால் என்ன செய்வது என்று நினைத்ததோ என்னவோ? சற்றுப் பொறுத்து சசி யானை ஒரு வழியாக நிதானத்திற்கு வந்து அமைதியாகியது. சிறிது நேரத்திற்குப் பின்பு அதைக் கப்பலில் ஏற்றினோம்.

அங்கே அது ரவி யானையைக் கண்டது. உடனே அதற்கு ஒரே சந்தோஷம். ரவி யானையைக் காணாமல்தான் அது அப்படி பிளிறி ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறது என்று பிறகுதான் தெரிந்தது.

ஒரு வழியாக இரண்டும் அமைதியாகத் தம்முடைய பயணத்தைத் துவக்கின. இந்த இரண்டு யானைகள் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தன.

யாராவது எப்போதும் அந்த யானைகளின் பக்கத்தில் இருந்து கொண்டேயிருந்தார்கள். குறிப்பாக, அக் கப்பலின் முக்கிய மாலுமி எப்போதும் அந்த யானைகளின் பக்கத்திலேயே இருந்தார்.

பகலாயிருந்தாலும் சரி, இரவாயிருந்தாலும் சரி எந்த நேரத்திலும், எப்போதும் அவர் அந்த யானைகளின் பக்கத்திலேயே நின்று பார்த்துக் கொண்டிருந்தார். அது மற்றவர்களிடம் நன்றாகப் பழகியது.

அரபிக்கடலை விட்டு இந்துமகா சமுத்திரத்திற்கு வரும் இடத்தில் ஏடன் வளைகுடா அருகே திமரென்று ஒரு பெரும் புயல் எழுந்தது.

பெரும் அலைகள் மாறி மாறிக் கப்பல் மீது மோதின.

எல்லோரும் பரபரப்படைந்தார்கள்.

இந்தக் குழப்பத்தில் சசி யானை இருந்த மரக்கூண்டில் சிறிது முறிவு ஏற்பட்டு விட்டது. உடனே கேப்டன் கத்தினார்.

"அந்த உடைந்த இடத்தை எல்லோரும் சரிசெய்யுங்கள் சீக்கிரம். யானைகளுக்கு ஏதாவது ஆகி விடப் போகிறது. எல்லாம் பத்திரமாகப்

பார்த்துக் கொள்ளுங்கள்.'

உடனே எல்லா மாலுமிகளும் அந்தப் பணியில் ஈடுபட்டார்கள். விரைவாக அந்த மரக்கூண்டைச் சரி செய்து தண்ணீர் அலைகள் யானைகளின் மீது படாமலிருப்பதற்காகப் பெரிய பெரிய தார் பாய்களைக் கொண்டு கூண்டுகளை மூடினார்கள். ஒரு வழியாக இரண்டு நாட்கள் கழித்து புயலும் அந்தப் பயங்கர அலைகளும் அடங்கின.

மேலும் ஐந்து நாட்கள் அடங்கின.

ஸ்டாவரப்பல் என்ற அந்தக் கப்பல் செங்கடல் வழியாகச் சென்று கொண்டிருந்தது.

கடல் அமைதியாக இருந்தது. காற்றே கிடையாது. மழையும் இல்லை. குடிநீரோ மேலும் மேலும் குறைந்து கொண்டே வந்தது.

கேப்டன் கட்டளையிட்டார். குடிப்பதற்கு மட்டுமே தண்ணீரைப் பயன் படுத்த வேண்டும் என்று.

பொதுவாக, யானைகளுக்குக் குளிப்பது என்றால் மிகவும் விருப்பம். என்ன செய்வதென்றாலும் குடிப்பதற்கு மட்டுமே தண்ணீர் கொடுப்பதென்று முடிவு செய்யப் பட்டது.

ஒரு முறை ரவியானைக்கு ஒரு பெரிய பக்கெட் நிறையத் தண்ணீரைக் கொண்டு வந்து வைத்தார்கள். அது தன்னுடைய துதிக்கையால் தண்ணீரை எடுத்து முதுகின் மீது அள்ளி அள்ளி வீசிக் கொண்டு குளித்தது. சசி யானையும் அதே போல் செய்தது.

பின்னர் அந்தவாளியைக் கவிழ்த்து விட்டுத் துதிக்கையை நீட்டி இன்னும் தண்ணீர் வேண்டும் என்று இரண்டும் கேட்டன.

வேறு வழியில்லாமல் அந்த யானைகளுக்கென்று தண்ணீர்



கொடுத்தார்கள்.

சாதாரணமாக, கப்பலில் மதிய உணவிற்குப் பின்பு எல்லோரும் ஓய் வெடுப்பார்கள். நிசப்தமாக இருக் கும்.

ஒரு முறை சசி யானை தூங்கிக் கொண்டிருந்தது.

அப்போது திடீரென்று பிளிறியது. என்னவென்று பார்த்தால் ரவி யானை இச்தச் சசி யானையின் வாலைப் பிடித்துத் திருகிக் கொண் டிருந்தது. இப்படித்தான் சில சமயங் களில் மதிய உணவிற்குப் பின்பு கிடைக்கும் ஓய்வு நேரத்தையும் அவை விளையாடிக் கொண்டே கழிந்தன.

இப்படியாகப் பதினாறு நாட்கள் கடலில் பயணம் செய்த பின்பு ஒரு வழியாக உத்தேஸா நகரத்திற்கு வந்து சேர்ந்தன அந்த யானைகள்.


உத்தேஸா நகரத்திலுள்ள விலங் கியல் பூங்காவை அந்த யானைகள் அடைந்தன.

ரவி, சசி யானைகளுக்கு அங்கு பெரும் வரவேற்பு காத்திருந்தது. சோவியத் குழந்தைகளுக்கு மன மெல்லாம் மகிழ்ச்சி.

அதற்கு முன்பு அந்த உத்தேஸா நகர விலங்கியல் பூங்காவிற்கு அவ் வளவு கூட்டம் வந்ததேயில்லை. எல் லோரும் யானைகளைப் பார்க்க வந்து கொண்டே இருந்தார்கள்.

ரவியும், சசியும் விளையாடுவதை, சாப்பிடுவதை, பேசாமல் நின்று கொண்டிருப்பதைப் பார்ப்பதற்காக






சோவியத் குழந்தைகள் நின்று ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

சோவியத் குழந்தைகளுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. எல்லோருக்கும் ஒரே உற்சாகம்.

ரவியும், சசியும் தன்னுடைய துதிக்கையைத் தூக்கித் தம்முடைய மகிழ்ச்சியையும் தெரிவித்தன. இந்திய யானைகள் ரவியும், சசியும் எல்லோருக்கும் நல்வாழ்த்துக் கூறியது போலிருந்தது.

இச் சம்பவம் நடந்து 34 வருடங் காளகின்றன. ரவியும், சசியும் நன்கு வளர்ந்து பெரிய யானைகள் ஆகி விட்டன. இன்னும் உத்தேஸா நகரில் அந்த விலங்கியல் பூங்காவில் நன்றாக இருக்கின்றன. இன்றும் கூட சோவியத் குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமான யானைகளாக எல்லோரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்து விடுகின்றனவாம் அவை.

மாஸ்கோ வானொலி நிலையம் ரசிக்கக் கூடிய இந்தச் சம்பவத்தைச் சிறுவர் நிகழ்ச்சியில் 15.1.1989 ஞாயிற்றுக் கிழமை மாலை மணி 6.10 க்கு ஒலிபரப்பியது.





நீங்களே செய்யும் எலெக்ட்ரானிக் கிட்!

ஒரே 'சிப்' மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட பரிசோதனைகள்!

"சிப்-சாப்" நீங்களே செய்யும் எஜுகேஷனல் கிட் நூற்றுக்கும் மேற்பட்ட பட்டான பரிசோதனைகள் கொண்டது. வித்தையை விளையாட்டாய் கற்பிக்கவென்றே திட்டமிடப்பட்டது!

உங்கள் குழந்தை நாளைய உலகில் வெற்றியடைய வழிசெய்யுங்கள்!

எலெக்ட்ரானிக் யுகத்தின் சவால்களை சமாளிக்கத் தகுதியான சாதனம் "சிப்-சாப்"!

அம்சங்கள்: பாட்டரியால் இயங்கக் கூடியது • பாதுகாப்பானது • எளிதில் எடுத்துச் செல்லக் கூடியது • ஸால்டரிங் இல்லை – கனெக்ஷனுக்கு "பேட்டென்டுடன்" கூடிய விசை • கையாள எளிது.

பரிசோதனைகள்: • மியூஸிகல் ஆர்கன்* ஷூட்டிங் விளையாட்டு • ஃபயர் அலாரம்* ஒயர்லெஸ் பீப்பர் * ஸிக்னல் டிரான்ஸ்மிட்டர்* லைட் ஆபரேட் அலாரம் இன்னும் பலப் பல.

ரூ. 300/- மட்டும் - வரிகள், அனுப்பும் செலவு தனி.

"எலக்ட்ரானிக்ஸ் எல்லோருக்கும்"

எஜுடெக்

33, சர்ச் தெரு, பெங்களூர்-560 001.
இந்தியா. போன்- 578801.

எனக்குத் தேவை "சிப்-சாப்", கிட் ஒன்றுக்கு ரூ. 350/- வரியும், அனுப்பும் செலவும் சேர்த்து. தயவு செய்து ....கிட்/கிட்கள் அனுப்பவும். இத்துடன் 'கிராஸ்' செய்யப்பட்ட டி.டி./ போஸ்டல் ஆர்டர் (ஒரு கிட் ரூ. 50/- என்ற கணக்கில்) முன்பணமாக அனுப்புகிறேன். மீதித்தொகையை வி.பி.பி. வந்து சேர்ந்தவுடன் அனுப்புவதாக உறுதியளிக்கிறேன்.

பெயர் ....

விலாசம் ....

பள்ளி ☐ கல்லூரி ☐

Climb ads/Chip-Chap/8901

பிறர் பொருள் எட்டி

பிறருடைய உடைமையோ உயிருள்ள பொருளோ நமக்கு எட்டிக் கனி போல் கசக்க வேண்டும். பிறர் பொருள் விரும்புதல் கூடாது இது தான் பிறவிப் பிணியை மாற்றும் மார்க்கமாகும்.

பிறருடைய பொருளைத் தற்காலிகமாகப் பயன் படுத்திக் கொண்டால் அதுவும் பிறவியைத் தரும்.

இந்த உண்மையை அடியில் வரும் வரலாறு உணர்த்துகின்றது.

இராஜபுரம் என்ற நகரில், 'சங்கிலி' என்ற, பேருடைய ஒருவன் வாழ்ந்தான். அவன் செருப்புத் தைக்கும் குலத்தில் பிறந்தவன். செருப்புத் தைக்கும் தொழிலுடன் நகரில் பறையறையும் அரசுப் பணியையும் மேற்கொண்டிருந்தான். செல்வச் செழிப்புடன் இனிது வாழ்ந்தான்.

அவனுடைய வீட்டில் கட்டில் இருந்தது. தொட்டில் இல்லை. அதனால் மிகவும் வேதனையடைந்தான். பலப்பல தான தருமங்கள் செய்தான். சஷ்டி விரதம் பிரதோஷ விரதம் முதலிய விரதங்களையும் அனுஷ்டித்தான். அடிக்கடி தன் ஜாதகத்தைப் பார்த்து, தனக்கு மகப்பேறு கிடைக்க என்ன மார்க்கம் என்று விசாரிப்பான்.

ஒரு பெரியவர் அவனைப் பார்த்து, ''மூவாசையும் அற்ற முனிவர் ஒருவருடைய ஆசியினால் உனக்கு மகப் பேறு கிடைக்கும்,'' என்று கூறினார்.


அந்த உத்தமமான குணசீலன் பரம ஞானி எங்கே என்று ஆராய்ந்தான். அந்த நகருக்கு அருகில் உள்ள சோலையில் ஒரு முனிவர் உலாவிக் கொண்டிருந்தார். அவர் பற்றற்ற பரம ஞானி. யாரிடத்திலும் எந்தப் பொருளையும் விரும்பாதவர். பசி வந்த போது காயோ, கனியோ உண்பார். கால் போன வழியில் போவார். அவருடைய திருமுகத்தில் ஞானவொளி வீசும். அவருடைய கண்களில் கருணை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்.

சங்கிலி இவரைக் கண்டு இவருடைய ஆசியைப் பெற விரும்பினான். கொடிய வெய்யில். நிலம் அனல் போலச் சுடுகின்ற காலம். அந்த மகான் மணற் பரப்பில் கொதிக்கின்ற ஓர் ஆற்றைக் கட்க்க வேண்டி நடந்து சென்று கொண்டிருந்தார். சங்கிலி இரண்டே தோல்களால் தைத்த ஓர் அழகிய செருப்பைக் கொண்டு போய் அவருடைய திருவடிக்கு அருகில் வைத்தான்.

பற்றற்ற அப்பரமஞானி வெயிலின் கொடுமையைத் தாங்க மாட்டாதவராய் அந்தப் பாதரட்சையைக் காலில் மாட்டிக் கொண்டு ஆற்றைக் கடந்தார். கடந்தபின், உடையவன் உடமையை எடுத்துக் கொள்ளட்டும் என்று எண்ணி, செருப்பைக் கழற்றி விட்டுச் சென்றார்.

சங்கிலியோ நாம் இதனை மகானுக்குத் தந்து விட்டோம்; இனி அதனை எடுத்துக் கொள்வது முறையன்று என்று எண்ணி அந்தச் செருப்பை எடுக்காமல் தன் இல்லம் சேர்ந்தான்.

திருமுருக கிருபானந்தவாரியார்



சில காலத்துக்குப்பின் அந்த ஞானியின் ஆன்மா பிரிந்தது. இயமனுடைய பணியாளர்கள் அவரை பயபக்தியுடன் கொண்டுபோய் அறக்கடவுளுக்கு முன் நிறுத்தினார்கள்.

அறக்கடவுள் அவரை வணங்கினார். "தவசீலரே! தாங்கள் பற்றற்ற பரமஞானி. ஒருநாள் சங்கிலி என்பவன் தந்த செருப்பை ஏற்றுக் கொண்டீர். அதனால் தங்களுக்கும் மீண்டும் ஒரு பிறப்பு எடுக்கும் தன்மை யுண்டாகியுள்ளது. அந்தச் சங்கிலி மகப்பேறு குறித்து வருந்துகின்றான். ஆதலால் தாங்கள் அந்தச் சங்கிலிக்கே மகனாகப் பிறக்க வேண்டும்." என்றார்.

இதனைக் கேட்ட தவமுனிவர் தன் தலையில் கையால் மோதிக் கொண்டார். வெயிலின் கொடுமைக்காக சில நிமிஷம் அவன் தந்த செருப்பையணிந்து கொண்ட ஒரு செயலுக்காக ஒரு பிறப்பு எய்தியதே என்று எண்ணி வருந்தினார். "அறக் கடவுளே! நான் அவனுக்கு மகனாகப் பிறந்தால் பிரமஞானம் அகலாதிருக்க வரம் தாரும்." என்றார்.

"அப்படியே தாங்கள் பிறப்பெடுத்தாலும் பிரம நிஷ்டராக இருப்பீர்." என்று அறக்கடவுள் கூறினார்.

அவருடைய ஆன்மா சங்கிலியின் மனைவியின் கருவில் சென்று கருவிலிருந்து மகனாகப் பிறந்தது. பிறந்த குழந்தை அழவில்லை. அது பிரம ஞானத்துடன் விளங்கியது. தாய்ப்பால் பருகாது நிஷ்டானுபூதியுடன் திகழ்ந்தது.

இதனைக் கண்ட ஓரறிஞர், "சங்கிலி! யாரோ, ஒரு மகான் வந்து பிறந்திருக்கின்றார். இது தாய்ப்பால் அருந்தாமையால் பசும்பால் கொடு." என்றார்.

சங்கிலி ஒரு பசுவை நீராட்டி, பால் கறந்து அம் மகவுக்குப் பால்

ஊட்டினான். பாலைப் பருகி அவர் சதா நிஷ்டாநுபூதியில் இருந்து வந்தார். 'அம்மா! அப்பா,' என்று அழைப்பதில்லை. யாருடனும் பேசுவதில்லை. உலகுக்கு அப்பால்பட்டு விளங்கினார். இவ்வாறு 12 வயது நிரம்பினார்.

சங்கிலிக்குக் குழந்தை பிறந்ததே என்று மகிழ்ச்சியிருந்தும், மற்றக் குழந்தைகள் போல ஆடவும் பாடவும் இன்றி அம்மா அப்பா என்று அழைக்காமல் உலகை மறந்து இப்பிள்ளை இருக்கின்றதே என்று எண்ணி வருந்தினான்.

ஒருநாள் சங்கிலி தன் மனைவியைப் பார்த்து, "பெண்ணே! நமக்குக் குழந்தை பிறந்தும் பயன் இல்லாமல் இருக்கின்றது. இன்று நான் அரசு அலுவலருடன் அயலூர் போக வேண்டும். இன்று இரவு வீதியில் தமுக்கு அடிக்கும் பணி தடைப்படுகின்றது. மகன் இருந்தும் பயன் இல்லை," என்று கூறி வருந்தினான்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட அவர், 'இன்று இவனுக்காக நாம் தமுக்கு அடித்தால் செருப்புக் கடன் தீரும்; பிறவிப் பிணியும் தீரும்,' என்று எண்ணினார்.

பன்னிரண்டு ஆண்டுகளாக வாய் திறந்து பேசாத அம்மகான், "அப்பா! தாங்கள் வருந்த வேண்டாம். நான் இன்று இரவு சென்று அரசு வீதியில் தமுக்கடிப்பேன்," என்றார்.


இந்த மணி மொழியைக் கேட்ட சங்கிலி, ஆனந்த வெள்ளத்தில் அழுந்தினான். அப்பா என்ற குரல் அமுதம் போல் அவனுக்கு இனித்தது. 'ஆ! ஆ!!' என்று ஆடினான். தனப் புதையல் கிடைத்த தரித்திரனைப் போல் மகிழ்ந்தான். அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

"மகனே!" என்று அவரைத் தழுவிக் கொண்டு, "பெற்ற செல்வமே! உனக்குத் தமுக்கடிக்கத் தெரியுமா? நான்கு ராஜவீதிகளிலும் அடிக்க வேண்டும். வீதிகளில் நன்றாக உரத்த குரலில் கூவித் தமுக்கடிக்க வேண்டும்," என்றான்.

"அப்பா! தாங்கள் கவலைப்பட வேண்டாம். எல்லாம் இறையருளால் எனக்குத் தெரியும்," என்று கூறியருளினார்.

இரவு ஒன்பது மணிக்கு, சங்கிலி அரசு அதிகாரியுடன் அயலூர் சென்றான். இரவு பத்து மணிக்கு அந்தப் பரமஞானி தமுக்கைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு," அம்மா! நான் தமுக்கடிக்கப் போகின்றேன்," எனக் கூறி விட்டு நகரத்திற்குள் சென்று கிழக்குராஜ வீதியில் நின்றார்.

அந்த நகரத்தை அறநெறி வழுவாது அரசு புரிகின்ற மன்னன் மிகவுயர்ந்த பக்குவ ஆன்மா! ஞானதாகம் உள்ளவன். 'குருநாதர் என்று கிடைப்பாரோ? பிறவிப் பிணி என்று தீருமோ?' என்று விநாடிக்கு விநாடி



துடித்துக் கொண்டிருப்பவன். அவன் அரண்மனையின் மேல்மாடியில் இருந்தான்.

"மகாஜனங்களே! நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். நமக்குள் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சர்யம் என்று ஆறுபகைவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் நமது உடம்புக்குள் இருந்து ஞானம் என்ற ரத்தினத்தை அபகரித்துக் கொள்ளுவார்கள். ஆதலால் எச்சரிக்கை எச்சரிக்கை! விழிப்பாக இருங்கள்," என்று கூறித் தமுக்கடித்தார். அரண்மனை மேல் மாடியில் இருந்து கேட்ட மன்னன் வியப்பு அடைந்தான். 'இந்த வேதாந்த வாக்கியத்தைக் கூறி, தமுக்கு அடிக்கின்ற உத்தம ஞானி யாரோ?' என்று எண்ணித் தென்புறமாக வந்து நின்றான்.



தென்மாட வீதியில் வந்து நின்ற தபோதனர், "மகாஜனங்களே! தூங்காதீர்கள், பிறப்பதும் துன்பம், கிழப்பருவத்திலும் துக்கம், மரணமடைவதும் துன்பம் மாறி மாறி துக்கந்தான். சம்சாரமாகிய கடலில் வீழ்ந்து துயரமடைகின்றோம். அதலால் நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். விழித்துக் கொள்ளுங்கள். அஞ்ஞான இருளில் தூங்காதீர்கள்!"

இதனை அரண்மனைமீது இருந்து கேட்ட மன்னன் பரவசம் அடைந்தான். ஆனந்தக் கண்ணீர் வடித்தான். இனி அந்தக் குருமகான் என்ன உபதேசிப்பாரோ என்று எண்ணி மேற்குப் புறம் வந்து நின்றான்.

தபோதனர் மேற்கு ராஜவீதிக்கு வந்தார்.

"மாயையாகிய இருளில் தூங்கி மோசம் போகும் மகாஜனங்களே! நீங்கள் ஆசையாகிய கயிற்றால் கட்டுண்டு கிடக்கின்றீர்கள். பலப்பல எண்ணங்களை எண்ணி எண்ணி அவமே அழிகின்றீர்கள். உங்கள் ஆயுள் வீணே அழிகின்றது. நீங்களும் அவமே அழிகின்றீர்கள். ஆகையால் எச்சரிக்கையாக இருங்கள் விழித்துக் கொள்ளுங்கள்."
— இந்த உத்தம உபதேச மொழிகளைக் கேட்ட மன்னன் தெளிவு பெற்று முக்தி நலம்பெற வேண்டும் என்ற அதிதீவிர நிலை அடைந்தான்.

தவமுனிவர் வடக்கு ராஜவீதியில் நின்று, "நகரத்தில் வாழும் நன்மக்களே! தாயாரும் ஒரு காலத்தில் மாண்டு போவாள்: தந்தையும் மாண்டு போவான்: உறவினரும், உடன் பிறந்தோர்களும் மாண்டு ஒழிவார்கள். செல்வம் அழிந்து போகும். நாம் அருமையாகப் புதுக்கிய வீடும் அழிந்து போகும்; எல்லாம் நிலையற்ற பொருள்கள். இறைவன் ஒருவன் தான் என்றைக்கும் உள்ள பொருள். அப்பரம் பொருளை நாடி உய்வு பெறுவீர்கள்."

மன்னன் இந்த அரிய உபதேசத்தைக் கேட்டும் உள்ளம் உருகினான்.

'இன்னும் இந்த உத்தமர் என்ன உபதேசிப்பாரோ?' என்று எண்ணி ஏங்கினான்.

தவமுனிவர் நான்கு ராஜவீதிகளிலும் தமுக்கடித்து விட்டு வீட்டையடைந்து நிஷ்டையில் அமர்ந்து விட்டார். மன்னன் அவருடைய உபதேச மொழிகளையே எண்ணிக் கொண்டிருந்தான்.

பொழுது விடிந்தது. சங்கிலி அவசரமாகத் திரும்பி வீட்டை அடைந்தான். தன் மகன் தண்டோரா ஒழுங்காக அடித்தானோ இல்லையோ என்று எண்ணிக் குழம்பினான். "என் அருமை மகனே! இரவு தண்டோர்ரா அடித்தாயா?" என்று வினாவினான்.

அவர், "அப்பா! நீங்கள் ஏன் கவலைப் படுகின்றீர்கள்? நான் ஒழுங்காகத்தான் தண்டோரா போட்டேன்," என்றார்.

சங்கிலி அரண்மனை சென்று அரசனை வணங்கினான்.

அரசன், "சங்கிலி! நேற்று இரவு தண்டோரா அடித்தது யார்?" என்று கேட்டார்.

சங்கிலி, "அரசே, அடியேன்தான் அடித்தேன். குற்றம் இருந்தால் மன்னியுங்கள். அபராதம் கட்ட வேண்டும் என்றாலும் கட்டிவிடுகின்றேன்," என்றான்.

அரசன், "சங்கிலி! குற்றம் ஒன்றும் இல்லை. பொய் சொல்லாதே. தண்டோரா நீபோடவில்லை வேறு ஒரு மகான் தமுக்கடித்தார். அவரை நான் வணங்கி வழிபட வேண்டும். அவர் எங்கிருக்கிறார் காட்டு," என்றான்.

சங்கிலி, "மன்னர் பெருமானே, தண்டோரா போட்டது அடியேனுடைய தவப்புதல்வன். அவன் என் மகன் என்று பேர்தான்; ஆனால் அவன் பரமஞானி. சதா நிஷ்டையிலேயே இருப்பான்," என்றான்.

அரசன் பல்லக்கை அனுப்பி அவரை மேள தாளத்துடன் அழைத்தான். அவருடைய பாத கமலங்களில் வீழ்ந்து வணங்கினான். "குருநாதா! நேற்று இரவு தாங்கள் தமுக்கடித்து என்னை வாழவைத்தீர்கள். தாங்கள் இவனுக்கு மகனாகப் பிறந்த காரணம்யாதோ?" என்று கேட்டான்.

"அன்பனே! முற்பிறப்பில் பற்றற்ற பரமயோகியாக இருந்தேன். சுடுகின்ற மணல் நிறைந்த ஆற்றைக் கடக்கும் பொருட்டு இந்தச் சங்கிலி தந்த செருப்பைத் தரித்துக் கொண்டு ஆற்றைக் கடந்தேன். செருப்பையும் அங்கேயே ஆற்றங் கரையிலே விட்டுச் சென்றேன். அந்தச் செருப்புக் கடனுக்கு, மகனாகப் பிறந்தேன். நேற்று இரவு தமுக்கு அடித்ததனால் செருப்புக் கடன் தீர்ந்து விட்டது." என்றார்.

அரசன் அவரிடம் உபதேசம் பெற்றுக்கொண்டான். சுவர்க்கத்திலிருந்து விமானம் வந்தது. சுபோதனரும் அரசனும் விமானத்தின் மீது ஏறி, சுவர்க்கம் அடைந்தார்கள்.

ஆதலால் பிறர் பொருளை எட்டியாக எண்ணிப் பிறவித்துயரைக் களைய வேண்டும்.







தேசம் உனது கையிலே!

நாளை படித்துக் கொள்வோம் என்று
நாட்களைத் தள்ளிப் போடாதே!
வேளை வந்தால் வேலைவரு மெனும்
வேதம் சொல்லித் திரியாதே!
காலம் ஓடுது; வாய்ப்புகள் உந்தன்
கதவைத் தட்டித் திறக்காது.
கோலக் கனவு, படுக்கை, சோம்பல்
கொண்டால் காலம் நிற்காது!


வேதனை என்றே வீட்டுக் குள்ளே
வெந்து கிடந்து நோகாதே!
சாதனை யாளர் கதைகள் படிப்பாய்
சறுக்கி விழுதல் ஆகாதே!
பாடப் புத்தகம் மட்டும் இன்று
பள்ளிக் கூடப் பையிலே
வாடக் கூடுமோ! நாளை இந்தத்
தேசம் உனது கையிலே!

இன்றே எதையும் முடிப்பேன் என்னும்
இதயம் வேண்டும் தம்பி!
நன்றே செய்க; நாடும் வீடும்
இருப்பது உன்னை நம்பி
விதியே என்று இரையைத் தேடா
எறும்பைக் கண்ட துண்டா?
புதிய விதிசெய் புறப்படு; நீதான்
புதுமை உலகச் சிற்பி!

— அடியார்க்குநல்லான்




எட்டுக்கு எட்டு
7
கதை: தேசபந்து
சித்திரம்: சிஜு...
ரஞ்சித் கொஞ்சம் அதிர்ந்தான்—
ஆமா. ஜமீன் பரம்பரைப் பிள்ளைங்களாய்க் காணாமப் போகுது... வினை விதைச்சவன் வினை அறுக்கறான்
மாரப்பன்! எங்க ப்ராப்ளம் உனக்குத் தெரியுமா?
கொஞ்சம் விவரமாய்ச் சொல்லுங்க!
செத்துப்போன ஜமீந்தார் ஜகவீரபாண்டியனைப் பத்தி நீங்க முழுசாத் தெரிஞ்சுக்கணும்!
ஜமீந்தார் ஜகவீரபாண்டியனின் கதையைச் சொன்னான் மாரப்பன்—
அந்த ஜகவீரபாண்டியனைப்போல ஒரு வெறிபிடிச்ச மிருகத்தை நீங்க பார்த்திருக்க முடியாது. நான் பார்த்தேன். ஒரு நாள்—
ஜமீந்தாரிடம் ஒரு சேவகன் வந்து—
எச்சக்கலை நாய்கள்! என்னையே எதிர்க்கிறானுங்களா? நான் யாருங்கறதைக் காட்டறேன்.
பண்ணையாளுங்களுக்கு கூலி போதலையாம். அறுவடைக்கு வரமாட்டாங்களாம்.


பண்ணையாட்கள் அந்தக் கிராமத்துக்கு வேலைக்குப் போயிருந்த சமயம், தன் அடியாட்களை விட்டு, அவர்கள் மனைவிகளையும் பிள்ளைகளையும் இழுத்து வரச் செய்து—
அட பாவிகளா ஆம்பிளைங்க இல்லாத நேரத்திலே இப்படி அக்ரமம் பண்றீங் களே! உங்களைக் கேட்க ஆளில்லையா?
அந்தப் பாவி ஜமீந்தார் அவங்களை யெல்லாம் ஒரு குடிசைக்குள் அடைத்து—
ஐயோ!
அம்மா!
ஐயோ!
காப்பாத்...
கடவுளே!
அந்தத் தீயிலே அத்தனை பேரும் செத்துட்டாங்க...
என்ன கொடுமை! அவன் மேலே ஆக்ஷன் எடுக் கலையா?
பணம் சார், பணம்! குற்றம் ருஜுவாகலை. தப்பிச்சுட்டான்.
பெண்டாட்டி பிள்ளைகளைப் பறிகொடுத்தவங்களுமா உட்டுட்டாங்க?
ஒரே ஒருத்தன் துணிஞ்சான் சார்.... திம்மையான்னு பேரு...


அந்த ஜமீந்தாரைக் கட்டிப்போட்டுட்டு அவன் எதிரிலேயே அவன் மனைவியைக் கொலை செஞ்சான்! ஆனா பிடி பட்டுட்டான்...
நீ சொல்றதைப் பார்த்தா ஜமீன் வாரிசுங்க காணாமப் போறதுக்கும் இந்தத் திம்மையாவுக்கும் சம்பந்தம் உண்டுங்கறாப்பல...
ஆமா சார்! அந்தத் திம்மையாவைப் போலீஸ்காரங்க இழுத்துட்டுப் போனப்ப ஜமீந்தாரைப் பார்த்து அவன் என்ன சொன்னான் தெரியுமா?...


திம்மையா_
அடே ஜமீந்தார்பயலே! நீ செத்தாலும் உன் வாரிசுங்களைப்பழி வாங்குவேன். என் புள்ளைங்க எரிஞ்சாப்ல உன் வாரிசுங்க எரியணும். நான் எரிப்பேண்டா!
அந்தத் திம்மையா இப்ப எங்கே இருக்கான்?
ஆயுள் தண்டனையிலே ஜெயிலுக்குப் போனவன் ரிலீஸாகி வந்தான். உடனே ஜமீந்தார் தங்கச்சியைக் கொலை பண்ணிட்டுத் திரும்பி ஆயுள் தண்டனை!
அதுக்கு முன்னாடி பெரியய்யா கிட்ட ரிப்போர்ட் பண்ணிடலாம் சார்!
நீங்க எதுக்கும் வேலூர் ஜெயில்லே கேட்டுப் பாருங்க...
தாங்க்யூ!
தொடரும்.

மன அழகே அழகு...

தீபாவளிக்கு மறுநாள். புத்தாடைகளில் பள்ளிக்கு வருகை தந்த மாணவியர் வண்ண மலர்களைப் போன்று கண்களைக் கவர்ந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் பிறரின் அழகழகான உடைகளால் ஈர்க்கப்பட்டு, அணிகளின் விலை, அவைகளைத் தேர்ந்தெடுத்த ஜவுளிக் கடை, தைத்த 'டெய்லரின்' முகவரி ஆகியவற்றைக் குறித்த விசாரணைகளில் ஆழ்ந்திருந்தனர்.

அந்தக் கான்வென்ட்டில் ஐந்தாவது வகுப்பில் படிக்கும் அத்தனை மாணவியரும், சுதாவின் முக அழகையும், அவள் அணிந்திருந்த 'பாலியெஸ்டர் மாக்ஸி'யையும் பார்த்துப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கையில் அதே வகுப்பில் படிக்கும் கௌரியும் விஜயாவும் ஒதுங்கி நின்றனர்.

''பார்த்தாயா விஜி! சுதா, கலா, போட்டிருக்கற உடைகள்தான் அத்தனை பேர் கண்லயும் படுது...'' என்றாள் கௌரி.

''கௌரி! அவங்கள்லாம் சீமாட்டிகள். பணத்திலே மிதக்கறவங்க... அவங்கள்லாம் பித்தளை போட்டிருந்தாலும் பார்க்கறவங்க அது தங்கம்னு நினைப்பாங்க. நாம தங்கத்திலே செயின் செய்து போட்டிருந்தாலும், 'கவரிங் நகையா?'ன்னு வாய் கூசாமல் கேட்பாங்க.'' என்றாள் விஜயா.

''என்னடீ விஜயா! ஏன் ரெண்டு பேரும் எட்டி நின்னு 'கிசுகிசு'க்கிறீங்க?'' என்று எவளோ கேட்டாள்.

அப்போது பிரார்த்தனைக்கு மணி அடித்து விடவே எல்லோரும் அசெம்பிளி ஹாலை நோக்கி ஓடினார்கள். பிரார்த்தனை முடிந்ததும், வகுப்புகளுக்கு வரிசை வரிசையாகச் சென்றனர்.

வகுப்புகள் தொடங்கின. பாடங்கள் நடந்தன. இடைவேளையில் மறுபடியும் மாணவிய்ர் வெளியேறினர். தீபாவளிப் பண்டிகைக்கு அவரவர் வீடுகளில் அவரவர்களுக்குக் கிட்டிய பலகார பட்சணங்களின் பட்டியலைக் கூறி, பிறர் வாயில் எச்சிலூறச் செய்து கொண்டிருந்தனர்.

கௌரியும் விஜயாவும் அவர்களின் உரையாடலில் துளியும் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிச் சென்ற போதிலும், ''உங்களையெல்லாம் யாரும கூப்பிட்டாங்க? தரித்திரங்க.. போங்களேண்டி தூர. நாங்க பேசறதை நீங்கள்லாம் கேட்டா எங்களுக்கில்ல வயித்தெ வலிக்கும்...'' என்று வெடுக்கென்று கூறினாள், சுதா.

''நீங்க பேசறதை நாங்க ஒண்ணும் காதை நீட்டிக்கிட்டு கேட்கலே.. எங்க வீட்லேயும் தீபாவளிக்கு எங்களுக் கேத்தாப்பலே பலகாரங்க செய்தாங்களே!'' என்று சொன்னாள் விஜயா.

''அவங்களை ஏண்டி வம்புக்கிழுக்கறே? பாவம், அவங்கள்லாம் ஏழைங்க. நம்ம வீடுகள்லே செய்யறதெல்லாம் அவங்களால செய்ய முடியுமா?'' என்று யாரோ ஒரு பணத்திமிர் பிடித்த மாணவி சொன்னாள்.

''எனக்கு அவங்களைப் பார்த்தாலே பித்திக்கிட்டு வருது...'' என்று எரிந்து விழுந்தாள் சுதா.

கௌரியும் விஜயாவும் அவர்களை விட்டு விலகிச் சென்றனர்.

மஞ்சாபுரம் துரை அழகர்சாமி

சுதாவும், அவளின் தோழியரும், கர்வம் பிடித்தவர்களாகவும் சுயநல முள்ளவர்களாகவும் இருக்கின்ற னரே என்று கௌரி மிகவும் வருந்தி னாளேயன்றி அவர்களை எதிர்த்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

அன்று பள்ளி மாணவியருக்கு அம்மைப்பால் குத்த சுகாதார இலா காவின் அலுவலர்கள் பள்ளிக்கு வந்திருந்தனர்.

வகுப்பு வாரியாக மாணவிகள் வந்து அம்மை குத்திக் கொண்டனர். ஐந்தாவது வகுப்பில் எல்லோரும் குத்திக் கொண்டனர். சுதா மட்டும் குத்திக் கொள்ளவில்லை. அவளைத் தலைமை ஆசிரியையிடம் அனுப்பி வைத்து விட்டார் வகுப்பாசிரியை.

''நீ மட்டும் ஏன் அம்மை குத்திக் கலே சுதா?'' என்று வினவினார் தலைமையாசிரியை.

''எங்கள் தெருவில் அம்மை குத்தி னாங்க... அப்பவே நான் குத்திக்கிட் டேன் மேடம்,'' என்று பொய் சொல்லி விட்டாள் சுதா.

''எங்கே கையைக் காட்டு... குத்தி யிருந்தா தழும்பு இருக்குமில்ல?'' என்றார் தலைமை ஆசிரியை.

கையைக் காட்டினாள் சுதா. குட்டு வெளிப்பட்டது.



''குத்தாம ஏன் பொய் சொல்றே? தழும்பையே காணோமே! குத்திக்கிட்டா அம்மை வராது சுதா...''

''நிஜமா குத்தினேன் மேடம். மூணு மாசத்துக்கு முன்னாடி குத்தினது... தழும்பு மறைஞ்சிட்டது,'' என்று மேலும் ஒரு பொய்யைக் கூறி விட்டாள் அவள்.

''சரி, சரி... நீ போகலாம்,'' என்று பணித்ததலைமைஆசிரியை,'அவளை விட்டு விடுங்கள்' என்று வகுப்பாசிரியைக்கு சைகையால் அறிவித்து விட்டார்.

என்றுமே சுதாவிடம் எதுவுமே பேசி அறியாத கௌரி அவளிடம் வலியச் சென்று, ''சுதா! அம்மை நோய் பொல்லாதது. நம்ம அழகையே பாழாக்கிடும். அம்மைப்பால் குத்திக்கிட்டா ஆறு மாசத்துக்கு அம்மை நோய் நம்மகிட்டவே வராது. அப்படி வந்தாலும் அவ்வளவா பாதிக்காது. நாங்க எல்லோருமே அம்மை குத்திக்கிட்டோம். நீ பார்த்தேல்ல? லேசா எறும்பு கடிச்ச மாதிரி இருந்திச்சு மொதல்ல. அப்புறம் வலிக்கவே இல்லை. நீயும் குத்திக்கோயேன். உன் நல்லதுக்குத்தான் சொல்றேன்,'' என்று அன்பொழுகக் கூறினாள்.

''உனக்கென்னடீ.. நான் குத்தறேன், குத்த மாட்டேன். உன் ஜோலியெப் பார்த்துக்கிட்டுப் போ...டீ!'' என்று கூறிச் சிடுசிடுத்தாள் சுதா.

கௌரியின் கண்கள் கலங்கின. ஏதும் நிகழாதது போன்று நகர்ந்து விட்டாள்.

அவ்வார இறுதியில் சுதா பள்ளிக்கு வரவில்லை. மறு வாரம் முழுவதும் அவள் பள்ளிக்கு வரவில்லை. அவளுக்கு அம்மை வார்த்திருப்பதாக மாணவிகள் பேசிக் கொண்டனர்.

அதைத் தற்செயலாகச் செவிமடுத்த கௌரி மிகவும் வருந்தினாள். விஷயத்தை அவளின் தோழி விஜயாவிடம் கூறினாள்.

''நான் எவ்வளவோ சொன்னேன் 'அம்மை குத்திக்கோ'ன்னு... அவள் கேட்கலை. பாவம், பூப்போல உடம்பு. அம்மை வந்தால் தாள மாட்டாளே.. வர்றியாடி விஜயா. சாயந்திரம் சுதாவின் வீட்டுக்குப் போய் அவளைப் பார்த்துட்டு வரலாம்...''

''கௌரி உனக்குத்தான் எவ்வளவு நல்ல மனசு! உன்னை வெறுக்கறவள் சுதா. இருந்தாலும் அவள் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையிலே கிடக்கறான்னு தெரிஞ்சவுடனே அவளைப் போய் பார்க்கணும்ங்கறயே!''

''என்னதான் அவள் என்னை வெறுத்து விரட்டி ஒதுக்கினாலும் கூட எனக்கு அவள் மேலே கோபமே இல்ல.. அவள் நம்ம வகுப்பிலேயே நல்லாப் படிக்கற மாணவி. அதனால அவகிட்டே கொஞ்சம் கர்வம் இருக்கு. பரவாயில்லே. அவளும் நம்மைப் போல சின்னப் பெண் தானே. அவளோட எப்பவும் அரட்டையடிக்கற ஃப்ரண்ட்ஸ்ல ஒருத்தர் கூட அவளைப் பார்க்கப் போகலையாம். அம்மை நோய்ங்கற பயம் அவங்களுக்கு. நாம போய்த் தூர நின்னாவது சுதாவைப் பார்த்துட்டு வந்துடுவோம் விஜி,'' என்றாள் கௌரி.


அன்று மாலை பள்ளி விட்டதும் சுதாவின் வீட்டை நோக்கிச் சென்ற கௌரியும், விஜயாவும் வாசலில் நின்றனர்.

''இதென்னடீ விஜி? வாசல்லே வேப்பந் தழையை செருகி வைச்சிருக்காங்க!'' என்று வினவினாள். கௌரி.

''அம்மை வார்த்த வீட்ல இப்படித்தான் வைப்பாங்க. வாசப் படில இரும்பு நாழில கோமியம் வைச்சு அதிலே ரெண்டு வேப்பந்தழை இணுக்குகளைப் போட்டு வைச்சிருக்கறாங்களே! அந்த இணுக்குகளால கோமியத்தை எடுத்து தலையிலே தெளிச்சிட்டுத்தான் உள்ளே போகணுமாம். இல்லேன்னா அம்மை ரொம்ப கோவிச்சுக்குமாம்,'' என்றாள் விஜயா.

அவர்களின் உரையாடலைக் கேட்டு வெளியே தலை நீட்டிய சுதாவின் அம்மா, ''என்னடீ பெண்களா, சுதாவைப் பார்க்க வந்தீங்களா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்மா.. நான் கௌரி; இவள் விஜயா. நாங்க ரெண்டு பேரும் சுதாவோடத்தான் படிக்கறோம். அவள் அம்மை வார்த்துக் கிடக்கான்னு சொன்னாங்க. அவளைப் பார்த்துட்டுப் போகலாம்னு



வந்தோம். சுதா எப்படி இருக்கா?'' என்று விசனம் தொனிக்க விசாரித்தாள் கௌரி.

''ஆராட்டமா இருக்கு. அம்மை இறங்கற நேரமோல்லியோ. 'என் பெண்ணுக்கு உயிர்ப் பிச்சை தந்துட்டு அவளை உன் தங்கக் காலால உதைச்சிட்டுப் போம்மா'ன்னுதான் அம்பாளை வேண்டிக்கிட்டிருக்கேன். நீங்களும் சுதாவுக்காக வேண்டிக்கங்க அம்மனை. நீங்க இப்போ அவளைப் பார்க்க வேண்டாம்மா. சின்னஞ் சிறுசுகள் நீங்க பார்த்தால் பயந்து போவீங்க. பின்னாடி பார்த்துக்கலாம்,'' என்று அழுகையினூடே கூறினாள் அந்த அம்மாள்.

கௌரியும், விஜயாவும் சுதாவைப் பார்க்க முடியவில்லையே என்று வருந்தினாலும், அவள் விரைவில் பூரண குணமாகி நன்றாக இருக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்தவாறு அவரவர் வீடுகளுக்குச் சென்றனர்.

மேலும் ஒரு வாரம் கழிந்த பின்னரே சுதா பள்ளிக்கு வந்தாள். உடல் மிகவும் மெலிந்து அம்மைத் தழும்புகளுடன். அவளைப் பார்த்ததும் கௌரியும், விஜயாவும் கோவென்று அழுது விட்டனர். சுதாவின் பணக்காரத் தோழிகள் அவளை ஒருவித அருவருப்புடன் பார்த்ததோடன்றி சற்றே ஒதுங்கிப் போய் நின்றனர்.

கௌரியும், விஜயாவும் சுதாவின் அருகில் சென்று மிக அனுதாபத்துடன் அவளின் நலம் பற்றி விசாரித்தனர்.

''இருக்கேம்மா கௌரி. எனக்கு அன்னிக்கு அப்படி அடிச்சது காய்ச்சல். எங்கம்மா என்னைப் பார்த்துட்டு எனக்கு அம்மை வார்த்திருக்குன்னு சொன்னதுதான் ஞாபகம் இருக்கு. அதுக்கப்புறம் எனக்கு என்ன நேர்ந்ததுன்னே தெரியாது. பத்து நாளா படுக்கையிலே சவம் போலக் கிடந்தேனாம். பார்த்தீங்களா என் உடம்பை? என்னமாய் உருக்குலைச்சுட்டது! என் கர்வத்துக்குச் சரியான தண்டனை கிடைச்சுட்டது. என் சிநேகிதிகள் அத்தனை பேருக்கும் இப்போ என்னைப் பார்க்கவே பிடிக்கலே போலிருக்கு. இல்லேன்னா அப்படி தூரப் போய் நிப்பாங்களா? அவங்கள்லே ஒருத்தி கூட என்னைப் பார்க்க வரலே. நீயும், விஜயாவும் என்னைப் பார்க்க எங்க வீட்டைத் தேடி வந்தீங்களாமே.. அம்மா சொன்னாங்க. நான் உங்க ரெண்டு பேரையும் முன்னாடி அநியாயமாத் திட்டித் தீர்த்திருக்கேன். ஆனா நீங்க அதையெல்லாம் கொஞ்


சம் கூட மனசிலே வைச்சுக்காம நான் அம்மை நோயிலே அவஸ்தைப் பட்டுக்கிட்டிருந்தப்ப என்னைப் பார்க்க வந்தீங்களே..! முன்னே நான் பேசியதையெல்லாம் மறந்துட்டு என்னை மன்னிச்சுடுங்க...'' என்றாள் சுதா.

''அதையெல்லாம் நாங்க அப்பவே மறந்துட்டோம் சுதா. இப்போ நீ அதைப் பற்றி நினைச்சு ஏன் வருத்தப்படறே? நீ சீக்கிரமா சுகமாகணும். பள்ளிக்கு மறுபடியும் வரணும்ன்னு நாங்க கடவுளை அடிக்கடி வேண்டிக்கிட்டோம். இல்லையா விஜயா?'' என்றாள் கௌரி.

'ஆம்' என்பதற்கு அடையாளமாய்த் தன் தலையை ஆட்டினாள் விஜயா.

''நீ கூட 'அம்மைம் குத்திக்கோ சுதா. அதனால் உனக்குத்தானே நன்மை'ன்னு எத்தனை தரம் எங்கிட்ட சொன்னே? நான்தான் அறிவு கெட்டுப் போயி உன் தன்னலமற்ற புத்திமதியை அலட்சியப்படுத்திட்டேன். அதுக்குக் கிடைச்ச பனிஷ்மெண்ட் தான் இந்தத் தழும்புகள்,'' என்று கூறித் தன் உடம்பில் இருந்த அம்மை வடுக்களைப் பார்த்துக் கேவிக் கேவி அழுதாள் சுதா.

அழாதே சுதா. நீ நல்லாச் சாப்பிடு. சத்துள்ள ஆகாரம் நிச்சயமா இந்தத் தழும்புகளையெல்லாம் மாற்றி விடும். அதோட சுத்தமான சந்தன எண்ணெயைத் தழும்புகள்லே போட்டுக் கிட்டே வா. எங்க மாமா ஒருத்தர் — அவருக்கு அம்மை போட்டிருந்தது. அவருக்கு உன்னை விட அதிகமான தழும்புகள். அவர் அந்தச் சந்தனத் தைலத்தைத்தான் போட்டுக்கிட்டே வந்தார். 'ப்யூர் சாண்டல்வுட் ஆயில்'ன்னு சொன்னார். இப்போ பரவாயில்லே. தழும்புகள்லாம் அநேகமா மறைஞ்சிட்டது; முகம் பழைய மாதிரி மாறிட்டது''



உங்கள் உயரத்துக்கு

ஆண்			பெண்	
உயரம் (செ.மீ)	எடை (கிலோ)	வயது	உயரம் (செ.மீ)	எடை (கிலோ)
(1)	(2)	(3)	(4)	(5)
50.5	3.27	பிறக்கும் போது	49.9	3.23
61.0	5.9	0.25	59.5	5.40
67.8	7.85	0.50	65.9	7.21
72.3	9.18	0.75	70.4	8.56
76.1	10.15	1.00	74.3	9.53
82.4	11.47	1.50	80.9	10.82
86.8	12.34	2.00	86.8	11.80
90.4	13.52	2.50	90.0	13.03
94.9	14.62	3.00	94.11	14.10
99.1	15.68	3.50	97.9	15.07
102.9	16.69	4.00	101.6	15.96
106.6	17.69	4.50	105.0	16.81
109.9	18.67	5.00	108.4	17.66
113.1	19.67	5.50	111.6	18.56
116.1	20.69	6.00	114.6	19.52
119.0	21.74	6.50	117.6	20.61
121.7	22.85	7.00	120.6	21.84
124.4	24.03	7.50	123.5	23.26

என்றாள் விஜயா.

"வேளா வேளைக்கு நல்லாச் சாப்பிடு. இப்படி ஆயிட்டோமேன்னு கவலையேபடாதே. நீ எப்படியிருந்துட்டாலும் எங்க தோழி. எங்க கிளாஸ்மேட். இல்லியா விஜயா?'' என்றாள் கௌரி.

விஜயா மனம் நெகிழ்ந்து போய்த் தலையாட்டினாள்.

சுதா இப்போதெல்லாம் உடல் தேறி வருகிறாள். அம்மைத் தழும்புகள் கூடக் கொஞ்சங் கொஞ்சமாக மறைகிறாப் போல் தோன்றுகிறது. அவளிடம் முன்பு இருந்த கர்வம், கோபம், சுயநலம் அனைத்துமே காணாமற் போயின. அன்பும் அடக்கமும் சாந்தமும் கருணையும் ஏழைகள் பால் பரிவும் இப்போது அவளிடம் குடிகொண்டு விட்டன. கௌரி, விஜயா ஆகியோர் மீது அளவில்லாத பிரியம் வைத்து விட்டாள். அவளின் வியத்தகு மாற்றம் கண்டு மகிழ்ந்தனர் தோழியர்.

அவர்களை அவள் சந்திக்கும்போதெல்லாம், "நான் முன்னே இருந்த மாதிரி அழகா மாறிடுவேனா? அம்மைத் தழும்புகள்லாம் மறைஞ்சிடுமா?'' என்றெல்லாம் வினவுவாள் சுதா.


"நிச்சயமா நீ முன் போல அழகா ஆகிடுவே. கவலைப்படாதே சுதா. எப்போ உன் மன அழகு வளர்ந்திடுச்சோ, அப்பவே உன் உடலழகு கிடுகிடுன்னு வளர ஆரம்பிச்சுட்டுது,'' என்றாள் கௌரி.

"எல்லாம் உன்னால்தான் கௌரி. நீதான் என் மனதை உன் அன்பால மாத்தினே. உன்னையும் விஜயாவையும் என் உயிர் உள்ள வரை மறக்கவே மாட்டேன்,'' என்றாள் சுதா.

கௌரியும், விஜயாவும் சுதாவைக் கட்டியணைத்து தங்கள் மகிழ்ச்சிப் பெருக்கை தோழிக்கு உணர்த்தினர்.

இருக்க வேண்டிய எடை...


(1)	(2)	(3)	(4)	(5)
127.0	25.30	8.00	126.4	24.84
129.6	26.66	8.50	129.3	26.58
132.2	28.13	9.00	132.2	28.46
134.8	29.73	9.50	135.2	30.45
137.5	31.44	10.00	138.3	32.55
140.3	33.30	10.50	141.5	34.72
143.33	35.30	11.00	144.8	36.95
146.4	37.46	11.50	148.2	39.23
149.7	39.78	12.00	151.5	41.53
153.0	42.27	12.5	154.6	43.84
156.5	44.95	13.0	157.1	46.10
159.9	47.81	13.5	159.0	48.26
163.1	50.77	14.0	160.4	50.28
166.2	53.76	14.5	161.2	52.10
169.0	56.71	15.0	161.8	53.68
171.5	59.51	15.5	162.1	54.96
173.5	62.10	16.0	162.4	55.89
175.2	64.39	16.5	162.7	56.44
176.2	66.31	17.0	163.1	56.69
176.7	67.78	17.5	163.4	56.71
176.8	68.88	18.0	163.7	56.62



(மூப்பியல் மருத்துவ நிபுணர் பேராசிரியர் வி. எஸ். நடராசன் அவர்கள் எழுதிய நல்வாழ்வுக்கேற்ற உணவுகள் என்ற நூலிலிருந்து)

பிருந்தாவனக்

ஹெர்குலெஸ்



கிரேக்க நாட்டைச் சேர்ந்த ஹெர்குலெஸ் என்பவன் மிகவும் பலசாலியாகவும் தைரியசாலியாக வும் இருந்து வந்தான். நாளுக்கு நாள் அவனுடைய பலம் வளர்ந்து கொண்டேயிருந்தது. இதைக் கேள்விப்பட்ட கிரேக்க மன்னர் பொறாமை கொண்டு அவனுக்குப் பல வேலைகளைக் கொடுத்து முடிக்கச் சொன்னார்.

ஒருமுறை ஹெஸ்பெரடிஸ் என்ற தோட்டத்திலிருந்து மூன்று பொன் ஆப்பிள் பழங்களைக் கொண்டு வரக் கட்டளையிட்டார்.

ஹெர்குலெஸும் தோளின் மீது சிங்கத் தோலைப் போர்த்திக் கொண்டு கையில் ஒரு பெரிய ஆயுதத்துடன் ஹெர்பெரடிஸ் தோட்டத்தைத் தேடிச் சென்றான். யாராலும் அவனுக்கு வழி சொல்ல முடியவில்லை. கடைசியில் ஒரு ராட்சசனைச் சந்தித்து வழி கேட்டான். அதற்கு அவன், ''ராட்சசர்களுக்கெல்லாம் தலைவனான அட்லஸைச் சந்தித்தால் நீ தோட்டத்திற்குச் செல்லும் வழியை அறியலாம்,'' என்றான்.

சிறிது தொலைவு சென்ற பின் அட்லஸ் என்ற மிக உயரமான மனிதனைச் சந்தித்தான். அவனுடைய தோளில் ஆகாயத்தைத் தாங்கிக் கொண்டு, முகம் மேக மூட்டத்திற்கு மேல் காணப்படுவதைக் கண்டான். பல வருடங்களாக அப்படி இருப்பதால் அட்லஸ் முகம் வாட்டமுற்றுக் காணப்பட்டான்.

ஹெர்குலெஸ் அவனிடம் ஹெஸ்பெரடிஸ் தோட்டத்திற்குச் செல்லும் வழியைக் கேட்டான். அதற்கு அட்லஸ், ''நீ ஆகாயத்தைச் சிறிது நேரம் தாங்கிக் கொண்டால் நான் அந்தப் பொன் ஆப்பிள்களைக் கொண்டு வருகிறேன்,'' என்றான்.

ஹெர்குலெஸும் அவனிடமிருந்து ஆகாயத்தை வாங்கித் தன் தோள்களின் மீது வைத்துக் கொண்டான்.

அட்லஸ் தோட்டத்திற்குச் சென்றான். வெகு நேரத்திற்குப் பிறகு திரும்பிய அட்லஸ், ''இதோ பார், நீ கேட்ட மூன்று பொன் ஆப்பிள்கள்,'' என்று காட்டினான்.

ஹெர்குலெஸ் அட்லஸிடம் ஆகா

கதையரங்கம்


யச் சுமையை ஏற்றுக் கொண்டு ஆப்பிள்களைத் தன்னிடம் கொடுக்குமாறு வேண்டினான். அதற்கு அட்லஸ், ''என்னால் இனிமேல் சுமக்க முடியாது. எனக்கு ஓய்வு வேண்டும். வேண்டுமானால் ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு வாங்கிக் கொள்கிறேன்,'' என்று கூறினான்.

ஹெர்குலெஸ் அவனிடம், ''நீ ஓய்வு எடுக்கத்தான் வேண்டும். நான் உன் நண்பன். உனக்கு உதவவே விரும்புகிறேன். ஆனால் நான் இந்தச் சிங்கத் தோலை தோளின் மீது குஷன் மாதிரி போட்டுக் கொண்டு பிறகு ஆகாயத்தைச் சுமக்கிறேன். அதுவரையில் நீ பிடித்துக் கொள்,'' என்றான்.

அட்லஸ் கையிலிருக்கும் ஆப்பிள்களைக் கீழே போட்டு விட்டு ஆகாயத்தை வாங்கித் தன் தோளின் மீது வைத்துக் கொண்டான். ஹெர்குலெஸ் நேரத்தை வீணாக்காமல் குனிந்து மூன்று தங்க ஆப்பிள்களை எடுத்துக் கொண்டு வேகமாக ஓடி விட்டான். அட்லஸ் அவனை உரத்த குரலில் அழைத்துக் கொண்டேயிருந்தான். புயல் அடிக்கும் நேரங்களில் அவனுடைய குரலை இடியோசையாக இன்றும் நாம் கேட்கலாம்.

— இந்திரா கோபாலன், திருச்சி.

பார்வை சரிதானா?



ஒரு பணக்காரக் கிழவருக்குக் கண் பார்வை கெட்டது. சிகிச்சை அளிக்கும்படி கண் மருத்துவர் ஒருவரை ஏற்பாடு செய்தார்.

மருத்துவன் கிழவனின் கண்களை நன்றாகப் பரிசோதனை செய்து பார்த்து, ''தாத்தா, உங்கள் கண்களை என்னால் குணப்படுத்தி விட முடியும். ஆனால் அதற்கு ஆயிரம் ரூபாய் கட்டணம் தர வேண்டும்'' என்றான்.

''நிச்சயமாக நான் ஆயிரம் ரூபாய் தருவேன். ஆனால் கண்கள் முழுமையாகக் குணமானால்தான் ஆயிரம் ரூபாய் தருவேன். குணமாகா விட்டால் ஒரு பைசா கூடத் தர மாட்டேன்,'' என்றார் கிழவர்.

மருத்துவனும் ஒப்புக் கொண்டு சிகிச்சையைத் தொடங்கினான். கிழ

வரின் வீட்டில் விலை உயர்ந்த பொருட்கள் பல இருந்தன. மருத்துவன் சிகிச்சை செய்ய வரும்போதெல்லாம் கிழவரின் வீட்டிலிருந்த விலை உயர்ந்த பொருட்களை எல்லாம் ஒவ்வொன்றாகத் திருடிச் செல்லத் தொடங்கினான்.

கொஞ்ச காலம் சென்ற பிறகு மருத்துவன் சொன்ன மாதிரியே கிழவருக்குப் பார்வை திரும்பி விட்டது. எந்தப் பொருளையும் அவரால் தெளிவாகப் பார்க்க முடிந்தது. பார்வை திரும்பிய பிறகுதான் தன் வீட்டிலிருந்து பல விலை உயர்ந்த பொருட்கள் காணாமல் போயிருப்பதைக் கிழவர் கண்டார்.

''தாத்தா, உன் கண் பார்வை முற்றிலுமாகச் சரியாக்கி விட்டேன் எனக்குத் தர வேண்டிய ஆயிரம் ரூபாயைக் கொடுத்து விடுங்கள்,'' என்று மருத்துவன் கேட்டான்.

கிழவர் பணம் தர முடியாது என்று மறுக்கவே மருத்துவன் வழக்குத் தொடர்ந்தான். நீதிபதி கிழவரை அழைத்து விசாரணை செய்த போது, அவர் சொன்னார்: ''நீதிபதி அவர்களே, எனக்குக் கண்கள் முழுமையாகக் குணமாகி, பொருட்களை நன்றாகப் பார்க்க முடிந்தால் ஆயிரம் ரூபாய் கட்டணமாகத் தருவேன் என வாக்களித்தது உண்மை. மருத்துவர் என் வீட்டிற்குச் சிகிச்சைக்காக வருவதற்கு முன்னால் என் வீட்டில் ஏராளமான விலை உயர்ந்த பொருட்கள் இருந்தன. என் கண்கள் முழுமையாகக் குணமாகியிருந்தால் என் கண் பார்வையால் அவை தெரிந்திருக்க வேண்டும். என் வீட்டில் இருந்த விலை உயர்ந்த பொருட்களில் ஒன்று கூட என் கண்களில் தென்படவில்லை. ஆகவே என் கண் பார்வை இன்னும் முழுவதுமாகக் குணமாகவில்லை என்றே அர்த்தமாகிறது. நான் எவ்வாறு மருத்துவருக்குப் பணம் தர முடியும்?''

கிழவர் கூறுவதன் உட்பொருளைப் புரிந்து கொண்ட நீதிபதி மருத்துவரின் வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

— மோ. அருண், தஞ்சை.

அன்று ஞாயிற்றுக் கிழமை. விடுமுறை நாள் என்பதே சோம்பேறித்தனத்தை வளர்க்க, வீட்டின் வாசலில் உட்கார்ந்திருந்தான் முரளி.

''முரளி... நான் வேலைக்குப் போறேன். பாத்திரத்திலே சாதம் இருக்கு. தொட்டுக்க மாங்கா இருக்கு. எடுத்துச் சாப்பிட்டுக்க. என்ன?'' கேட்டபடியே வெளியே வந்தாள் பாக்கியம். முரளி பதில் கூறவில்லை. ''என்னடா, பதிலையே காணோம்?''

''ஆமாம்... ஏம்மா ஒரு நாளாவது இட்லி, தோசை சுட்டுத் தர மாட்டியா? தினம் இந்த பழைய சாதம் தானா? எனக்கு ஒண்ணும் வேணாம் போ!'' எரிந்து விழுந்தான் முரளி.

அவன் அம்மா பாவம். அப்பாவை இழந்த முரளியை நன்றாக வளர்க்கத்தான் உழைக்கிறாள். தினமும் நாலு வீட்டில் பாத்திரம் தேய்ப்பதும், துணி துவைப்பதும் தான் அவள் வேலை.



என்ன ஆனாலும் சரி, இன்று பழையதைத் தின்னக்கூடாது என்று முடிவு செய்து கொண்டான் முரளி. வீட்டைப் பூட்டி விட்டு தெருவில் இறங்கி நடக்கலானான்.

அந்தத் தெருவின் கடைசியிலே ஒரு கல்யாண மண்டபம் இருந்தது. அந்த மண்டபத்தின் அருகிலிருந்த வேப்பமரத்தடியில் சென்று அமர்ந்தான் முரளி. அவனைப் போன்ற பல சிறுவர்கள் நல்ல ஆடையுடுத்தி வருவதைப் பார்க்கப் பார்க்க, அவன் வேதனை அதிகமானது. அப்போது தான் அதைக் கவனித்தான்.

எச்சில் இலைகள் வந்து விழும் தொட்டியைச் சுற்றி நாலைந்து நாய்கள் நிற்க, அவற்றுடன் போட்டி போட்டுக் கொண்டு ஒரு சிறுவன் இலைகளிலிருந்து எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

''ச்சே! இதையெல்லாம் எடுத்துத்

தின்ன உனக்கு அசிங்கமாயில்லையா?'' முரளி முகம் சுளித்தான்.

அச் சிறுவன் முரளியை முறைத்தான். ''எனக்குப் பசிக்குது!'' அவ்வளவுதான் சொன்னான். பசியாற மற்றொரு தொட்டியை நோக்கிப் போனான்.

விக்கித்துப் போனான் முரளி. ''ஓ! பசி தாளாமல் எச்சில் இலையைத் தேடுகிறான் இவன். நானோ... இட்லிக்கு ஆசைப்பட்டு அம்மாவிடம் கோபித்துக் கொண்டேனே! நம்மை விடக் கஷ்டமான நிலையில் எத்தனை பேர்! இதை உணராமல் மனம் குழம்பினேனே!''

மீண்டும் வீடு நோக்கி நடந்தான் முரளி. அவன் அம்மா வைத்துப் போயிருக்கும் பழையதே அவனுக்கு இப்போது தேவாமிர்தமாய்த் தோன்றிற்று.

— கிருஷ்ணப்ரியா, அம்மாபேட்டை.



ஒரு முறை சந்திரகுப்த மௌரியன் மகதத்தைப் பிடிக்கும் நோக்கத்துடன் தன்னிடம் இருந்த ஓர் சிறிய படையின் உதவியுடன் மகத நாட்டைத் தாக்கினார்.

ஆனால் தலைநகரில் இருந்த படைகள் சந்திரகுப்தரையும், அவரது ஆதரவாளர்களையும் துரத்தி அடித்தன.

மிகுந்த களைப்புடனும், மனச்சோர்வுடனும் அருகில் இருந்த ஓர் காட்டுப் பகுதியை அடைந்தார் சந்திரகுப்தர். அவருடன் வந்த வீரர்கள் எங்கேயோ வழி தவறிச் சென்றுவிட்டார்கள்.

அந்தக் காட்டில் தூரத்தில் ஒரு சிறிய வெளிச்சம் தெரிந்தது. அந்த வெளிச்சம் ஒரு குடிசையின் உள்ளிருந்து வந்தது. சந்திரகுப்தர் அதை நோக்கி நடந்தார்.

அந்த இரவிலே உள்ளே இருப்பவர்களை அழைத்துத் துன்பம் தர நினைக்காத சந்திரகுப்தர், குடிசையின் வாசலிலேயே படுத்துக் கொண்டார்.

அப்போது குடிசையின் உள்ளிருந்து ஒரு சிறுவன் அழும் ஒலி கேட்டது. அதைத் தொடர்ந்து பாட்டியின் குரலும் கேட்டது. ''தம்பி, நீ ஏன் அழுகிறாய், அந்தச் சந்திரகுப்தன் போல் அல்லவா நடந்து கொள்கிறாய்...?''

தன் பெயர் அடிபடுவதால் எழுந்த சந்திரகுப்தர், ஜன்னல் வழியே உள்ளே பார்த்தார். அந்தப் பையன் உணவுத் தட்டின் முன் அமர்ந்திருந்தான். பாட்டி அவன் பக்கத்தில்.

''பாட்டி, சாப்பிட முடியவில்லை. சுடுகிறது,'' என்று அழுதான் அவன்.

''உணவின் ஓரப் பகுதியை நீ எடுத்துச் சாப்பிட்டால் எந்தப் பிரச்னையும் வராது. அதை விட்டு நேராக நடுவில் கையை வைத்தால் சுடத்தான் செய்யும். தோல்விதான் கிட்டும்,'' என்றாள் பாட்டி.


துள்ளி எழுந்தான் சந்திரகுப்தன். எவ்வளவு பெரிய உண்மையை எவ்வளவு தெளிவாகச் சொல்லி விட்டாள் இந்தக் கிழவி என்று எண்ணினான்.

மறுநாள் காலை தன்னை விட்டுப் பிரிந்த வீரர்களைத் தேடிப் பிடித்தான். அவர்களுக்குப் புத்துணர்வு அளித்து மகத நாட்டின் வெளிப் பகுதியில் இருந்த ஒரு சிற்றூரைப் பிடித்தான். தலைநகர் பாடலிபுத்திரத்தில் இருந்து படைகள் வந்து அவனைத் தாக்க முடியவில்லை.

அத்துடன் தூரத்தில் இருக்கும் ஒரு கிராமம்தானே என்று நந்தர்கள் நினைத்து விட்டார்கள். தொடர்ந்து அதைப் போலவே ஓரங்களில் இருக்கும் பல கிராமங்களையும் பிடித்தான் சந்திரகுப்தன்.

இந்தியாவின் முதல் பேரரசான மௌரியப் பேரரசை நிறுவினான். பேரரசனான பின்னும் காட்டில் சந்தித்த பாட்டியை அவன் மறக்கவேயில்லை.

— கே. பூபதி, பண்ருட்டி.



ஒரு மரத்துப் பறவைகள்

1

“அன்று திங்கட்கிழமை. வழக்கம் போல் காலை 8.50 மணிக்கு மாணவியர் எல்லோரும் பிரார்த்தனைக் கூடத்தில் குழுமியிருக்க வேண்டும். மணி 8.30 ஆகிவிட்டது.

பவித்ரா இன்னமும் வீட்டை விட்டே புறப்படவில்லை. அடிக்கடி கைக் கடியாரத்தைப் பார்த்தபடி, முள்ளின்மேல் நிற்பதைப்போல் தவித்துக் கொண்டு நின்றிருந்தாள்.

''அம்மா, வண்டியை நம்பினால் அவ்வளவுதான். நான் நடந்தே போகிறேன் என்று சொன்னேனே.... தடுத்தாயே! பாரம்மா நேரமாகிவிட்டது." பவித்ராவின் கண்களில் நீர் முட்டிக் கொண்டு நின்றது.

பக்கத்திலிருந்த அவள் தாய் உதயா, மெதுவாக அவள் தோளில் கை வைத்து. ''நம்ம மாருதி கார் இப்ப வந்திடும்மா... அப்பாவை ஸ்டேஷனிலே இறக்கி விட்டுட்டு நேரா வந்திடுன்னு தான் சொன்னேன். நம்ம அவசரம் இந்த டிரைவருக்குப் புரியறதில்லே! துரை டிஃபன் சாப்பிடக் காரையே எடுத்துக்கிட்டுப் போயிருப்பாரு...'' என்று சலித்துக் கொண்டாள் உதயா.

''ஏம்மா அப்படி நினைக்கிறே? காருக்கு என்ன ஆச்சோ என்னவோ! நான் கால் மணி நேரத்துக்கு முன்னாடியே சொன்னேன். மெதுவாக நடந்து போனாலும் நேரத்தோடு பள்ளியைச் சேர்ந்திருப்பேன். நீதான் காருகாருன்னு உயிரை விட்டே — என்னவோ நான் பிறக்கிறபோதே மாருதி காரோடு பிறந்த மாதிரி,'' என்று தாயைக் கோபித்துக் கொண்டாள் பவித்ரா.

''ஒரே பொண்ணு உன்னை ஸ்கூலுக்கு நடந்து போக வச்சிட்டு, நாங்க ஒய்யாரமாப் போகவா சார் வாங்கி வச்சிருக்கோம்? நடந்து போறதாமே நடந்து! அப்புறம் உனக்கும் மத்தவங்களுக்கும் வித்தியாசம் வேண்டாமா?''

''அதைத்தாம்மா நானும் சொல்றேன். பள்ளிக்கூடத்திலே எல்லாரும் சமம்தான். காரிலே போய் இறங்கினாலும், கால் நடையாகவே போனாலும் கரெக்டான நேரத்துக்குப் போய் ஆகணும். இதிலே வேறு, இந்த வருஷமும் என்னைத்தான் வகுப்பு மாணவியர் தலைவியாக இருக்க வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக் கொண்டிருக்காங்க. நடந்து போனாலே கால்மணி நேரத்திலே பள்ளியைச் சேர்ந்திடலாம். இதற்கு வேறு தினமும் காரு. வெட்கமாயிருக்கம்மா.''

''ஏண்டி, இருக்கறப்போ அனுப

பூவை அமுதன்

விக்கிறதுக்கு என்ன உனக்குக் கஷ்டமாயிருக்கா?''

''இதைவிடத் தொலைவிலிருந்தும் நடந்து வருகிறார்களே!''

''இல்லாதவங்க எப்படியோ போகட்டும். நமக்கென்ன?''

''இருக்கிற வசதியையும் தேவையாயிருந்தால்தானே பயன்படுத்த வேண்டும்? நீ கூடத்தான் நகைகள் நிறைய இருக்கு என்பதற்காக எப்பவுமே பூட்டிக் கொண்டு உடம்பை நகை ஸ்டாண்டாகவா வைத்துக் கொண்டிருக்கிறே?''

''உனக்கு வாய் நீண்டு போச்சுது,'' என்று உதயா செல்லமாகக் கடிந்து கொண்டிருந்த போது, மாருதி கேட்டுக்கருகே வந்து நின்று ஹார்ன் ஒலி எழுப்பியது.

''தேர் வந்தாச்சும்மா. தேவதை கிளம்பட்டும். என் தலையை உருட்டியது போதும்,'' என்று செல்லமாக அவள் கன்னத்தில் ஒரு தட்டுத் தட்டி விட்டு, அவள் முதுகைப் பிடித்து அன்பாக நெட்டித் தள்ளினாள் தாய்.

ஓட்டமாக ஓடிவந்து காருக்குள் புகுந்த கொண்ட பவித்ரா, அம்மாவுக்குக் கையைக் காட்டிவிட்டு, ''டிரைவர், நேரமானாலும் பரவாயில்லை. மெதுவாகவே போங்க,'' என்று எச்சரிக்கை செய்தாள்.



''எனக்கென்னம்மா... மெது வாவே போறேன்,'' என்று வண்டியைக் கிளப்பினார் டிரைவர். குறுக்குச் சாலையிலிருந்து வண்டி, நறுமலர் உயர் நிலைப் பள்ளியிருந்த அந்த நெடுஞ்சாலையில் திரும்பியது.

பின் சீட்டிலே சாய்ந்தபடி, சாலையைக் கவனித்துக் கொண்டு வந்த பவித்ரா, பள்ளியை அடைவதற்கு முன்னேயே ஓரிடத்தில், ''டிரைவர், வண்டியைக் கொஞ்சம் ஓரமாக நிறுத்துங்க,'' என்று சட்டென்று குரல் கொடுத்தாள்.

''ஏம்மா, என்ன விஷயம்?'' என்று கேட்டவாறு டிரைவர் வண்டியின் ஓட்டத்தை மெதுவாகக் குறைத்து ஓரமாகக் கொண்டு போய் நிறுத்தினார்.

பவித்ரா காரை விட்டுக் கீழே இறங்கினாள். டிரைவருக்கு ஒன்றும் புரியவில்லை.

''என்னம்மா? கடையிலே ஏதாவது வாங்க வேண்டுமா?'' என்று கேட்டார்.

பவித்ரா ஏதும் பேசாமல் சாலையோரமிருந்த குழாயடிக்குச் சென்று நின்றாள். அங்கே யாரும் இல்லை. குழாய் மூடியிருந்தது. இருந்தாலும், திறந்திருந்தால் கொட்டுவதைப் போலவே தண்ணீர் கொட்டிக்கொண்டிருந்தது. பவித்ரா மூடியை நன்றாகத் திருகி மூட முயன்றாள். என்ன முயன்றும் கொட்டும் தண்ணீரை நிறுத்த முடியவில்லை. குழாயின் வாயில் தன் உள்ளங்கையை வைத்து



அழுத்திப் பார்த்தாள். தண்ணீர் மூடிக்கு மேலே சர்ரென்று பல திசைகளிலும் பீச்சி அடித்தது. அவள் பாதி நனைந்து விட்டாள்.

அவளையே கவனித்துக் கொண்டிருந்த டிரைவர் அப்போதுதான் வண்டியை விட்டுக் கீழே இறங்கினார்.

பவித்ரா சாலையில் ஒரு போலீஸ்காரர் சைக்கிளில் வந்து கொண்டிருப்பதைப் பார்த்து, ''சார்!'' என்று குரல் கொடுத்தாள்.

அவர் மூன்றாவது குரலுக்குத்தான் தன் ஒரு காலைத் தரையில் ஊன்றி நின்றார். சைக்கிளை விட்டு இறங்காமலேயே, ''என்னம்மா பிராப்ளம்? கார் வேற நிக்குது. நீ வேற நிக்கறே? என்ன விஷயம்?'' என்று கேள்விகளை அடுக்கினார்.

''பிராப்ளம் எங்களுக்கு இல்லே சார்,'' என்று அவள் முடிப்பதற்குள்ளாகவே, கண்ணாடியை மூக்குக்கு மேலே நன்றாகத் தள்ளிக் கொண்டு கேட்டார் அந்த டி.எஸ்.பி. 003. ''பின்னே, என்னை எதுக்கு சாருன்னு கூப்பிட்டே?''



'பிராப்ளம் இருந்தால்தான் உங்களைக் கூப்பிடணுமா சார்?' என்று கேட்கத் தோன்றியது பவித்ராவுக்கு. ஆனால் அதற்கெல்லாம் அவளுக்கு அப்போதைக்கு நேரமில்லை. ''குழாயைப் பாருங்க சார், தண்ணீர் எப்படி வீணாகப் போய்க் கொண்டிருக்கு? நாட்டிலே இந்தத்தண்ணீருக்கு மக்கள் எவ்வளவு பாடாய்ப் படுகிறார்கள்..''

''ஆமாம்மா அநியாயம். யாரு இதை இப்படிப் பண்ணினது?''

''அந்த ஆராய்ச்சி எல்லாம் அப்புறம் வைத்துக் கொள்ளலாம் சார்.... இப்போது கொட்டுகிற தண்ணீரை ஒரு சொட்டுக் கூடக் கீழே சிந்தி, வீணாகப் போகாமல் நிறுத்தணும்,'' என்றாள் பவித்ரா அழுத்தந்திருத்தமாக.

இதற்குள் டிரைவர் மெதுவாக பீடியை இழுத்துப் போட்டு விட்டுப் பவித்ரா பக்கம் வந்தார்.

''ஐயாவுக்கு இது வாம்மா வேலை?'' என்று டிரைவர் கேட்டபோது, காவலரும் கலந்து கொண்டார். ''அதுதானே? இது என் வேலையா என்ன? நீ போய் உன் வேலையைப் பாரும்மா. நான் இப்பத்தான் ட்யூட்டி முடிச்சிட்டு வீட்டுக்குத் திரும்பறேன்,'' என்று சொல்லிக் கொண்டே, சைக்கிளில் ஏறினார்.. திரும்பிப் பாராமல் மிதித்துக் கொண்டு போய்விட்டார் காவலர் 003.

''டிரைவர்! பக்கத்திலே விறகுத் தொட்டி இருக்கு பாருங்க. அங்கே போயி.....'' பவித்ரா வார்த்தையை முடிக்கவில்லை.

டிரைவர் அதிகமாக அலுத்துக் கொண்டார். ''வாம்மா! வண்டியிலே ஏறும்மா. லேட்டாவுது. இப்படின்னு தெரிஞ்சிருந்தா வண்டியை நிறுத்தியே இருக்கமாட்டேன். என்னமோ குழாயிலே தண்ணி கொட்டுதாம். சீமையிலே இல்லாத தண்ணி. பெரிசா வருத்தப்பட்டுக்கறே? பாரு.... இந்த ரோட்டிலே எத்தனை பேரு பார்த்துக்கிட்டு அவங்க பாட்டுக்குப் போய்க்கிட்டே இருக்காங்க! உனக்கு மட்டும் என்னம்மா?''

டிரைவர் அலட்சியமாகப் பேசி

யதை வெறுப்பாகக் கேட்டுக் கொண்டிருந்த பவித்ரா, ''வேண்டுமானால் வண்டியை எடுத்துக் கிட்டு நீங்க போங்க,'' என்று சொல்லி விட்டு வேகமாக அந்த விறகுக் கடையை நோக்கிச் சென்றாள்.

காரோட்டியும் பின்னே சென்றார்.

விறகுக் கடையிலே, கல்லாப் பெட்டி முன்பு, பெஞ்சின் மேல் கால்களை நன்றாக மடித்துப் போட்டுச் சப்பளமாக அமர்ந்திருந்தார் கடைக்காரர்.

''ஐயா, அதோ பாருங்க.... குழாயிலே தண்ணீர் வீணாகக் கொட்டிக் கிட்டிருக்கு...'' என்று பவித்ரா ஆரம்பித்த போது, ''ஆமாம்மா.... நானும் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன். எல்லாம் பிடிச்சிக்கிட்டாங்க. மேலும் யாருக்கும் தண்ணி வேண்டாம் போல. அதான் அதுபாட்டுக்கு ஊத்திக்கிட்டிருக்கு,'' என்றார் அவர்.

''நீங்கள் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறீங்க?''

''பின்னே... கடைக்கு எதிரிலேயே இருக்கிற குழாயைப் பார்க்காம இருக்க முடியுமா?'' என்று பதில் கேள்வி போட்டார் விறகுக் கடைக்காரர்.

''இல்லை சார்... இப்படி இந்தத் தண்ணீர்ப்பஞ்ச காலத்திலே வீணாப் போய்க்கிட்டிருக்கே. நிறுத்த வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றவில்லையா?'' என்று சூடாகக் கேட்டாள் பவித்ரா.

''எனக்கு வேற வேலையில்லையாம்மா? நான் என் வியாபாரத்தைப் பார்ப்பேனா.... அதைப் பார்ப்பேனா? வெட்டிக்கு அதைப் போயி... அது காலையிலே எட்டரைமணியிலேருந்து கொட்டிக்கிட்டுத்தான் இருக்கு.''

வீட்டில் 'போர்' பார்க்கிலே போர்....



வீட்டிலே 'போர்' அடிக்குதுன்னு பார்க்குக்குப் போனேனா... அங்கே தமிழ்ப் போர்! அதான் சார், சண்டை – மாடுபிடி சண்டை.

நான் ஒண்ணும் பயப்பட மாட்டேன்!

பார்க்கிறேன் ஒரு கை!

எய், என்னையா முட்ட வர்றே?

அவருடைய பேச்சைக் கேட்கவே பிடிக்கவில்லை பவித்ராவுக்கு. காது களைப் பொத்திக் கொண்டாள். சாலையிலே இரண்டு பக்கங்களிலும் காரிலும் சைக்கிளிலும் நடந்தும் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருப்பவர்கள்தாம் எதுவும் செய்ய வில்லை. எதிரேயிருக்கும் இந்தக் கடைக்காரர்... ஏன், இவருக்குப் பக் கத்திலேயிருக்கிற அந்தச் சைக்கிள் கடைக்காரர்.... அதோ கொஞ்சம் தள்ளிக் கூடையில் பூவை வைத்துக் கொண்டு கூவி விற்கும் அந்தப் பூக் காரி..... ஒருவர் கூட ஏன் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை? அவர்கள் வீட்டுக் குழாயில் தண்ணீர் இப்படி ஒழுகிக் கொண்டிருந்தால் பார்த்துக் கொண்டா இருப்பார்கள்? நினைக்க நினைக்க எரிச்சல் அதிகமாகியது பவித்ராவுக்கு. ஆனால் யாரைக். கோபித்துக் கொள்ள முடியும்!

"அம்மா! நேரமாகுதும்மா. உங் கம்மா வேற... காரிலே மாதர் சங்கத் துக்குப் போகணும், சீக்கிரம் ...ன்னு சொன்னாங்க...." என்றார் டிரைவர்.

"ஆமாம் எல்லாருக்கும் தலைக்கு மேலே வேலைதான். எல்லாம் போங்க," என்று டிரைவரைப் பார்த் துக் கோபமாகக் கூவினாள் பவித்ரா.

"இப்போ... நீங்க என்னதாம்மா செய்ய போறீங்க?" என்று கேட்ட காரோட்டியைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் கடைக்காரர் பக்கம் திரும்பினாள் பவித்ரா.

"கடைக்கார சார்! ஒரு சின்ன துண்டுக் கட்டை கொடுங்க. அப் படியே கொஞ்சம் துணிக்கந்தல் கொடுங்க. முடிந்தால் உங்கள் ஆட் களில் ஒருவரை என்னோடு அனுப்பி....."

"ஏன் பொண்ணு... நீ பேசாமே போகமாட்டியா? நானும் பார்த்தேன், அந்தப் போலீஸ்காரரே போயிட் டாரு. அப்புறம் உனக்கென்ன, எனக் கென்ன? காலையிலே தொந்தரவு பண்ணாமே போயிடும்மா. யாராவது பஞ்சாயத்து ஆபிசிலேருந்து வந்து ரிப்போர் பண்ணிட்டுப் போறாங்க. உனக்கென்ன? நீ படிக்கப் போவியா..



இம்முறை கொம்பைப் பிடிச்சிட்டு ஸ்கூட்டர் ஓட்டறேன்

இப்படிக் கொம்பைப் பிடிக்க முடிக்கி...

மேலே தாவி ஏறி...

வண்ணப்படங்கள்: எம். பார்வதீசம்.

அதை விட்டுட்டு....'' அவர் நீட்டி முழக்கி விட்டு, எகத்தாளமாகச் சிரித்தார்.

கொஞ்சமும் பொறுக்கவில்லை பவித்ராவுக்கு.

''வாம்மா.... வாம்மா... வண்டியிலே வந்து குந்து.'' என்றார் டிரைவர்.

பவித்ராவுக்கு உடம்பெல்லாம் எரிந்தது. கோபத்தைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். ''சரி.... பஞ்சாயத்துக் காரர்களுக்காவது ஃபோன் போட்டுச் சேதி சொல்லுங்களேன், ப்ளீஸ்!'' அழமாட்டாக் குறையாகக் கெஞ்சினாள் பவித்ரா.

பிறகுக் கடைக்காரர் தலை சொறிந்தபடி சிரித்துக் கொண்டே எழுந்து நின்றார். ''நீ இடத்தைக் காலி பண்ணும்மா. போன் போடறதாவது! ஒரு காலுக்கு ரெண்டு ரூபாயில்லே, நான் வாங்கறேன்? அதோ பாரு பக்கத்திலேயே உண்டி!'' என்று சொல்லிவிட்டு, ஏதோ நினைவுக்கு வந்தவர் போல, டயல் சக்கரத்தில் பூட்டியிருந்த சிறு பூட்டை நன்றாக இழுத்துப் பார்த்துவிட்டு உள்ளே போய் விட்டார்.

பவித்ராவின் கண்களில் நீர் நிரம்பி விட்டது. கலங்கிய கண்களோடு, கொட்டிக் கொண்டிருக்கின்ற குடிநீரைத் திரும்பிப் பார்த்தாள். சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தவள் போல், பக்கத்துச் சைக்கிள் கடைக்குச் சென்றாள்.

அங்கே ஒரு பையன், அவனை விடவும் உயரமான ஒரு பம்பைத் தூக்கி அடித்து, ஒரு சைக்கிள் சக்கரத்தில் காற்றை ஏற்றிக் கொண்டிருந்தான். நடுத்தர வயதான ஒருவர் ஒரு ட்யூபுக்குப் பஞ்சர் போட்டுக் கொண்டிருந்தார்.

''சார்! ஒரு முழ நீளத்துக்கு ஒரு பழைய ட்யூபைக் கொஞ்சம் வெட்டிக் கொடுங்களேன்,'' என்று கேட்டாள் அவரிடம், பவித்ரா.

''ஏம்மா?''

''வேண்டும் சார்.''

''ஒரு முழ நீளமுன்னு கேட்டா... அதை வெட்டி, நான் குறைஞ்சது இருபது பஞ்சர் ஒட்டுவேம்மா. சும்மா கேக்கறியே!''

''சார்.... நாளைக்கு நான் ஒரு முழு ட்யூபையே கொண்டு வந்து தந்திடறேன் சார்!'' கெஞ்சும் பாவனையில் கேட்டாள் பவித்ரா.

கடைக்காரர் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த பழைய துண்டு ட்யூபை இழுத்து, பூக்காரி பூச்சரத்தை முழம் போட்டு அளப்பதைப்போல, சரியாக ஒரு முழம் அளந்து வெட்டிக் கொடுத்தார். கொடுக்கும் போது, ''மறந்திடாதேம்மா.... நாளைக்கு முழு ட்யூப்!'' என்று நிதானமாக எச்சரிக்கை செய்து விட்டே கொடுத்தார்.

அவள் அதை எடுத்துக் கொண்டு போய் வேகமாக இரண்டு அடி எடுத்து வைத்த[illegible], ''சார்! ஏதாவது ஒரு துண்டு [illegible] இருந்தால்...'' என்று இழுத்து அவளே தன் வாயை மூடிக் கொண்டு, தன் தலையின் பின்னால் கையை வைத்தாள். அவள் கையிலே ஒரு சிறு கறுப்புக் கயிறு தட்டுப்பட்டது.

வேகமாகக் குழாயடிக்கு வந்தவள் பின்னே, டிரைவரும் வேகமாக வந்தார், ''உனக்கு ஏம்மா இந்த வம்பெல்லாம்? எல்லார்கிட்டையும் போய் நீ கெஞ்சி நின்னுகிட்டு.... உங்க அம்மா பார்த்திருக்கணும்...



பழக்கும்

கீழ்க் காணும் முறையில் மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒரு தினக்குறிப்பு வைத்துக் கொள்ளுங்கள். இந்தக் கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் உங்களது விடையைக் குறித்து வைத்தபடியே வாருங்கள். ஒரு வருடத்தில் பெரிய மாறுதலை இது ஏற்படுத்தும். மிகச் சிறந்த வழியில் உங்களை அமைக்கும். இதோ, 14 கேள்விகள். பதில்களை நாளை முதற்கொண்டு எழுதத் தொடங்குங்கள்.

1. காலையில் துயில்நீங்கி எழுந்த நேரம்?

என்னையில்ல கண்டிப்பாங்க, ஏன் வழியிலே காரைவிட்டுக் கீழே இறக்கினேன்னு...'' என்று அவர் சொன்னதைக் காதில் வாங்கிக் கொண்டே, பின்னால் தலை முடியிலிருந்த கயிற்றை அவிழ்த்தாள்.

அந்தச் சைக்கிள் ட்யூப் துண்டை அந்தக் குழாயின் வாய்க்குமேல் பொருந்த வைத்து, அந்த ட்யூப்பையும் மடித்துச் சேர்த்து நன்றாக இறுக்கிக் கட்டினாள். ஒரு சொட்டுத் தண்ணீர் வெளியே சிந்தவில்லை.

கடைக்கு எதிரே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த விறகுக் கடைக்காரர், பவித்ரா அந்தப் பக்கம் திரும்பியதும் தன் தலையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு நின்றார். சாலையில் சென்று கொண்டிருந்த சிலர், நின்று பார்த்துவிட்டுப் போகும் முன், ''கெட்டிக்காரப் பொண்ணு!'' என்று நற்சான்றுப் பத்திரத்தை வாய் மொழியாகவே கொடுத்துவிட்டுப் போனார்கள்.

டிரைவர், ''வாம்மா போகலாம். இந்த ஐடியாவெல்லாம் வேற யாருக்கும் வரல்லியேம்மா. மெய்யாலுமே நீ ரொம்பப் புத்திசாலிப் பொண்ணும்மா,'' என்று உண்மையாகவே புகழ்ந்தார் என்றாலும் அவர் பேச்சே பிடிக்கவில்லை பவித்ராவுக்கு.

''என்னை ஸ்கூலில் விட்டு விட்டு, நீங்கள் நேராகப் பஞ்சாயத்து ஆபீசுக்குப் போய், குழாய் விஷயத்தைச் சொல்லுங்க. குடிநீர் ஏரியிலே இருக்கிற தண்ணீரிலே பாதிக்குமேலே இப்படி வீணாகப் போனால், ஒரு மாதத்துக்கு அப்புறம் வருகிற தட்டுப்பாடு, வெகு சீக்கிரமே வந்துவிடும். அலட்சியப் படுத்தாமல் சொல்லிவிட்டுப் போங்க,'' என்று சற்று அதட்டலாகவே கூறினாள் பவித்ரா.

''நமக்கென்னம்மா கவலை? நம்ம பங்களாவிலே இருக்கிற கிணத்திலே தேங்காய் நீர் மாதிரி குடி தண்ணி. அது எந்தக் காலத்துக்கும் வற்றாது,'' என்று பேசிக் கொண்டே காரைக் கிளப்பினார் டிரைவர்.

''நமக்குத் தண்ணீர் கிடைத்து விட்டால் ஊர் தாகமெல்லாம் அடங்கி விடும்... இல்லே.....? பேசாமல் சொன்னதைச் செய்து விட்டுப் போங்க. அம்மாவிடம் நான் வந்து சொல்லிக் கொள்வேன்,'' என்று பவித்ரா மீண்டும் எச்சரிக்கும் பாவனையில் கூறினாள்.

''சரிம்மா!'' என்றார் டிரைவர்.

(தொடரும்)

மாணவர்களே, 14 கேள்விகள்!

2. கடவுளை தியானித்த நேரம்?
3. வகுப்புப் பாடங்களில் படிக்க வேண்டியதோ அல்லது எழுத வேண்டியதோ மீதம் உண்டா?
4. பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கீழ்ப்படிந்து நடவாமல் இருந்ததுண்டா?
5. வெட்டி அரட்டையிலும், தகாத பேர் வழிகளுடன் நட்பு கொள்வதிலும் வீணாக்கிய நேரம் எவ்வளவு?
6. எந்தக் கெட்ட குணத்தை நாம் நீக்க முயல்கிறோம்?
7. எந்த நற் குணத்தில் நாம் பழகி வருகிறோம்?
8. எத்தனை தடவைகள் கோபம் வந்தது?
9. சரியான நேரத்தில் வகுப்பிற்குச் சென்றோமா?
10. இன்று செய்த சுயநலமற்ற தொண்டு என்ன?
11. புகை பிடித்தல், சினிமா சென்றது இன்று உண்டா?
12. விளையாட்டிலும், உடற்பயிற்சியிலும் இன்று செலவிட்ட நேரம்?
13. மனச்சாட்சிக்கு விரோதமாக இன்று செய்த காரியம் உண்டா?
14. யாராவது மனம் வருந்தும்படி இன்று நடந்தோமா?

இந்தப் பதினான்கு கேள்விகள் கொண்ட பட்டியலுக்குத் தினம் பதில் அளித்து வந்தால், விரைவில் நீங்கள் மற்றவர்கள் போற்றிப் பாராட்டும் மாணவர்களாக ஆவீர்கள் என்பதில் சந்தேகம் துளியும் இல்லை.

— எஸ். ராஜகோபாலன், சென்னை - 63.



உலக நாடோடிக் கதைகள்
தங்கமணி

இந்த நூலில் உள்ள 12 நாடோடிக் கதைகளும் 'யாரோ சொல்லக் கேட்டுப் பிறகு, யாரோ சொல்லக் கேட்டு, அப்புறம் யாரோ சொல்லக் கேட்டு, அதற்கப்புறம் யாரோ சொல்லக் கேட்டு,' — எழுதியதாக ஆசிரியர் சொல்லுகிறார். இந்தியா, இலங்கை உட்படப் பன்னிரண்டு நாட்டுக் கதைகள் இடம் பெற்றிருக்கின்றன. தங்கமணியின் துள்ளல் நடை பற்றிச் சொல்லத் தேவையில்லை. கழுதையின் ஆசை, குரங்கு வாழ்க, பசுவும் பாலும் — இப்படி மிருகங்களை வைத்துத்தான் கதைகள் என்றாலும் அதிலேயும் ஒரு 'மாடர்ன் டச்' கொடுத்துச் சொல்லியிருக்கும் விதம் பாராட்டுக்குரியது.

— ரூ. 6 — பக்கம் 64 — உமா பதிப்பகம்.

விஞ்ஞானிகள் வரலாறும் கண்டு பிடிப்புக்களும் — எஸ். தர்மலிங்கம்

இன்றைய விஞ்ஞானத்தின் மேனாட்டு மூலவர்களான ஐந்து பேரறிஞர்களின் வாழ்க்கை வரலாறும் அவரது சாதனைகளும் சற்று விரிவாகவே தரப்பட்டுள்ளன. அரிஸ்டாடில், பிதாகோரஸ் இருவரும் எடுத்துக் கொண்ட தலைப்புக்கு ஒத்துப் போகா விட்டாலும் அறிந்து புரிந்து கொள்ளத் தக்கவர்கள்தான் என்பதை மறுப்பதற்கில்லை. மாணவர்களைத் தூண்டக் கூடிய வகையில் எழுதப்பட்டதாய் ஆசிரியர் குறிப்பிடுகிறார். இடையிடையே துணைத் தலைப்புக்கள் தந்திருந்தால் மேலும் தூண்டக் கூடியதாய் அமைந்திருக்கும்.

— ரூ. 10 — பக்: 112 — இரண்டு புத்தகங்களும்: உமா பதிப்பகம், 58, ஐயப்ப செட்டித் தெரு, மண்ணடி, சென்னை — 600 001.

சிந்தனையைத் தூண்டும் குறுக்கெழுத்துப் போட்டிகள்

புத்திக் கூர்மைக்குச் சாணை பிடிக்கக் குறுக்கெழுத்துப் போட்டிகள் மாதிரி சிறந்த சாதனம் குறைவாகவே இருக்க முடியும். அதிலும் உங்களுக்குக் கொஞ்சம் தமிழறிவும் குயுக்தியைப் புரிந்து கொள்ளும் திறமையும் இருந்து விட்டால் போதும்; என்ன கொண்டாட்டம் என்கிறீர்கள்! இந்த வாரம் போட்டி வந்தது; சரியான விடைக்காக அடுத்த வாரமோ, அதற்கடுத்த வாரமோ காவ் காவென்று காத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. மொத்தம் 64 குறுக்கெழுத்துப் போட்டிகள் இடம் பெற்றிருக்கின்றன. அத்தனைக்கும் இதே புத்தகத்தின் இறுதியில் விடைகளைத் தந்துள்ளார்கள். வாழ்க!


(பக். 112 — ரூ. 13)

சிரிக்க, சிந்திக்க ராயர் — அப்பாஜி கதைகள்


கிருஷ்ணதேவ ராயர் சமஸ்தானத்தில் அப்பாஜி என்று கூர்த்த மதியும், நகைச்சுவை உணர்வும் கொண்ட அமைச்சர் ஒருவர் இருந்தார் என்று பலருக்குத் தெரிந்திருக்கலாம். அந்த அப்பாஜி, எங்கிருந்து எப்படி கிருஷ்ணதேவராயருக்கு மந்திரியாய் வந்தார் என்ற பூர்வ கதை எத்தனை பேருக்குத் தெரியும்? ராயர் தமது சிற்றரசன் குறும்பை நாட்டான் சரிவரக் கப்பம் கட்டவில்லை; தன்னை அவமானப்படுத்தினான் என்று வெகுண்டு அவன்மேல் படையெடுத்ததிலிருந்து ஆரம்பிக்கிறது கதை. அப்பாஜி மாற்றான் தோட்டத்து மல்லிகைதான். அந்த மல்லிகை மணம் தன் மாளிகையில் வீச வேண்டும் என்று அப்பாஜியை ராயர் கவர்ந்தது; அவரிடம் அசூயைப் பட்டவர்கள் கவிழ்க்கப் பார்த்தபோது சிரித்து, சிந்திக்க வைக்கும் விதத்தில் அமைச்சர் அப்பாஜி கையாண்ட லீலா விநோதங்கள் — அறிவுக்கு விருந்து.

(பக். 140 — ரூ. 13.50 — இரண்டு புத்தகங்களும்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு — மணிமேகலைப் பிரசுரம், த. பெ. எண் 1447, 4, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை — 600 017.)



பிரும்மரிஷி விச்ரவசுவின் மகன் ராவணனுக்குப் பத்து தலைகள். இந்தப் படக்கதையில் தேவையான இடங்களில் மட்டும் பத்து தலைகள் சித்திரிக்கப் படும்.
விச்ரவசுவுக்கும் கேகசிக்கும் பிறந்த பிள்ளைகள் ராவணன், கும்பகர்ணன், விபீஷணன்.
விபீஷணன் சாதுப் பிள்ளை; மற்றது இரண்டும் முரடு!
விச்ரவசுவின் மூத்தொரு மனைவி இளபிளைக்குப் பிறந்தவன் குபேரன்...
என் பிள்ளைகள் எல்லாருக்கும் வேத சாஸ்திரங்களைக் கற்பிக்க வேண்டும்...
குழந்தைகளா, சொல்லுங்கள்! ஓம்! ஸஹனா பவது, ஸஹ நௌ புனக்து ஸஹவீர்யம் கரவாவஹை...
பாடம் முடிந்ததும்...
ஏய், குபேரா! குட்டி யானை!
டேய், ராவணா! பத்து தலைப் பூச்சி!
இலங்கேஸ்வரன்
கதை: ஆனந்தி
படம்: விஜு


ராவணனுக்கு மாற்றாந்தாய் மகனான குபேரனைக் கண்டாலே வெறுப்பு... சதா சண்டை! விபீஷணனோ...
வேண்டாம்! நிறுத்துங்கள்!
குபேரன் வாலிபப் பருவத்தில் இலங்கைத் தீவை அடைந்து...
ராவணனுடைய தொல்லையில்லாமல் இந்தத் தீவில் ஒரு பட்டினம் கட்டிக் கொள்ளலாம்.
குபேரன் கடுமையான தவம் செய்து சங்கநிதி, பதுமநிதி என்ற அளவற்ற செல்வங்களைப் பெற்றான்!
தேவலோகத் தலைநகரான அமராவதிக்கு இணையாக இலங்காபுரியை நிர்மாணித்தான்...
ராவணனை அவன் தாய் கேகசி தூண்டி விட்டாள்...
இளிபிளையின் மகனைப் பார்! இலங்காபுரியில் செல்வச் செழிப்புடன் வாழ்கிறான்...


...உனக்குக் குபேரசம்பத்து வேண்டாமா?
இப்போதே போய் குபேரனைத் தோற்கடித்து இலங்கையை எனதாக்கிக் கொள்கிறேன்!..
அவசரப்படாதே! குபேரன், மாதவம் செய்து ஈசன் அருள் பெற்றவன்!...
நானும் இமய மலைச் சாரலுக்குச் சென்று தவமிருப்பேன்!
பிரம்மதேவனைத் தியானித்துப் பத்தாயிரம் ஆண்டுகள் தவம் செய்தான் ராவணன்!..
பிரும்மா தோன்றி...
வரம் கேள்!
இறவா வரமும் குறையாத செல்வமும் வேண்டும்!
சாகாவரம் அருள முடியாது. வேறு விதமாகக் கேள்!
அப்படியானால், தேவர், உரகர், கின்னரர், அவுணர், சித்தர் ஆகிய யாராலும் எனக்கு மரணம் நேரக் கூடாது!





ராவணன் மனிதர்களை ஒரு பொருட்டாக மதிக்க வில்லை... அதனால் அவர்களைக் குறிப்பிடாமல் விட்டான்!
அவ்வாறே வரம் தந்தேன்!
ராவணன் தன் அசுர நண்பனிடம் சென்று...
பிரகதத்தா! குபேரனிடம் போ! இலங்காபுரியை எனக்குத் தர வேண்டும்; இல்லையெனில் போர் என்று சொல்லு!
குபேரன் மனைவி சித்திரரேகையுடன் கொலு விருந்தான். பிரகதத்தன் வந்து...
...ராவணனுக்குத் தங்கள் பதில் என்ன?
அப்போது சித்திரரேகை...
சுவாமி! தங்கள் தந்தையின் யோசனையைக் கேட்டு நடந்து கொள்ளுங்கள்...
குபேரன் விச்ரவசுவின் ஆசிரமத்தை அடைந்து...
ராவணன் தூது அனுப்பி யிருக்கிறான்...
குபேரா! தம்பியுடன் யுத்தம் வேண்டாம்; இலங்காபுரியை விட்டுக் கொடுத்து விடு!...



..உன்னிடம் அளவற்ற செல்வமும் ஆற்றலும் உள்ளன. இமய மலைச் சாரலுக்குச் சென்று வேறு நகரம் நிர்மாணித்துக் கொள்!
அப்படியே ஆகட்டும்!
சங்கநிதி, பதுமநிதியுடனும் மனைவி சித்ர ரேகையுடனும் குபேரன் புறப்பட்டான்...
இந்த புஷ்பக விமானம் நம்மை இமய மலைச் சாரலுக்குக் கொண்டு சேர்க்கும்...
...அழகாபுரி என்ற நகரை நிர்மாணித்து மந்திரி பிரதானி களுடன் குடியேறினான்...
இலங்காபுரி ராவணன் வசப்பட்டது...
இனி தேவருலகம், பாதாள உலகம் எல்லாவற்றையும் வெல்வேன்!
இராவணன் இந்திரனை வென்றான்...
இனி நீயும் தேவர்களும் என் அடிமைகள்!





ராவணன் பெண்களைத் துன்புறுத்தினான்...
ஐயோ!
ரிஷிகளின் யாகங்களைக் கலைத்தான்... அவர்களை இம்சித்தான்...
இந்த அரக்கனைத் தட்டிக் கேட்பாரில்லையா? நாராயணா!
தேவசிற்பி மயனுடைய மகள் மண்டோதரி... சக்தி பூஜை செய்தாள்...
தேவி! இராவணனுடைய வீரமும் கம்பீர உருவமும் என்னைக் கவர்கின்றன...
...அந்தச் சிவபக்தனை என் பதியாக அடைய வரம் அருள்வாய்!
ராவணன் மயனுடன் போரிட்டு அவனை வென்றான்...
தாங்களுக்குப் பணிந்தேன்... என் செல்வத்தில் சிறந்த செல்வமான என் மகளைத் தங்களுக்கு அளிக்கிறேன்!



இலங்காபுரியில் மண்டோதரி பட்டத்தரசியாக விளங்கினாள்...
வெற்றிக்கு மேல் வெற்றி!
இராவணனும் மண்டோதரியும் தினமும் பக்தியோடு சிவபூஜை செய்தனர்...
...ஆயினும் ராவணன் தேவர்களைத் துன்புறுத்துவது தொடர்ந்தது... குபேரன்...
மணிபத்ரா! ராவணனிடம் சென்று 'தேவர்களைத் துன்புறுத்த வேண்டாம்,' என்று அண்ணன் கேட்டுக் கொண்டதாகச் சொல்!
ஆனால் ராவணன் அகம்பாவம் மிக..
இந்தத் தூதனை இழுத்துப் போய்ச் சிரச்சேதம் செய்யுங்கள்! இதோ அழகாபுரி புறப்படுகிறேன்...
அழகாபுரியில்...
குபேரா! எனக்கு அறிவுரை வழங்க நீ யார்! வா சண்டைக்கு!


குபேரன் பயந்து தோற்று ஓடினான்...
புஷ்பக விமானம் என் வசப்பட்டது!
விமானத்தில் ஏறிப் பறந்தான் ராவணன்...
ஆகா! பிரமாதமாகத் தான் இருக்கிறது...!
ஓரிடத்தில் விமானம் தொடர்ந்து பறக்காமல் அந்தரத்தில் நின்று விட்டது... அப்போது நந்தி பகவான்...
ராவணா! சிவபெருமான் குடியிருக்கும் கைலாசத்தை நீ நெருங்கி விட்டாய்! அவருக்கு மேல் நீ பறக்கக்கூடாது!
குரங்கு முகமுடைய நீ என்ன சொல்வது! நான் என்ன கேட்பது!
ஈசனின் வாகன மாகிய என்னையா கேலி செய்தாய்? உன் பட்டணம் ஒரு குரங்கால் அழியும்!
கவலை கொண்ட ராவணன், சிவ பெருமானை எண்ணிக் கடுந் தவம் செய்தான்...



கடும் தவமிருந்தும் ஈசன் தோன்றாமல் போகவே...
என் தலைகளை ஒவ்வொன்றாக அறுத்து ஹோமம் செய்வேன்!
ஒரு தலை மட்டுமே மிச்சமிருந்தபோது...
ராவணா! நில்! உன் பலம் மேலும் பெருகும்! எந்த யுத்தத்திலும் துண்டிக்கப்படும் உன் சிரங்கள் திரும்ப உண்டாகும்!
வரம் பெற்ற ராவணனின் அகம்பாவம் வளர்ந்து, கொடுமைகளும் அதிகரிக்கும் என்று தேவர்கள் பயந்தனர். நாரதர்...
என்னப்பா இவ்வளவு சந்தோஷம்...?
சிவபெருமான் எனக்கு அளவற்ற பலம் தந்தார்!
அப்படியானால் இந்த கைலாசமலையைப் பெயர்த்துத் தூக்கேன், பார்ப்போம்... அப்போதுதான் நம்புவேன்!


ராவணன் தன் பலத்தை நிரூபிக்க எண்ணி...
கைலாசத்தை இருபது கைகளாலும் பெயர்த்து எடுத்து இலங்கைக்கே கொண்டு போய் விடுகிறேன்!
கைலாசம் அசைய, பார்வதி தேவி கலக்கமுற்று.....
ராவணன், வரம் தந்த உங்களிடமே தன் பலத்தைச் சோதித்துப் பார்க்கிறானே!
இருந்த இடத்தை விட்டு அசையாமல், சிவபெருமான் தம் கால் கட்டை விரலால் கைலாச மலையை அழுத்தினார்...
இப்போது நடப்பதைப் பார்!
ராவணன் உடல் கைலாச மலையின் கீழ் சிக்கி நசுங்க....
ஆ! ஐயோ! என்னைக் காப்பாற்றுவார் இல்லையா?


ஆயிரம் ஆண்டுகள் கதறினான் ராவணன். வாகீச முனிவர் தோன்றி...
அப்பனே! வரம் தந்த வரையே சோதித்தாய்! அவர்தான் உன்னைக் காப்பாற்ற முடியும். ஸாம கானம் செய்து ஈசனை மகிழச் செய்!
ராவணன் ஒரு கையைத் தண்டமாக்கி, தன் நரம்புகளையே தந்திகளாக்கி வீணை செய்து இசைத்தான்...
"ஹா வு ஹா, அஹா மன்ன மஹா மன்ன ..."
ஈசன் கருணை காட்டி ராவணனை விடுவித்தார்... மீண்டும் புஷ்பக விமானத்தில் பறந்தான்...
அதோ ஓர் அற்புத நகரம் தெரிகிறது... அங்கு போய்ப் பார்ப்போம்.
அங்கு ஒரு மாளிகையில்...
நான் இலங்கேசுவரன்... நீ யார்?
நான் மகாபலி! வாமனாவதாரம் எடுத்த மகாவிஷ்ணு என் சிரத்தில் கால் பதித்து அழுத்தி விட்டார்...





... அன்று முதல் இந்த அசும நகரில் சிறையிருக்கிறேன்.
ராவணா! இந்தக் குண்டலங்களை எடுத்து அணிந்து கொள்! பிறகு விஷ்ணுவைத் தேடலாம்!...
... இவை என் பாட்டனாரின் தந்தை இரண்யகசிபு அணிந்திருந்தவை. அவரையே அந்த விஷ்ணு வதம் செய்து என் பாட்டன் பிரஹ்லாதனுக்கு முடி சூட்டினார்!
அந்த விஷ்ணு எங்கே? அவனை வென்று உன்னை விடுவிக்கிறேன்!
ராவணன் குண்டலங்களை எடுக்க முயன்று...
கனமாய்க் கனக்கிறதே! தூக்கவே முடியவில்லையே!
ராவணா! வல்லவனுக்கு வல்லவன் என்றும் உண்டு! அடக்கம் கற்றுக் கொள்!
ஹும்! பழங்கதை கிடக்கட்டும், இப்போ அந்த விஷ்ணு எங்கே?
அவன் எங்குமிருப்பான். ... இதோ, இந்த அறை வாசலில் கூடக் காவலிருப்பான்!
திரும்பிய ராவணன் முன் மகாவிஷ்ணு தோன்றினார். ராவணன் வாளை உருவி...
இன்றோடு நீ ஒழிந்தாய்!


விஷ்ணு உடனே மாயமாய் மறைந்தார்....
எங்கே அவன்? பயந்து ஓடிவிட்டானே! மகாபலி! நான் பெற்ற வரங்களை நீ பெற வில்லை! அதனால் சிறையிருக் கிறாய்! தேவர்கள் கூட என்னை வெல்ல முடியாது!
ராவணன் மறுபடியும் சிவபெருமானை எண்ணிக்கடும் தவம் செய்ய...
எல்லா உலகங்களையும் ஜெயித்து விட்டாயே... இன்னும் என்ன?
பிரளய காலத்திலும் இலங்காபுரி அழியாதிருக்க வரம் வேண்டுகிறேன்.
இதோ என் ஆத்மலிங்கம். இதை இலங்கையில் வைத்துப் பூஜித்து வந்தால் உன் நாடு என்றும் அழியாது!
ஆனால் ஒன்று... இலங்கை செல்லும் வழியில் எங்காவது லிங்கத்தைக் கீழே வைத்தால் திரும்பவும் எடுக்க முடியாது!
தேவர்கள் அஞ்சினர்...
சிவபெருமான் தமது ஆத்மலிங் கத்தை ராவணனுக்குக் கொடுத்து விட்டார்! அவன் ஆணவக் கொடுமைகள் இன்னும் அதிகரிக்கும்!
தொலைந்தோம்!


இந்திராதி தேவர்கள் விநாயகரைத் தஞ்ச மடைந்தனர்...
என்ன இது, இப்படி கூட்டமாக?
தங்கள் தந்தை ஆத்ம லிங்கத்தை ராவணனுக்குத் தந்து விட்டாரே!
இந்திரா! கவலை வேண்டாம்! ராவண வதம் உரிய காலத்தில் நடந்தே தீரும்! ..வருணா! நீ ராவணனுக்கு நீர் உபாதை ஏற்படச் செய்!
விநாயகர், ஓர் அந்தணச் சிறுவன் உருவில் ராவணன் எதிரே தோன்ற...
ஆ! நல்லவேளை, நீ வந்தாய்... இந்தா, இந்தச் சிவலிங்கத்தைச் சற்றுநேரம் பிடித்துக் கொள். இதோ வந்து விடுகிறேன்.
கீழே வைக்கக் கூடாது, ஜாக்கிரதை! நான் இலங்கேசுவரன்! உனக்கு என்ன வேண்டுமோ தருவேன்!
நான் சிறுவன்தானே... கனம் தாங்கவில்லை யென்றால் மூன்று முறை கூப்பிடுவேன்; அதற்குள் வந்து விடு!
அவசரப்பட்டுக் கூப்பிட்டுவிடாதே. ..மறைவாகச் சிறுநீர் இறக்கிய பிறகு, அதோ அந்தக் குளத்தில் கைகால் அலம்பிக்கொண்டு வந்து விடுகிறேன்.


ஆனால் விநாயகர்...
இலங்கேசுவரா! சீக்கிரம் வா! லிங்கம் கனக்கிறது!
கொஞ்சம் பொறு!
இலங்கேசுவரா!
அதற்குள் இரண்டு தடவை கூப்பிட்டு விட்டாயே... சுத்தம் செய்து கொள்ளாமல் லிங்கத்தை எப்படித் தொடுவது?
இலங்கேசுவரா' என்று மூன்றாவது தடவையும் அழைத்த விநாயகர்...
லிங்கத்தின் கனம் தாங்கலை! நழுவுகிறது!
இதோ ஓடி வருகிறேன், பார்!
அதற்குள் விநாயகர் லிங்கத்தைத் தரையில் வைத்து விட...
இப்படிச் செய்து விட்டாயே, பெயர்த்து எடுக்கப் பார்க்கிறேன்!
என்ன முயற்சி செய்தும் பயனில்லை. ராவணன் பற்றிய இடத்தில் லிங்கத்தின் மீது பசுவின் காது போன்ற தழும்பு தான் ஏற்பட்டது...
அடேயப்பா! இந்த மகாபலேசுவரரை அசைக்க முடியலையே!


அந்தணச் சிறுவன் விநாயகராக மாறிவிட்டதைக் கூடக் கவனியாமல் ராவணன் கோபத்தில்...
எல்லாம் உன்னால் ஏற்பட்ட கஷ்டம்தான்!
ராவணனைத் தும்பிக் கையால் சுழற்றித் தரையில் அடித்தார் விநாயகர்...
என்னைக் குட்டத் துணிந்தாயா!
ராவணன் தடுமாறி எழுந்து...
சிவன் மகனே! விநாயகனே! அறியாமல் தவறு செய்து விட்டேன்... மன்னியுங்கள்...
உன் தலையில் குட்டிக்கொள்!
இந்த இடம் கோகர்ணம் (பசுவின் காது) என்று பெயர் பெறும். இங்கு கோயில் அமையும். உன்னைப் போல் என்னைப் பிரார்த்தித்து யார் தலையில் குட்டிக் கொண்டாலும்! அருள் புரிவேன்.
உடல் வலிமையும் தவ வலிமையும் இருந்த போதிலும் கர்வத்தை அடக்காததால் ராவணன் மேன் மேலும் தவறுகள் செய்தான்... குரங்கு வடிவ அனுமானால் இலங்கை தீக்கிரையாயிற்று..
மனித உருவில் ராமராக அவதரித்திருந்த மகாவிஷ்ணு, ராவணனைப் போரில் வதம் செய்தார். ராவணன் தம்பி விபீஷணன் இலங்காதிபதியானான்.



உலகிலேயே மிகப் பெரிய கண்டம் இத்தாலிங்கறீயே முண்டம், இது கூடவா தெரியலை?
இன்னைக்கு உங்க புடவை உங்களுக்கு ரொம்பவும் எடுப்பா இருக்கு மிஸ்!....
ஆங்.... சரி.... இருந்தாலும் நீ இன்னும் நல்லாப் படிக்கணும்!
சார், நான் உங்களை எங்கேயோ பாத்த மாதிரி இருக்கே...
இதுக்குத்தான் மாசத்துக்கு ஒரு தரம் வராம தினமும் ஸ்கூலுக்கு வரணுங்கறது. நான்தான்டா உங்க கிளாஸ் வாத்தியார்.
எங்க வீட்டுக் கோழி புத்திசாலிடா!
எப்படிடா சொல்றே?
என் தம்பி இரண்டுல இரண்டு போக ஒன்னுன்னு எழுதி வச்சிருந்த சிலேட்டு மேல ஒரு முட்டை இட்டுச் சரிபண்ணிட்டிருக்கு பாரேன்!
தேனிராஜதாசன்
ஹோம் வொர்க்குகள்லாம் இன்னைக்கு ரொம்பச் சரியா போட்டிருக்கீங்களே... எப்படி?
ஹி... ஹி... இதையெல்லாம் என் பேரன்தான் பண்ணிக் குடுத்தான்!
மு. திருநாவுக்கரசு
என்னடா முதுகிலே காயம்?
அப்பா அடிச்சார்!
ஏன்டா?
நாளைக்குப் பரீட்சை ரிசல்ட் வருதே!
அதுக்கு ஏன் இன்னிக்குப் போட்டு அடிச்சார்?
நாளைக்கு அவர் வெளியூர் போறாராம்.
தேனிராஜதாசன்



தங்க

ஓர் ஊரில் ஏழை விவசாயி ஒருத்தன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ராஜா, சங்கர், வேலு என்று மூன்று மகன்கள். அவர்களில் கடைக்குட்டி வேலு எதற்கும் துப்பில்லாதவன், சோம்பேறி என்று அவன் பெற்றோர் கருதினர்.

ஒரு நாள் மூத்தவன் ராஜா தான் காட்டுக்குப் போய் விறகு வெட்டி வருவதாகச் சொல்லிப் புறப்பட்டான். பெற்றவளுக்குப் பெரு மகிழ்ச்சி. பிள்ளை பசியால் வாடாதிருக்க வேண்டுமே என்று கட்டுச் சோறும் கலயம் நிறையத் தயிரும் கட்டிக் கொடுத்தாள்.

மூத்தவனான ராஜாவும் கோடரியோடும், சோற்று மூட்டையோடும் காட்டுக்குள் சென்றான்.

வழியில் தாடியும் முடியும் நரைத்த ஒரு கிழவன் தென்பட்டான். கிழவன் மிகவும் பசியோடு வாடிச் சோர்வாகத் தெரிந்தான்.

அவன் ராஜாவைப் பார்த்து, ''பையா! எனக்குப் பசி காதை அடைக்கிறது. உன் கையில் இருக்கும் சாப்பாட்டிலே எனக்கும் கொஞ்சம் கொடேன்,'' என்று கெஞ்சினான்.

அந்தப் புத்திசாலி ராஜா சொன்னான்: ''என்னால் முடியாதப்பா. இருக்கிறதை உனக்குக் கொடுத்துவிட்டு என்னை என்ன பட்டினி கிடக்க சொல்றியா?'' என்று கூறிவிட்டுக் காட்டினுள் சென்று மரம் வெட்ட ஆரம்பித்தான்.

கோடரி அவன் கையில் விழுந்து பெருத்த காயத்தோடு வீடு திரும்பினான்.

மறுநாள் விறகு வெட்டி வர இரண்டாவது மகன் சங்கர் புறப்பட்டான். அண்ணனைப் போலவே அவனும் கட்டுச் சோறோடும், கலயத் தயிரோடும் சென்றான்.

வழியில் சங்கரும் தன் அண்ணனைப் போலவே அதே நரைமுடிக் கிழவனைச் சந்தித்தான். இவனிடமும் கிழவன் உணவிற்காகக் கெஞ்சினான்.

சங்கர் தன் அண்ணனைப் போலவே, ''உனக்குச் சாப்பாட்டைக் கொடுத்துட்டு நான் திண்டாட முடியாது. போ!'' என்று கூறி விட்டுக் காட்டுக்குள் சென்றான்.

சிறிது நேரத்திலேயே அவன் தண்டனையை அனுபவித்தான். கோடரியால் இரண்டு வெட்டு வெட்டியிருப்பான். அவன் காலில் பலமாக ஒரு வெட்டு விழுந்தது. நொண்டிக் கொண்டே தன்னை நொந்துகொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

மூலம் : ஜாகோப் அண்ட் ஷில் ஹெல்ம் கிரிம்

வாத்து

மூன்றாவது நாள், மூன்றாவது பையன் வேலு, "அப்பா நான் காட்டுக்குப் போய் விறகு வெட்டி வரேன்," என்று தந்தையைக் கேட்டான்.

அவன் தந்தை, "உன் அண்ணன்மார் இரண்டு பேருமே காயப்பட்டு வந்து சேர்ந்திருக்காங்க. நீ காட்டுக்குப் போக வேண்டாம். உனக்கு ஒன்றும் தெரியாதுடா கண்ணா," என்று கூறினார்.

ஆனாலும் கடைக்குட்டி வேலு தான் போயே ஆக வேண்டும் என்று பிடிவாதம் செய்யலே, அவன் தாய் வேண்டா வெறுப்போடு மிகவும் பழைய சோறும், ஏதோ கொஞ்சம் புளித்த மோரும் மட்டுமே கொடுத்து அனுப்பினாள்.

காட்டுக்குள் அடியெடுத்து வைத்ததும் வழக்கம் போல் வழியில் அந்தக் கிழவன்தான் வரவேற்றான். "தம்பி, எனக்கு ரொம்பப் பசிக்குதுய்யா, தாகமா வேற இருக்கு. உன் கையிலே இருக்கறதைக் கொஞ்சம் கொடுத்தா நல்லா இருக்கும்," என்று கேட்டான்.

வேலு சொன்னான்: "தாத்தா, என்கிட்டே நொந்து போன பழைய சோறுதான் இருக்கு. புளிச்ச மோரும் இருக்கு. உங்களுக்குப் பரவாயில்லைன்னா நாம இரண்டு பேரும் பங்கிட்டுச் சாப்பிடலாம்."

அதைக் கேட்டு மனம் மகிழ்ந்து கிழவனும், "நான் எதைக் கொடுத்தாலும் சாப்பிடுவேன்," என்றான்.

வேலு பழைய உணவை வெளியில் எடுத்ததும் அது நல்ல விருந்தாக மாறியது. பச்சடி, காய், கூட்டு, கறி என்று பலவிதமாக இலையில் இருந்தது! ஆச்சரியப்பட்டுக் கொண்டே அந்த உணவை இருவரும் மகிழ்ச்சியோடு உண்டார்கள். ருசியான பல பானங்களைப் பருகினார்கள்.

தமிழில்: எஸ். சித்ரா

உணவு உண்டு முடித்ததும், கிழவன் வேலுவைப் பார்த்து, "தம்பி, உன் அன்புக்கும், இருக்கிறதை மத்தவங்களோடு பங்கிட்டு உண்ணணும்னு நினைக்கிற உன் உயர்ந்த பண்புக்கும் நான் உனக்கொரு அதிர்ஷ்டத்தைத் தரப் போறேன். அதோ இருக்கே அந்த பட்டுப் போன மரம், அதைப் போய் வெட்டு. அதன் வேரில் உனக்கு அதிசயம் காத்திருக்கு," என்றான்.

இவ்வாறாகச் சொல்லி விட்டு அந்த இடத்தை விட்டுக் கிழவன் விலகி விட்டான்.

பையன் ஆவலோடு கோடரியால் பட்டுப் போன மரத்தை வெட்டினான். வெட்ட வெட்ட அந்த மரம் வேரோடு சாய்ந்தது. அதன் வேரில் ஒரு வாத்து உட்கார்ந்திருந்தது. சாதாரண வாத்தல்ல. பார்த்தால் அதன் இறகுகள் எல்லாம் தங்கமயமாகக் காட்சியளித்தன. ஆச்சரியத்தால் விழிகள் விரிய அந்த வாத்தைத் தன் இரு கைகளாலும் அள்ளி அருகிலிருந்த ஒரு சத்திரத்திற்கு எடுத்து வந்தான். அன்று இரவு வேலு அந்தச் சத்திரத்தில்தான் தங்குவதாய் இருந்தான்.

அந்தச் சத்திரத்தின் சொந்தக்காரருக்கு மூன்று மகள்கள் இருந்தனர். அவர்களுக்கு அந்தத் தங்க வாத்தைப் பார்த்ததும் ஒரே ஆச்சரியம்! மகா சந்தோஷம். அந்த அதிசயமான வாத்தை எல்லோரும் தொட ஆசைப் பட்டனர். ஆளுக்கொரு இறகைப் பறித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசை.

வேலு வெளியே சென்ற நேரம் பார்த்து மூத்த பெண் திருட்டுத்தனமாக அவன் அறைக்குள் நுழைந்தாள். மெல்ல அந்தத் தங்க வாத்தினருகே சென்றாள். இறக்கையில் கையை வைத்து ஒரு சிறகைப் பறித்ததும்...

என்ன விந்தை! அவள் கை இறுக்கமாக அந்த வாத்தோடு ஒட்டிக் கொண்டது. அவளால் தன் கையை வெளியே எடுக்க முடியவில்லை. கோந்து போட்டு ஒட்டியது போல் ஒட்டிக் கொண்டது.

இரண்டாவது பெண் மெல்ல வந்து வாத்தின் தங்கச் சிறகு ஒன்றைத் தானும் பறிக்க வேண்டும் என்று நினைத்து, அதன் அருகே வந்

தான். அவள் அக்காளினருகே சென்று அக்காவைத் தொட்டதும் தொட்ட கையை எடுக்கவே முடியவில்லை.

இவ்வாறாக இருவரும் ஒட்டிக் கொண்டிருந்த போது, மூன்றாவது சகோதரி உள்ளே வந்தாள். அவளைக் கண்டதும் இரண்டு சகோதரிகளும், ''எங்கள் அருகே வராதே! நீயும் எங்களைப் போல ஒட்டிக் கொள்வாய்,'' என்று எச்சரித்தார்கள்.

ஆனாலும் மூன்றாவது பெண்ணுக்கு விஷயம் புரியவில்லை. தன் தமக்கைமார் இருக்கும் போது நாம் மட்டும் ஏன் அருகே செல்லக் கூடாது என்று அவர்களருகே சென்றாள். பின்னாலிருந்தவாறு அவர்களைத் தொட்டாலோ இல்லையோ, அவளும் அவர்களோடு ஒட்டிக் கொண்டாள்.

இப்பொழுது மூவரும் ஒன்றாக ஒற்றுமையாக ஒட்டிக் கொண்டனர். வெளியே வர முடியாமல் மூவரும் அன்று இரவு அங்கேயே தங்க வேண்டியதாகி விட்டது.

மறுநாள் காலை வேலு உள்ளே வந்து தன் தங்க வாத்தை எடுத்துக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு வெளியே வந்தான். அதனுடனேயே தொத்திக் கொண்டு வரும் மூன்று சகோதரிகளைப் பற்றி அவன் கவலையே படவில்லை.

மூவரும் வேறு வழியில்லாமல் அவன் போகும் போக்கிற்கேற்ப இடமும் வலமுமாய் வளைந்து



நெளிந்து அவன் பின்னாலேயே சென்றனர்.

இவ்வாறாக ஒரு வயல் காட்டுப் பக்கமாய் அவர்கள் வந்து கொண்டிருந்த போது நடுவில் ஒரு பாதிரியாரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் இந்த அதிசயமான காட்சியைப் பார்த்ததும், "அவமானம்! ஏய் துணிந்த கட்டைகளே, ஒரு வாலிபப் பையனைப் பிடிச்சுக்கிட்டு வயசுப் பெண்கள் மூணு பேரும் இப்படி வயற் காட்டில் ஓடறீங்களே, இதுக்கு என்ன அர்த்தம்?" என்று கோபித்துக் கொண்டார்.

அதோடு நிற்காமல், கடைசியாகப் போகும் சின்னப் பெண்ணைத் தடுத்து நிறுத்த முயன்றார். நேரடியாகத் தொட்டாரோ இல்லையோ, அவர்களுக்குப் பின்னாலேயே அவரும் ஒட்டிக் கொண்டு ஓடும்படி ஆகி விட்டது.

கொஞ்ச தூரம் போனதும் அந்த வழியே வந்த தபால்காரர் அந்த ஊர்வலத்தைப் பார்த்ததும், "என்ன, உங்க ஊர்ப் பாதிரியார் மூன்று பெண்களைத் துரத்திக்கிட்டுப் பின்னாலேயே ஓடறார்!" என்று சொல்லிக் கொண்டே பாதிரியாரின் கோட்டைப் போய்ப் பிடித்தார்.

அவ்வளவுதான். அவரும் அவர்கள் அணியில் சேர வேண்டியதாகி விட்டது!

இப்படி ஐந்து பேரும் ஒருவர் பின் ஒருவராக ஒட்டிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்த போது, வேலை முடிந்து மண்வெட்டியும் கடப்பாரையும் கையுமாய் வீடு திரும்பிக் கொண்டிருந்த இரண்டு பண்ணையாட்கள் எதிரில் வந்து கொண்டிருந்தனர்.

அவர்களைப் பார்த்தும் பாதிரியார், தன்னையும், தபால்காரரையும் விடுவிக்கும்படி அவர்களிடம் கெஞ்சினார். அவர்களும் ஒருவர் பின் ஒருவராக, பின்னாலிருந்த தபால்காரரைப் பிடித்து இழுத்ததுதான் தாமதம், அந்த இருவரும் ஒருவர் பின் ஒருவராக ஓடிக் கொண்டிருந்த வேலு குழுவினருடன் ஒட்டிக் கொண்டு ஓட நேர்ந்தது.

தங்க வாத்துடன் வேலு மற்றும் ஏழு பேரும் ஒரு நகரத்துக்குள் நுழைந்தனர்.

அந்த நகரத்தை ஆண்டு வந்த ராஜாவுக்கு ஒரு பிரச்னை.

ராஜாவுக்கு ஒரு மகள். அவள் சாதாரணப் பெண் அல்ல. பிறந்த நாள் முதல் சிரிக்காத சிடுமூஞ்சி. அவளைச் சிரிக்க வைத்துப் பார்க்க வேண்டும் என்று அரசனும் எப்படி எப்படியோ முயன்று பார்த்தான். எதுவும் சரிவரவில்லை.

கடைசியாக, ஒரு போட்டி வைத்தான். என்ன போட்டி? யார் அந்தச் சிரிக்காத இளவரசியைச் சிரிக்க வைக்கிறார்களோ அவருக்கே அவளைத் திருமணம் செய்து கொடுத்து விடுவதாய் அறிவித்தான்.

இந்தச் செய்தியை வேலு அறிந்தான். நாம் ஏன் முயற்சி செய்யக் கூடாது என்று நினைத்தான். அந்த



இளவரசி முன் தன் பரிவாரத்தோடு வந்தான். அந்தக் காட்சியைக் கண்ட வுடன் சிரிக்காத இளவரசிக்கு எங்கிருந்தோ சிரிப்புப் பொத்துக் கொண்டு கொட்டியது. விழுந்து, விழுந்து அரண்மனையே கலகலக் கும்படி சிரித்தாள்.

சிரிக்காதவளைச் சிரிக்க வைத் தாகி விட்டது! அப்புறம் என்ன? அரசன் முன் வேலு சென்று திரு மணம் செய்து வைக்குமாறு கேட் டான்.

வேலு ஒரு சாதாரணப் பிரஜை. பணம், காசு இப்படி எந்தவிதமான அந்தஸ்தும் இல்லாதவன். ஆகை யால் அரசன் எப்படித் தன் பெண்ணை அவனுக்குக் கொடுப்பது என்று தயங்கினான்.

எப்படியாவது அவனைத் தட்டிக் கழிக்க வேண்டுமென நினைத்து, "முதல் போட்டி சரி, இரண்டா வதாக ஒரு போட்டி இருக்கிறதே!" என்றான்.

"என்ன அது, சொல்லும்," என் றான் வேலு.

வேலுவிடம் ஒரு பெரிய பீப்பாய் நிறையச் சேமித்து வைத்திருந்த பழரசத்தைக் காட்டினான் மன்னன். "பார்த்துக் கொள். இத்தனை பழ ரசத்தையும் ஒரே மூச்சில் குடித்து முடிக்கக்கூடிய ஒரு ஆசாமியை அழைத்து வா. பிறகு பார்க்கலாம்," என்றான்.

வேலுவிற்கு உடனே தனக்கு முதன் முதலில் தங்க வாத்தை அளித்து உதவிய அந்த நரைத்த முடி கிழவன்தான் நினைவுக்கு வந்தான். அவனை அணுகினால் தனக்கு நிச்சயம் உதவுவான் என்று கருதி அந்தக் காட்டுக்குள் சென்றான்.

நரைத்த முடிக் கிழவன் இருந்த இடத்தில் அவனைக் காணவில்லை. ஆனால் வேறோர் ஆள் இருந்தான். அவனோ அருகிலிருந்த நீரோடை யில் அள்ளி அள்ளித் தண்ணீர் குடித்தும் நாக்கைத் தொங்கப் போட் டுக் கொண்டு பயங்கரமான தாகத் தோடு காணப்பட்டான்.

வேலுவைப் பார்த்ததும் அவன், "நான் என்னதான் தண்ணீர் குடித் தாலும் என் தாகம் தீரவில்லை. ஒரு பீப்பாய் நிறையப் பழரசம் கொடுத்



தாலும் குடித்து விடுவேன். ஆமாம்," என்று ஏக்கமாய்ச் சொன்னான்.


"நான் தருகிறேன்; என் கூட வர்றியா?" என்று அழைத்தான் வேலு.

அவனும் சம்மதித்தான்.

அவனை அரசனின் இடங்குக்கு அழைத்துச் சென்றான் வேலு. பழ ரசம் மொத்தத்தையும் காட்டினான். அவனும் பீப்பாய்ப் பழரசத்தை ஒரே மூச்சில் குடித்து முடித்தான்.

பழரசப் போட்டி முடிந்தது. வேலு வுக்கு வெற்றி. ஆனால் அரச னுக்கோ இன்னும் திருப்தியில்லை. எப்படியாவது அவனைத் தட்டிக் கழிக்க வேண்டும் என்று நினைத்துப் புது நிபந்தனை போட்டான். "பழ ரசம் பருகியது பெரிதல்ல. ஒரு மலை யளவு இருக்கும் ரொட்டிகளைச் சாப் பிட ஒருத்தரை அழைத்து வர முடி யுமா பார், பிறகு பார்க்கலாம்," என் றான்.

இந்த முறையும் வேலு தயங்க வில்லை. காட்டில் தனக்குச் சாதக மாக வெற்றி தரும் வெள்ளை முடி கிழவன் இருந்த இடத்திற்குச் சென் றான். அப்பொழுது அங்கே ஒரு புது ஆசாமி தன் வயிற்றைச் சுற்றி ஒரு



பெல்டைப் போட்டு இறுகக் கட்டிக் கொண்டிருந்தான். வேதனையில் தவித்துக் கொண்டு முனகிக் கொண்டிருந்தான்.

வேலு அவனருகில் சென்று, ''நண்பரே! நீங்கள் ஏன் உங்கள் வயிற்றை இப்படிக் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று வினவினான்.

அதற்கு அந்த மனிதன், ''என் வயிற்றில் எவ்வளவுதான் உணவைப் போட்டுத் திணித்தாலும் அது நிரம்ப மாட்டேன் என்கிறது. பசி... பசி! அதனால்தான் நான் வயிற்றை இறுக்கி இப்படிக் கட்டிக் கொண்டிருக்கிறேன்,'' என்று சொன்னான்.

வேலுவின் முகம் மலர்ந்தது. இனி மூன்றாவது போட்டியிலும் தனக்கு வெற்றிதான் என்பது உறுதியாயிற்று. அந்த அகோரப் பசி ஆசாமியைத் தன்னுடன் அரண்மனைக்கு வருமாறு அழைத்தான்.

அரசன் அதற்குள் அரண்மனை சமையலாளிடம் சொல்லி, கிடங்கில் இருக்கும் மாவையெல்லாம் பெரிய பெரிய ரொட்டிகளைச் செய்ய ஏற்பாடு செய்து விட்டான்.

ரொட்டிகள் மலை போல் குவிந்திருந்தன. பசியோடு வந்த மனிதன் அரை நாளில் ரொட்டி அனைத்தும் தின்று ஏப்பம் விட்டான்.

ஆக, அரசன் வைத்த போட்டியெல்லாவற்றிலும் வேலு வெற்றி பெற்று விட்டான்.

இனி திருமணம்தான் என்று அரசன் முன் சென்றான்.

இந்த முறை அரசனால் போட்டி எதுவும் வைக்க முடியவில்லை. மாறாக, இல்லாத பொருள் ஏதாவது கேட்டு வேலுவை மாட்ட வைக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

வேலுவைப் பார்த்து, ''எல்லாம் சரி. உனக்கு என் மகளையே தருகிறேன். அதற்கு மாறாக நீ என் தகுதிக்குத் தகுந்த மாதிரி சீர் கொண்டு வர வேண்டாமா? பெரிதாக ஒன்றுமில்லை. ஒரு கப்பல் — அது நிலத்திலும் செல்ல வேண்டும்; நீரிலும் செல்ல வேண்டும். அப்படி ஒரு வாகனம் இருந்தால் கொண்டு வா, போதும். மறு நிமிடமே உனக்குத் திருமணம்தான்,'' என்று நிபந்தனை போட்டான்.

வேலு இந்த முறையும் நம்பிக்கையோடு அதே கானகம் சென்றான். என்ன ஆச்சரியம்! இந்த முறை அந்த நரைமுடிக் கிழவனையே அங்கு பார்த்தான். அவனிடம் தனக்கு ஏற்பட்ட சோதனைகளையெல்லாம் சொன்னான்.

தாத்தா, ''உனக்காகப் பீப்பாய் பழரசத்தைக் குடித்தேன். மலையளவு ரொட்டியைத் தின்றேன். என்ன முழிக்கிறே? உனக்காகவே நான் தான் அப்படி வேறு, வேறு மனிதனாக வந்தேன். ஏன் செய்தேன் தெரியுமா? எல்லாம் உன் மனுஷத்தனத்துக்கும் கருணையான மனசுக்காகவும்தான். அதற்காகவே இப்பவும் உனக்கு நான் உதவறேன் கவலைப்படாதே!'' என்று ஆறுதல் சொன்னான்.

நீரிலும், நிலத்திலும் செல்லும் அதிசயமான கப்பலை வரவழைத்து வேலு முன் நிறுத்தினான்.

வேலுவிற்குச் சந்தோஷம் தாங்கவில்லை. நிலத்திலும் நீரிலும் செல்லும் அந்த வாகனத்தை ஓட்டிக் கொண்டு மன்னன் எதிரில் வேலு வந்து நின்றான். அதைப் பார்த்து உண்மையிலேயே மன்னனின் மதிப்பில் வேலு உயர்ந்து விட்டான். அவன் தன் மகளுக்கு ஏற்ற கணவன்தான் என்று தீர்மானித்தான்.

அப்புறம் என்ன? வேலு, இளவரசி திருமணம் அரண்மனையில் கோலாகலமாக நடந்தது.

அந்த மன்னனுக்குப் பிறகு வேலுதான் அரியாசனத்தில் அமர்ந்தான். நல்ல முறையில் ஆட்சி செலுத்தித் தன் அருமை மனைவியோடும் மக்களோடும் நெடு நாட்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தான்.







ஆகஸ்டு மாதம் நம் பாரதம் சுதந்திரம் பெற்றது தெரியும்! அதேபோல் மற்ற மாதங்களில் சுதந்திரம் பெற்ற நாடுகள்:

ஜனவரி: ஆஸ்திரேலியா,
பிப்ரவரி: இலங்கை,
மார்ச்: கிரீஸ், இத்தாலி,
ஏப்ரல்: இஸ்ரேல், ஸ்பெயின், ஜப்பான்.
மே: போலந்து, நார்வே,
ஜூன்: தாய்லாந்து,
ஜூலை: கனடா, பிரான்ஸ், ஆப்கானிஸ்தான், பிலிப்பைன்ஸ்.
ஆகஸ்டு: இந்தியா, சுவிஸ், இந்தோனேசியா,
செப்டம்பர்: மெக்சிகோ,
அக்டோபர்: சீனா,
நவம்பர்: துருக்கி,
டிசம்பர்: பின்லாந்து.

— திருநாவுக்கரசு.



தலைக்கு மேல் மலரும் பூ, தண்டின் பக்கம் சாயும் பூ, சுகம் தர விரியும் பூ, சூரியனை மறைக்கும் பூ. அது என்ன?

விடை: குடை

தலை இல்லை; கண்ணுண்டு.
மார்பில்லை; முதுகுண்டு.
இடுப்புண்டு; வாயில்லை.
கையுண்டு; நகமில்லை.
காலுண்டு; பாதமில்லை.
உடலுண்டு; உயிரில்லை.
இப்படி உள்ளதெது?
செப்படி எழிலரசி?

விடை: நாற்காலி.

— வி. ஜெரா. தெய்வானை,
விளாங்குப்பம்.



அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வெல்ட்டின் ராஜதந்திரத்துக்கு உதாரணமாய் உலவி வரும் துணுக்கு இது: ஒரு செனேட்டர் தமது கட்சியைப்

பற்றி ஜனாதிபதியிடம் எடுத்துச் சொன்னார். "நீர் சொல்வதும் சரிதான்," என்றார் ஜனாதிபதி.

அந்த செனேட்டரை எதிர்த்து மற்றொரு செனேட்டர் தம் கட்சியைப் பற்றியும் சொன்னார். "நீர் சொல்வதும் சரிதான்," என்றார் ஜனாதிபதி.

பக்கத்திலே ஜனாதிபதியின் மனைவி நின்று கொண்டிருந்தார். "என்ன இது! இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் நேர் எதிரிடையாகப் பேசுகிறார்கள். நீரோ, இரண்டு பேர் சொல்வதையும் சரி என்று சொல்லுகிறீரே! இது எப்படி முறையாகும்?" என்று அவர் கேட்டார்.

"நீ சொல்வதும் சரி," என்றார் ஜனாதிபதி.

— எல். முத்து, ஊத்தங்கரை.



மெக்காவில், இஸ்லாத்தின் நான்காம் கலிபாவான, அலி (ரலி) அவர்களின் ஆட்சிக்காலம் அது.

ஒரு சமயம், மன்னர் அலி அவர்கள் பள்ளிவாசலில் இருக்கும் பொழுது, ஒரு மனிதர் வேகமாக உள்ளே வந்து, அவசர அவசரமாக இறைவணக்கம் செய்துவிட்டு வெளியேற எத்தனித்தார்.

அதனைக் கண்ட மன்னர் அலி, அந்த மனிதரைக் கூப்பிட்டு, "அவசர வணக்கம் விரும்பத்தக்கதல்ல. திரும்பச் சென்று அமைதியாக வணங்கி விட்டு வா," என்று கூறினார்.

மன்னரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து மறுமுறை அமைதியாக வணங்கிவிட்டுத் திரும்பினார் அந்த மனிதர்.


அவரை நோக்கிய மன்னர் அலி, "இப்பொழுது கூறு! எந்த வணக்கம் சிறந்தது? முன்பு வணங்கியதா, இப்பொழுது வணங்கியதா?" என்று கேட்டார்.

"முன்பு வணங்கியதுதான்!" என்றார் அந்த மனிதர்.

"எப்படி?" அலி ஆச்சரியத்துடன் வினவினார்.

"முன்பு வணங்கியது இறைவனுக்குப் பயந்து, இப்பொழுது வணங்கியது, தங்கள் கையில் உள்ள சாட்டைக்குப் பயந்து," என்று அமைதியாக அந்த மனிதர் கூறினார்.

— ஆர். ஹஜீரா பானு, நீடூர்.



நம்பாத பிள்ளையார்

ஒரு முறை பக்தன் ஒருவன் பிள்ளையாரிடம் இவ்வாறு வேண்டிக்கொண்டான். "பிள்ளையாரப்பா, எனக்குப் பத்து ரூபாய் கீழே (மண்ணில்) கிடைக்க அருள் புரியுங்கள். நான் உங்களுக்கு ஐந்து ரூபாய் (சரிபாதி) தருகிறேன்," என்றான்.

பிறகு அவன் செல்கையில் ஒரு ஐந்து ரூபாய் நோட்டு ஒன்று கிடந்தது. உடனே அவன் அதை எடுத்துக் கொண்டு, "பார்த்திங்களா, பிள்ளையாரே, உங்களுக்கு என் மேல் நம்பிக்கையே இல்லையே. உங்களுடைய பங்கை எடுத்துக் கொண்டு மீதியைக் கொடுத்துள்ளீர்களே!" என்றான்.

எப்படி இவன் பதில்!


இ. ஸ்ரீவத்ஸன், திருச்சி — 17



இரண்டாவது உலகப் போரின் போது பேசும் சக்தியை இழந்தார் ஆர்கிப் மாக்ஸிமெம் கோ என்ற ரஷ்யர். 40 வருடங்களுக்குப் பிறகு அவர் ஒரு கனவு கண்டார். அக்கனவில் அவன் எதிரிகளால் போரில்

தாக்கப் படுவது போலவும், தான் நிராயுத பாணியாய் இருப்பது போலவும் தோன் றிற்று. தன்னுடைய நிராதரவான நிலையில் கத்திக் கொண்டே எதிரிகளின் மீது பாய்ந்து தாக்கி (கனவில் தான்) எதிரிகளை ஓடச் செய்கிறார். ஆனால் என்ன ஆச்சரியம்! அவருக்கு அதிர்ச்சியினால் பேசும் சக்தி திரும்ப வந்து விட்டது.

இந்திரா கோபாலன், திருச்சி — 14



"ரைட்"டான பேச்சு

ஆகாய விமானத்தை முதன் முதலாக ஓட்டிப் புகழ்பெற்ற ரைட் சகோதரர்கள் இருவருக்கும் பேச்சு என்றாலே சிறிதும் பிடிக்காது. அவர்கள் இருவரையும் ஒரு விருந்திற்கு அழைத்தார்கள். அந்த விருந்தின் போது பல இயந்திரங்களைக் கற்பனை செய்து அமைத்த அநேக நிபுணர்கள் வந் திருந்தார்கள் அவர்கள் முன்னிலையில் ரைட் சகோதரர்களைப் பேசச் சொல்ல வேண்டும் என்பது ஏற்பாடு.

விருந்துக்குத் தலைமை வகிப்பவர் வில்பர் ரைட்டை அழைத்துப் பேசும்படி கேட்டார். வில்பர் எழுந்து திக்கிய குரலில், "இதில் ஏதோ தவறு நேர்ந்து இருக்கிறது. பேசுகிற வன் நான் அல்ல. என் சகோதரன் ஆர்வில் தான் பேசுவான்," என்றார்.

உடனே ஆர்வில் எழுந்து நின்று, "பேச்சை வில்பர் பேசி விட்டார்," என்று சொல்லி உட்கார்ந்தார்.

எல். முத்து, ஊத்தங்கரை



பதினாறு பேறு...

திருமண நிகழ்ச்சிகளிலும், மற்றைய மங்கல வைபவங்களிலும் பல பெரியவர்கள் ஆசி வழங்கும் போது, "பதினாறு பேறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!" — என்று வாழ்த்துவதைக் கேட்டிருப்பீர்கள்...!

அந்தப் பதினாறு பேறுகள் என்ன என்று தெரியுமா? தெரியாதெனில் தெரிந்து கொள் ளுங்களேன்:

1. புகழ், 2. கல்வி, 3. மனத்திண்மை, 4. வெற்றி, 5. மக்கள் பேறு, 6. துணிவு, 7. செல்வம், 8. தானியங்கள், 9. சுகம், 10. நல்லனுபோகம், 11. அறிவாகிய ஞானம், 12. அழகு, 13. பெருமை, 14. அறமனமு டைய குடிப்பிறப்பு, 15. நோயின்மை, 16. நீண்ட ஆயுள்... ஆகியவைதான்...!

அடேயப்பா... இத்தனையையும் எப்படி மனத்தில் வைத்துக் கொள்ளுவது என்றா மலைக்கிறீர்கள்...?

கவலைப் படாதீர்கள். உங்களது கவலையை அறிந்துதான் காளமேகப் புலவர் நான்கே வரிகளில் பதினாறு பேறு களையும் அழகிய முறையில் அடுக்கிய தோடு....

இந்தப் பதினாறு பேறுகளையும் தந்தருளு மாறு மதுரை மாநகரிலே உறைந்து திரு வருள் தந்தருளும் சோமசுந்தரப் பெரு மானையும் வேண்டுவதைப் போலவே எழுதியுள்ளார்.

காலையில் இறைவழிபாடு செய்யும் குழந் தைகள் இதனைச் சொல்லி வேண்டினால் பக்தி ஏற்படுவதோடு பதினாறு பேறுகளை யும் மறந்துவிடாமல் இருக்கவும் உதவும்... சரி.. சரி.... அந்தப் பாடலைச் சொல்லட் டுமா...?

"துதிவாணி வீரம், விசயம் தானம், துணிவு தன
மதி தானியம் சௌபாக்கியம் போகம், அறிவு, அழகு
புதிதாம் பெருமை, அறம், குலம், நோவகல், பூண்வயது
பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே....!"

இருங்கை சேதுபதி



என்ன அது என்ன?

1. ஆடாமல் பாடும் அசையாமல் பேசும் அது என்ன?

2. ஒற்றைக்கால் குள்ளனுக்கு எட்டுக் கைகள் அது என்ன?

3. கணக்கிற்குப் பயன்படாத கோணங்கள் யாவை?

4. வீடில்லா நகரங்கள், நீரில்லா சமுத்தி ரங்கள். அது என்ன?

5. வெள்ளைப்பாலில் கறுப்புத் திராட்சை மிதக்குது. அது என்ன?

6. கைக்குள் ஏறும் காலுக்குள் ஏறாது. அது என்ன?

7. தட்டும் தாளம் நின்று விட்டால் ஆட்டம் எதுவும் நடக்காது? அது என்ன?

விடைகள்

1. வானொலி 2. குடை 3. அரக்கோணம், கும்பகோணம் 4. தேசப்படம் 5. கண் 6. வளையல் 7. இதயம்



குழந்தை மலர்

அறியாமை குடிகொண்டுள்ள பெற்றோர்களாகிய நாம் மட்டும் தலையிடாமல் இருந்தால், குழந்தைகள் ஒருவிதச் சூது வாதையும் அறியாமலே இருப்பார்கள்!

— மகாத்மா காந்தி.

குழந்தைகளைத் திருத்த நல்ல வழி அவர்களைப் பாராட்டுவதுதான்.

—ஸெரிடான்.

ஏழையின் செல்வங்களுக்குக் குழந்தைகள் என்று பெயர்!

— டேனிஷ்.

குழந்தையின் வாயிலிருந்து அறிவு ஞானம் பிறக்கிறது!

— இயேசுநாதர்.

குழந்தை வளர்ப்பு என்பது ரொம்பவும் சுலபமான வேலை. குழந்தை உன்னுடையது அல்ல; பிறருடையது என்று பாவித்துக் கொள்; அவ்வளவுதான்! பிறருடைய குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும் என்பது தெரியாதவன் எவனுமே இந்த உலகத்தில் இல்லை!

— பிங்கி ராஸ்பி.

சிறிது அன்பு குழந்தையிடம் காட்டு! அடடா! எத்தனை கொள்ளையாகத் திரும்பவும் கொட்டுகிறது, அது!

— ரஸ்கின்.

குழந்தைகள் இல்லாத வீடு சூன்யமானது! குழந்தைகளே நிரம்ப வட்டிக்கு விடக்கூடிய பெருஞ்செல்வமாகும்!

— திரு. வி. க.

தொகுப்பு: அ. சுப்பையன், செட்டிகுறிச்சி.



முழு முதல் முட்டாள்

ஒரு சமயம் மாமன்னர் அக்பர் அரசவையில் பீர்பாலிடம் நாட்டிலுள்ள முழுமுட்டாள்களின் பட்டியலை உடனடியாகத் தயாரித்துக் கொடுக்கும்படி கட்டளை இட்டார். பீர்பாலும் காரணம் கேட்கவில்லை. பத்து நாட்களில் பீர்பால் முழு முட்டாள்கள் பட்டியலை எழுதி அக்பரிடம் சமர்ப்பித்தார். அப்பட்டியலில் முதலில் இருந்த பெயரைப் படித்ததும் அவரது முகம் சிவந்தது.

உடனே பீர்பாலை அழைத்து, "என்ன இது? முட்டாள்கள் பட்டியலில் என் பெயர் முதலில் இருக்கிறது?" என்று கோபத்துடன் கேட்டார்.

"உங்களுக்குக் குதிரைகள் மீது அளவு கடந்த ஆசைதான். அதற்காக முன்பின் தெரியாத ஓர் அராபிய வியாபாரியிடம் முன் பணம் கொடுத்தனுப்பிய உங்களை நான் எதில் சேர்ப்பது?" என்று அவரையே கேட்டார்.

"நீர் சொல்வதைப் பார்த்தால் அவன் திரும்பி வர மாட்டான் என்று சொல்கிறீர்களா? அப்படி அவன் வந்து விட்டால்?" என்றார் அக்பர்.

"அவன் வரும் வரை பட்டியலில் உங்கள் பெயர் முதலில் இருக்கட்டுமே; அப்படி அவன் வந்து விட்டால் உங்கள் பெயரை அடித்து விட்டு, என் பெயரை அந்த இடத்தில் எழுதி விடுகிறேன்" என்றார், பீர்பால்.


— புரசை சிவம்.



ஜப்பானில் குழந்தைகள் பேச ஆரம்பித்தவுடன், பெற்றோர்கள் முதலில் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் வார்த்தைகள் 'அன்பு, மரியாதை, ஜப்பான்,' என்ற சொற்கள்தான்! பேச ஆரம்பிக்கும்போதே தன் நாட்டின் பெயரைச் சொல்லப் பழக்கி தேசபக்தியை வளர்க்கிறார்கள்.

— எஸ். விஜயா சீனிவாசன்,
திருச்சி — 14.

நாகரத்தினம்



மன்னரே! என் பெயர் சுதன். என் தந்தை ஒரு வைத்தியர். அவரிடம் வைத்தியத் தொழிலை முறையாகக் கற்றுக் கொண்டவன். அவருடைய மறைவிற்கு நம் நாட்டின் தலை நகரான இந்தப் பவழபுரத்தில் மருத்துவத்தொழிலைத் தொடங்கலாம் என்று என் கிராமத்திலிருந்து கிளம்பி வந்தேன். முந்தா நாள் — அதாவது சனிக்கிழமை காட்டு வழியில் வரும் பொழுது இருட்டிவிட்டது. அப்பொழுது வயதாகிப் போனதால் உடல் சுருங்கிப் போன நாகப் பாம்பு இந்த நாகரத்தினக் கல்லை உமிந்து விட்டு அதன் ஒளியில் இரையைத் தேடிக் கொண்டிருந்தது. நான் சடாரென்று இந்த நாகரத்தினக் கல்லின் மீது மண்ணைப்போட்டு மூடி விட்டு, காட்டின் எல்லைக்கு அருகில் இருக்கும் சத்திரத்திற்கு வந்து விட்டேன். நேற்று — அதாவது ஞாயிற்றுக்கிழமை மதியம் மறுபடியும் காட்டின் அதே பகுதிக்குச் சென்றேன். மண்ணை நீக்கி விட்டு நாகரத்தினக் கல்லை எடுத்துப் பத்திரப் படுத்தி வைத்துக் கொண்டேன். நேற்று மாலை மீண்டும் அதே சத்திரத்திற்குத் திரும்பி வந்தேன். இரவு அங்கே..... இதோ, இவன் என்னிடம் பேசிக் கொண்டிருந்தான். பேச்சுவாக்கில் நாகரத்தினக் கல்லைப் பற்றி இவனிடம் கூறினேன். இன்று காலையில் கண் விழித்துப் பார்த்த பொழுது இவனையும் காணோம்; என் இடுப்பில் வைத்திருந்த் நாகரத்தினக் கல்லையும் காணோம். நான் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த பொழுது இவன் என்னிடமிருந்து கவர்ந்திருக்கிறான். தயவு செய்து இதை என்னிடம் கொடுத்து விடுங்கள். இது நான் கண்டெடுத்த நாகரத்தினக் கல்தான்' என்ற சுதன், மன்னரை வணங்கி விட்டு அமைதியாக நின்றான்.

மன்னர் ஜெயசிம்மனின் பார்வை சுதனுக்கு எதிரே நின்று கொண்டிருந்த இளைஞனின் மீது சென்றது.

டி. ஜானகி



"டாக்டர்! ஒரு வாரமா ஒரே இருமல்..."

"இவ்வளவு நாள் என்ன பண்ணினே?"

"இருமிக்கிட்டே இருந்தேன்!"

ஒரு வினாடி அவனைக் கூர்ந்து நோக்கிய அவர், "நீ என்ன சொல்கிறாய்?" என வினவினார்.

மறுவினாடி மன்னரை வணங்கி விட்டு அவன் கூறலானான்.

"மேன்மை பொருந்திய மன்னரே! நான் இவ்வூர் வியாபாரி ஒருவரின் மகன். என் பெயர் ஆனந்தன். என் அத்தை மகளின் கல்யாணத்திற்குச் சென்று விட்டு நேற்று மாலை தான் காட்டு வழியாகத் திரும்பிக் கொண்டிருந்தேன். அப்பொழுது இந்த நாகரத்தினக்கல் எனக்குக் கிடைத்தது. இருட்டில் ஒளி வீசிக் கொண்டிருந்த இதன் பிரகாசம் என் கண்ணைக் கவர்ந்தது. உடனே எனக்குத் தங்கள் ஞாபகம் தான் வந்தது. தங்களின் மணி மகுடத்தில் இந்த நாகரத்தினக் கல்லைப் பொருத்தினால்... ஆஹா அழகுக்கு அழகு செய்வது போல்.... எத்தனை அழகாக இருக்கும் என்று எண்ணித்தான் இந்தக் கல்லை எடுத்துப் பத்திரமாக வைத்துக் கொண்டேன். நேரமாகி விட்டதால் பவழ புரத்திற்குள் நுழையாமல் இரவு சத்திரத்திலேயே தங்கி விட்டேன். அங்கு இருந்த சுதனிடம் பொதுவாக ஏதோ சில செய்திகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேனே யொழிய, இந்த விலை மதிக்க முடியாத ரத்தினக் கல்லைப் பற்றி இவனும் என்னிடம் கூறவில்லை. நானும் இதைப் பற்றித் தெரிவிக்க வில்லை. நன்றாகத் தூங்கி விட்டேன். விடியற்காலை கண்விழித்ததும் நேராகப் பவழ புரத்திற்கு வந்து விட்டேன். வீட்டிற்குச் சென்று என் வேலைகளை அவசர அவசரமாக முடித்துக்கொண்டு உங்கள் பாதத்தில் இதைச்சமர்ப்பிக்க ஓடோடி வந்தேன். தயவு செய்து எளியவனின் காணிக்கையை ஏற்றுக் கொள்ளுங்கள்."

ஆனந்தனின் பேச்சைக் கேட்ட அரசரின் அகமும் புறமும் குளிர்ந்தது.

"ஆனந்தா! இந்த நாகரத்தினக் கல்லை எனக்காகவா கொண்டு வந்தாய்?"

"ஆம். மன்னரே!"


"எதற்காக?"

"என்னைப் போன்ற சாதாரண ஆட்களிடம் அக்கல் இருப்பதைவிட, எங்களுக்குத் தலைவராக இருக்கும் தங்களிடம் இருந்தால் இந்த நாகரத்தினக்கல்லின் மதிப்பு பன் மடங்கு இன்னும் அதிகரிக்கும் என்று எனக்குத் தோன்றியதால் தங்களுக்காகவே கொண்டு வந்துள்ளேன்."



தன்குடிமகன்தனக்காகக்கொண்டு வந்திருக்கும் விலை மதிக்க முடியாத கல்லைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போனார் மன்னர்.

பிறகு சுதனைப் பார்த்து, ''இளைஞனே! இந்தக் கல்லை நீதான் கண்டு பிடித்ததாகக் கூறுகிறாய். இதைப் பார்த்ததும் உனக்கு என் ஞாபகப்



வந்ததா?'' என்று கேட்டார்.

''மன்னித்து விடுங்கள் மன்னரே! அந்தச் சமயம் தங்களின் நினைவு எனக்கு வர வில்லை. ஆனால் வேறு ஒரு முக்கியமான நினைவு வந்தது. அது என்ன வென்றால்.....''

வார்த்தையை முடிப்பதற்குள் மன்னர் சீறினார். ''சுதன்! மன்னனாகியஎன்மீதுகொஞ்சமும்அன்போ விசுவாசமோ இல்லாதவன் நீ. எனவே உன் பேச்சைக் கேட்க நான் தயாராக இல்லை. உண்மையிலேயே இந்தக் கல்லை எடுத்திருந்தால் என் ஞாபகம் கட்டாயம் உனக்கு வந்திருக்கும். ஏனெனில் விலையுயர்ந்த பொருளைப் பார்க்கும் பொழுது குடிமகனுக்கு அப்பொருளை மன்னருக்கு கொடுத்து விட்டு அவரிடம் வெகுமதி வாங்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுவது தான் இயற்கை.....

''இல்லை மன்னரே... நான்....''

''நிறுத்து. உன் நொண்டிச் சாக்கை ஏற்றுக் கொள்ள நான் தயாராக இல்லை. நீ போகலாம்,'' என்று கடுமையான குரலில் கூறினார். பிறகு மந்திரியைப் பார்த்து, ''மார்த்தாண்டரே! எனது மகனின் பிறந்தநாள் இன்றைக்கு முப்பதாவது நாள் வருகிறது. அன்று ஆனந்தனுக்கு ஐயாயிரம் பொற் காசுகள் கொடுத்துக் கௌரவிக்க வேண்டிய ஏற்பாடு களைச் செய்யுங்கள்,'' என்று உத்தர விட்டார்.

''உத்தரவு அரசே!'' என்றார் மந்திரி.

பட்டுத்துணியில் ஒளியை வீசிக் கொண்டிருந்த அந்த நாகரத்தினக் கல்லை மன்னர் ஆர்வத்தோடு மீண்டும் தொட்டுப் பார்க்கலானார்.

கிட்டத்தட்ட ஒரு திங்கள் உருண்டோடி விட்டது.

அன்றுமாலைதோட்டத்தைச்சுற்றி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மன்னரின் மகன், பத்து வயது பாலகனான மகேந்திரனை நல்ல பாம்பு கடித்து விட்டது. இந்தச் செய்தி காட்டுத் தீ போல் ஒரு நொடியில் பவழபுரம் முழுதும் பரவ ஆரம்பித்து விட்டது. கடைத் தெருவில் பூ விற்றுக்கொண்டிருந்தசுதனின் காதில் இந்தச் செய்தி விழுந்ததோ இல்லையோ, பூக்கூடையை அருகிலிருந்த ஆளிடம் கொடுத்து விட்டு அரண்மனை நோக்கி விரைந்து வந்தான்.

நல்லகாலம்! வாயிற் காப்போன் யாரையும் தடை செய்ய வில்லை. எப்படியாவது, யார் மூலமாவது இளவரசன் மகேந்திரன் உயிர் பிழைத்தால் போதும் என்று எண்ணியபடி வருபவர் அனைவரையும் உள்ளே விட்டுக் கொண்டிருந்தான்.

இளவரசன் இருந்த அறைக்குள் சுதன் நுழைந்த பொழுது — வாடிக் கொண்டிருக்கும்ரோஜா மலர் போல, பிடுங்கி எறியப்பட்ட செடி போல மகேந்திரன் கண்களை மூடியபடி மயக்க நிலையில் இருந்தான்.

ஏதேதோ மூலிகைகளைப் பயன் படுத்தியும் இளவரசன் கண்திறக்காது இருப்பதைக் கண்ட அரண்மனை வைத்தியர் திகைத்து, என்ன செய்வது என்று தெரியாமல் எப்படி இளவரசன் உயிரைக் காப்பாற்றுவது என்று புரியாமல் கலங்கி வேதனைப் பட்டுக் கொண்டிருந்தார்.

''எப்படியாவது என் ஒரே அருமை மகனைக் காப்பாற்றுங்கள்,''



என்று ராணி கதறிக் கொண்டிருந்தாள்.

சோகத்தின் எல்லைக்கே சென்று விட்ட மன்னர் கலங்கிய விழிகளோடு விழிதிறவாமல் இருக்கும் மகனை வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி இருந்தார்.

மன்னரின் அருகில் கவலையோடு நின்று கொண்டிருந்த் மந்திரியின் அருகில் சுதன் சென்றான்.

''மந்திரியாரே! அன்று அரசு சபையில் மன்னர் எடுத்துக் கொண்ட அந்த அசல் நாகரத்தினக்கல்லை தயவு செய்து உடனே என்னிடம் கொடுங்கள். நான் இளவரசனின் உயிரைக் காப்பாற்றுகிறேன். இது உறுதி. தயவு செய்து கால தாமதம் செய்யாமல் உடனே கொண்டு வரச் சொல்லுங்கள்,'' என்றான்.

ஒருவினாடிதிகைத்தமந்திரிஉடனே அந்தக் கல்லை மன்னரின் அறையிலிருந்து வரவழைத்துக் கொடுத்தார்.

எல்லோரையும் சற்றுத் தள்ளி நிற்கச் சொல்லிவிட்டு சுதன் இளவரசரின் அருகில் வந்தான். நாகரத்தினக்கல்லைப் பாம்பு கடித்த இடத்தில் வைத்தான். சிறிது நேரம் கழித்து எடுத்தான். இதே மாதிரி ஏழெட்டு முறைகள் செய்தான்.

என்ன ஆச்சர்யம்! மகேந்திரன் மெதுவாகக் கண்விழித்து, ''அம்மா..'' என்று மெல்லிய குரலில் முனக ஆரம்பித்தான்.

தள்ளி நின்று கொண்டிருந்த அரசியின் காதில் மகனின் முனகல் தேனாய் இனித்தது. பாகாய் இனித்தது, பாலாய் மணத்தது. அரண்மனை வைத்தியர் அவன் அருகில் ஓடி வந்து நாடியைப் பிடித்துப் பார்த்தார். முகம் மலர்ந்தது. ''மகேந்திரனின் உயிருக்கு ஆபத்தில்லை,'' என்று கூறிவிட்டார்.

மன்னருக்குப்போன உயிர் திரும்பி வந்தது போன்ற மகிழ்ச்சி. தகுந்த சமயத்தில். எமனின் வாயிலிருந்து தன் மகனைக் காப்பாற்றியவனுக்கு நன்றி சொல்லச் சுதனைத் தேடினார்.

அவனைக் காணவில்லை.

தன் கைகளைச் சுத்தமான நீரில் கழுவவும், நாகரத்தினக்கல்லைப் பாலில் கழுவவும் அரண்மனையின் பின் பக்கம் சுதன் சென்றிருப்பது மன்னருக்குத் தெரியாது.

மன்னர் மந்திரியின் அருகில் சென்று, ''மார்த்தாண்டரே! என் மகனைக் காப்பாற்றிய அந்த இளைஞனை எப்படியாவது என் முன்னால் கொண்டு வாருங்கள். என் நன்றியை அவனுக்குத் தெரிவித்துப் பரிசு கொடுக்க விரும்புகிறேன்,'' என்றார்.

''மன்னரே! அந்த இளைஞன் யார் என்று தெரிகிறதா?'' என்று வினவினார் மந்திரி.

''மறக்கவில்லை. நாகரத்தினக் கல்லைத் தன்னுடையது தான் என்று வாதாடினவன் தானே?''

''ஆம் மன்னரே, ஆனால்..!'' மேற் கொண்டு மந்திரி பேசாமல் தயங்கி நின்றார்.


''ஏன பாதியிலேயே நிறுத்திவிட்டீர்கள். விஷயத்தை முழுமையாகக் கூறிவிடுங்கள்.''

தொண்டையைக் கனைத்துக் கொண்டு மந்திரி கூறலானார். ''மன்னரே, மன்னியுங்கள் அன்று தாங்கள் சரியான முறையில் தீர்ப்பு வழங்கவில்லை என்று எனக்குத் தோன்றியது. அதற்கேற்றாற்போல் நான் இருப்பிடத்திற்குச் சென்றதும் சுதன் என்னைத் தேடி வந்து விட்டான். என்னிடம்என்னசொன்னான் தெரியுமா?''

''என்ன சொன்னான்?''

'''மந்திரியாரே! அரசர் ஆராயாமல் தீர்ப்பு வழங்கிவிட்டார். ஏழையான என்னால் எதுவும் செய்ய





காலையில் எழுந்தது முதல் இர
உறங்கச் செல்லும் நேரம் வரை ஒவ்
வொரு நிமிடமும் நாம் ஏதாவது ஒரு
பிளாஸ்டிக் பொருளை உபயோகப்படுத்
திக் கொண்டேதான் இருக்கிறோம்.
இந்தப் பிளாஸ்டிக் தோன்றியதே ஒரு
விசித்திரமான நிகழ்ச்சியில்தான்.
பில்லியர்ட் என்றவிளையாட்டு விளை
யாட முன்பெல்லாம் யானைத் தந்தத்தி
னால் செய்த பந்துகளையே பயன்
படுத்திவந்தனர். யானைத்தந்தம்கிடைப்ப

முடியாமலிருக்கிறது. உண்மையிலேயே நாகரத்தினக் கல்லைக் கண்டெடுத்தது நான்தான். சந்தேகம் இருந்தால் உடனே என்னுடன் காட்டிற்கு வாருங்கள். அதைக் கண்டெடுத்த இடத்தை நான் காட்டுகிறேன்,' என்றான். உண்மையை அறிய விரும்பி உடனே நானும் அவனுடன் காட்டுக்குச் சென்றேன். சிறிய மண்குவியல் தெரிந்தது. அதற்குச் சற்றுத் தள்ளி வயதான நாகப் பாம்பு இறந்து கிடந்தது தெரிந்தது. சுதன் கூறியது உண்மைதான் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். உடனே ஆனந்தனை வரவழைத்து அவன் காட்டில் கண்டெடுத்த இடத்தைக் காட்டச் சொன்னேன். பாம்பால் ஊர்ந்து வர முடியாத மிக மிக வழவழப்பான பெரிய சதுரமானகல் ஒன்றைக் காட்டினான். உடனே நான் சுதன் கண்டெடுத்த இடத்திற்கு அவனை அழைத்துச் சென்றேன். அங்கு சென்றதுமே திடுக்கிட்டான். நான் உண்மையைக் கண்டு பிடித்ததை அறிந்து கொண்டான். நான் மிரட்டியதில் உண்மையை ஒப்புக் கொண்டு விட்டபன். ராஜாவின் நன்மதிப்பைப் பெற்று, அவரிடம் வெகுமதிகள் வாங்கவும், அரச சபையில் உயர்ந்த பதவியைப் பெறுவதற்காகவும் சுதனிடமிருந்த நாகரத்தினக்கல்லை அவன் தூங்கும் பொழுது கவர்ந்து வந்ததாகக் கூறினான். பிறகு தான் இனி பேராசைப்பட மாட்டேன் என்றும், மன்னர் முகத்தில் விழிப்பதற்குத் தயக்கமாக இருப்பதால் பக்கத்து நகரத்துக்குச் சென்று ஏதேனும் வியாபாரம் செய்யப் போவதாகக் கூறி நம் பவழபுரத்தை விட்டே சென்று விட்டான்.

நம் இளவரசர் பிறந்த நாள் அன்று உண்மையைத் தங்களிடம் கூறி, தங்களை வியப்பில் ஆழ்த்த எண்ணினேன். அதுவரை சுதனை எனக்குத் தெரிந்த பூ வியாபாரி ஒருவரிடம் வேலை செய்யும்படி கூறினேன். நான் தங்களிடம் உண்மையைக் கூறுவதற்குள் தாங்களே உண்மையை உணரும்படியான நிலை ஏற்பட்டு விட்டது.''

மந்திரி சொல்லி முடித்தார். மன்னர் திகைத்து நின்றார்.

அப்பொழுது இருவரிடமும் விடை பெற்றுக் கொள்வதற்காகச் சுதன் அங்கே வந்தான். மன்னரைப் பார்த்து, அரசே! அன்றே சொன்னேன் நான் ஓர் வைத்தியரின் மகன் என்று. தன் வாழ்நாளில் ஒருமுறை கூட யாரையுமே தீண்டாத நாகப் பாம்பு, வயதாகிப் போனால் உடல் தளர்ந்து மிகவும் சுருங்கிவிடுமாம். அப்பொழுது அதன் உடலில் நாகரத்தினக்கல் தோன்றுமாம். யாரையுமே கடிக்காததால், விஷம்தான் நாகரத்தினக் கல்லாக மாறுகிறதாம். இருட்டில் அக்கல்லைக் கக்குமாம். அக்கல்லின் ஒளியில்தான் அது இரை தேடுமாம். அக்கல்லை அதற்குத் தெரியாமல் எடுத்து வந்தால் இருட்டில் அது இறந்து விடுமாம். ஆனால் பாம்பு கடித்த ஒருவனுக்கு, கடித்த இடத்தில் இந்த நாகரத்தினக் கல்லை வைத்து வைத்து எடுத்தால், அக்கல் விஷத்தைத் தானே உட்கிரகித்துவிடுமாம். இதை என் தந்தை எனக்குக் கூறியிருக்கிறார். அது மட்டுமல்ல; அப்படிப்பட்ட கல் கிடைத்தால் மனித உயிரைக் காக்க மட்டுமே பயன் படுத்து என்று கட்டளையுமிட்டிருந்தார். அதனால் தான் நாகரத்

ளாஸ்டிக் தோன்றிய கதை

தற்கு அரியதாகவும், மேலும் உலகம் முழுவதும் பில்லியர்ட் விளையாட இது போல நிறையப் பந்துகள் தேவைப்பட்ட தாலும், பந்து தயாரிக்கும் கம்பெனி ஒன்று கீழ்க்கண்டவாறு விளம்பரம் செய்தது.:

'பில்லியர்ட் விளையாட யானைத் தந்தத்தைத் தவிர வேறு ஏதாவது பொருளில் அதே போன்று பந்து உருவாக்கித் தந்தால் பத்தாயிரம் டாலர் (தற்போதைய மதிப்பு கிட்டத்தட்ட ரூ. 1½ லட்சம்) பரிசளிக்கப்படும்.'

அப்படி ஒரு பொருளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார் அமெரிக்காவில் நியூஜெர்ஸி மாநிலத்தைச் சேர்ந்த யூக்ஜோஹன் ஹாய்டேனா என்பவர். அப்போது அவர் விரலில் ஒருநாள் அடிபட்டுவிட்டது. அடிபட்ட இடத்தில் தடவிக் கொள்ள கொலோடியன் (ஒருவிதப் பிசுபிசுப்பான திரவம்) என்ற மருந்தைத் தேடினார். அவர் தேடிய இடத்தில் கண்டது என்ன? அந்தக் கொலோடியன் அலமாரியில் சிந்தி ஒரு வகையான இறுக்கம் அடைந்திருந்தது. தடவிப் பார்த்தால் ரப்பரைப் போன்று வழவழப்பாக இருந்தது.

உடனே ஹாய்டேனா மூளையில் மின்னல் அடித்தது. இதை வைத்து பில்லியர்ட் பந்து செய்தால் என்ன? உடனே யூக்ஜோஹன் ஹாய்டேனா தமது சகோதரருடன் இணைந்து சோதனைச் சாலையில் பில்லியர்ட் பந்தை உருவாக்க முயற்சி செய்தார்.

அவர்கள் பில்லியர்ட் பந்தைத் தயாரிக்கப் போய், வேறு ஒரு பொருளை 1968 — இல் கண்டுபிடித்தனர். அதுதான் பிளாஸ்டிக்.

பஞ்சு, கற்பூரம், நைட்ரிக் அமிலம் முதலியவற்றைக் கொண்டு ஊடுருவிப் பார்க்கக் கூடிய செலுலாயிட் என்ற பிளாஸ்டிக் பொருளைக் கண்டுபிடித்தனர். அதுவே பின்பு பல சோதனைகளுக்கு உட்பட்டு இன்றைய பிளாஸ்டிக்காக உருவாயிற்று.

— வி. ஷங்கர், ஆமதாபாத் — 8.

தினக் கல் கிடைத்ததும் மனித உயிரைக் காப்பாற்றப் பயன் படுத்த வேண்டும் என்று நினைத்தேனேயொழிய, மகுடத்தை அலங்கரிக்கப் பயன் படுத்த வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. யாரையாவது, எந்த உயிரையாவது காப்பாற்றப் பயன் படும் என்று நினைத்தேனேயொழிய தங்கள் மகனுக்கே அது பயன் படும்என்று நான் நினைக்கவில்லை. பூ வியாபாரத்தைப் பாதியிலேயே விட்டு விட்டு வந்துவிட்டேன் வருகிறேன்,'' என்று கூறிவிட்டு வேகமாக அரண்மனையை விட்டு வெளியேறினான்.

மன்னரால் சில நிமிடங்கள் பேசவே முடியவில்லை. உண்மையின் வெப்பத்தை அவரால் தாங்க முடியவில்லை. மனத்தில் பலவகைப் பட்ட உணர்ச்சிகளின் கொந்தளிப்பு. உணர்ச்சிவசப்பட்ட குரலில் கூறலானார்.

''மந்திரியே! வசதியற்ற சூழ்நிலையில் பிறந்தும், நாகரத்தினக்கல்லை விற்றுப் பணக்காரனாக ஆக வேண்டும் என்று நினைக்காமல் ஏதாவது மனித உயிரைக் காக்கவேண்டும் என்று முன் வந்த சுதன் எங்கே? செல்வத்திலேயே பிறந்து, செல்வத்திலேயே வளர்ந்து தங்கம், வைரம், முத்து, பவழம், பச்சைக்கல், மாணிக்கம்போன்றவைகளால் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்தும் கூட அந்த நாகரத்தினக் கல்லைப் பார்த்து ஆசைப்பட்ட நான் எங்கே? வாதி, பிரதிவாதி இருவர் கூறியதையும் கேட்கத்தான் ஆண்டவன் இரண்டு செவிகளைக் கொடுத்திருக்கிறார். ஆனால் நான் பேராசையினால் ஒரு செவியை மட்டும் பயன் படுத்தியிருக்கிறேன். மற்றவர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது. எதையும் நன்றாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டும். நியாயத்திற்குத் தலை வணங்க வேண்டும் என்று உணர்ந்து கொண்டேன். தயவு செய்து சுதனை அழைத்து வாருங்கள். அவன் விருப்பப்படி நம் பவழபுரத்தில் மருத்துவம் செய்ய அனைத்து வசதிகளும் செய்து கொடுப்போம். இனி என் மகனுக்கு அவன் தான் அரண்மனை வைத்தியர்.''

மன்னர் உண்மையை அறிந்து கொண்டு சுதனின் விருப்பப்படி அவனுக்கு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கப் போவதை அறிந்த மந்திரி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

காட்டின் உட்பகுதிகளை மிகுந்த ஆர்வத்தோடு சுற்றிப் பார்த்துக் கொண்டு இருந்தான் பிரவீன். பள்ளி விடுமுறைக்காக மாமா வீட்டுக்கு வந்தவனை அந்தக் காட்டுப் பகுதிக்கு அழைத்து வந்திருந்தார் அவன் மாமா.

ஏராளமான மரங்கள் நெருக்கமாக வளர்ந்திருந்த அந்தக் காட்டில், குரங்குகளும், மான்களும், முயல்களும் மகிழ்ச்சியாக வாழ்ந்தன. மரங்களில் தங்கியிருந்த பறவைகள்



அன்று சேறு —

விதவிதமான ஒலிகளில் கூவிக் கொண்டு இருந்தன.

அங்கும், இங்குமாக மான்கள் துள்ளி ஓடியதைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு இருந்தான் பிரவீன். சில மான்கள் வெண்மையான ஒரு வகைப் பூக்களை ஆவலோடு உண்பதைப் பார்த்த பிரவீன், தன் மாமாவிடம், ''மான்கள் புல்லைத் தின்னும் என்று கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால் சில மான்கள் பூக்களைத் தின்கிறதே, என்ன ஆச்சரியம்! இந்தப் பூவையே முதன் முதலாக இப்போதுதான் பார்க்கிறேன்.''

''அப்படியா! சரி. அது இலுப்பைப்பூ. இது கோடையில் மலரும் பூ. இந்தப் பூக்களை மான்கள் விரும்பிச் சாப்பிடும். பிறகு இலுப்பை மரத்தின் அடியில், நிழலில் படுத்து ஓய்வெடுக்கும். கோடைக் காலத்தில் காடுகளில் தண்ணீர் கிடைப்பது கஷ்டம். இதனால் தாகத்தைத் தணித்துக் கொள்வதற்காகமான்கள்இலுப்பைப் பூவை விரும்பி உண்ணும். இதனால் தாகம் நீங்கும்,'' என்றார் மாமா.

''ஆச்சரியமாக இருக்கிறதே! விலங்குகளுக்கு எத்தனை கூர்மையான அறிவு!'' என்று வியந்தான் பிரவீன்.

''அதுமட்டுமல்ல, அவை தங்களுக்கு ஏற்படப் போகும் ஆபத்தை முன் கூட்டியே அறிந்து கொள்ளும் உள் உணர்ச்சி கொண்டவை,'' என்று மாமா சொல்லிக் கொண்டிருந்த போதே —

''கீக்கீ... கீக்கீ...'' என்று ஒரு குரங்கு ஓலமிடும் சப்தம் கேட்டது.


''குரங்கு ஏதோ ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறது. உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவே குரல் கொடுக்கிறது. என்ன நடந்தது என்று பார்ப்போம், விரைவாக வா,'' என்று சொல்லி விட்டு மாமா சப்தம் வந்த திசையில் ஓடினார்.

பிரவீனும் அவர் பின்னாலேயே விரைந்து ஓடினான்.

அங்கு சென்றபோது, ஒரு பரிதாபமான காட்சியை அவர்கள் பார்த்தனர். ஒரு பெரிய குரங்கு சேறும், சகதியுமாக இருந்த சதுப்பு நிலத்தில் மாட்டிக் கொண்டு, கரையேற முடியாமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது.

காட்டுச் செடிகளும், இலைகளும், கொடிகளும் அதன் உடலைப் பலமாகச் சுற்றிக் கொள்ளவே சேற்றில் இருந்து அதனால் மேலே வர முடியவில்லை. அவர்கள் இருவரையும் பார்த்த அது பரிதாபக் குரலில் அழுதது. 'என்னைக் காப்பாற்றுங்கள்' என்று அவர்களைக் கெஞ்சுவது போல் இருந்தது அந்தக் குரல்.

''எப்படி வந்து குரங்கு சேற்றுக்



இன்று நெருப்பு!

குள் மாட்டிக் கொண்டு விட்டது?'' என்றான் பிரவீன்.

''ஒரு மரத்தின் கிளையில் இருந்து இன்னொரு மரத்துக்குத் தாவும் போது, குரங்கின் பிடி நழுவி இருக்கிறது. அதனால் அது நடுச் சேற்றில் விழுந்து விட்டது. தப்பிக்கும் முயற்சியில் கையையும் 'காலையும் உதைத்துக் கொண்டதால் காட்டுக் கொடிகள் அதன் உடலைப் பின்னிக் கொண்டு அசைய விடாமல் செய்து விட்டன. இப்படித்தான் நடந்து இருக்க வேண்டும். ஏன் என்றால் குரங்குகள் சுலபமாக ஆபத்தில் சிக்குவது இல்லை,'' என்ற அவன் மாமா, மரங்களில் சுற்றிக் கொண்டு இருக்கும் காட்டுக் கொடிகளை எடுத்து வரச் சொன்னார்.

பிறகு கொடிகளை முடி போட்டு நீளமான கயிறு போலச் செய்தார். அவருக்கு இந்தப் பணியில் பிரவீனும் பெரிதும் உதவி செய்தான். பின்னர் இரண்டு பேரும் கொடிகளை முறுக்கேற்றி வலிமையான தேர் வடத்தைப் போலத் திரித்தனர். கொடியின் ஒரு முனையில் ஒரு கல்லைக் கட்டிச் சேற்றில் இருந்த குரங்கை நோக்கி வீசினர்.

குரங்கின் கையும், காலும் கொடிகளில் இறுக்கமாகப் பின்னிக் கட்டப்பட்டு இருந்ததால் அவர்கள் வீசிய கொடியைப் பிடித்துக் கொள்ள மிகவும் கஷ்டப்பட்டது. பிறகு ஒரு வழியாகக் கொடிக் கயிற்றைத் தன் பற்களால் பற்றிக் கொண்டது.

இரண்டு பேரும் மிகவும் கவனத்தோடும் பொறுமையாகவும் கயிற்றை இழுத்தனர். கொஞ்சம் கொஞ்சமாகக் குரங்கு அவர்களை நோக்கி வர ஆரம்பித்தது. அரை மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு பிரவீனும், அவன் மாமாவும் குரங்கைத் தரையில் இழுத்துப் போட்டனர்.

குரங்கு தரைக்கு வந்தவுடன் அவர்களை நன்றியோடு பார்த்தது. பின்னர் உடம்பை நன்றாக உதறிக் கொண்டதால் உடலில் இருந்த சேற்றை நீக்கி விட்டு வேறு வழியில் மெதுவாக நடந்து போயிற்று. பிரவீன் அதன் வாலைப் பார்த்தான். வாலின் நுனி வெட்டுப்பட்டு மொட்டையாக இருந்தது.

பிரவீனும், அவன் மாமாவும் குரங்கைப் பற்றிப் பேசியவாறே வீடு வந்து சேர்ந்தனர்.

ஒரு வாரம் கழிந்தது. பிரவீன் தன் மாமாவுடன் காட்டைச் சுற்றிப் பார்த்து வரப் புறப்பட்டான்.

இரண்டு பேரும் சிறிது தொலைவு நடந்து ஒரு மூங்கில் புதரின் அருகே அமர்ந்தனர். அந்த இடத்தில் கோரைப் புற்களும் மூங்கில் புதர்களும் அடர்ந்து வளர்ந்து இருந்தன.

பிரவீன் தான் எடுத்து வந்த காமெராவைத் தோளிலிருந்து எடுத்துத் தரையில் வைத்து விட்டுச் சற்றே இளைப்பாறினான். நடந்து வந்த அலுப்பினால் இருவருக்கும் தூக்கம் கண்ணைச் சுழற்றியது.

எவ்வளவு நேரம் தூங்கினார்களோ! திடீரென்று ஒரு குரங்கு கத்தும் சத்தம் அவர்களுக்கு மிக அருகில் கேட்டது. திடுக்கிட்டு விழித்

வேணு சீனுவாசன்

துக் கொண்ட போது, குரங்கு ஒன்று காமெராவைத் தன் கையில் எடுத்து வைத்துக் கொண்டு இருந்தது.

"மாமா, காமிராவை குரங்கு எடுத்துக் கொண்டு விட்டதே!" பதறினான் பிரவீன்.

என்ன செய்து காமிராவைக் குரங்கிடம் இருந்து திருப்பி வாங்கலாம் என்று யோசித்தார் மாமா. ஆனால் குரங்கோ, ஒரு பக்கமாகக் கை நீட்டி, ஏதோ சொல்லியது பதட்டமும், பரபரப்புமாய் இருந்தது அது.

"குரங்கு என்ன சொல்லுகிறது? ஒன்றும் புரியவில்லையே!" என்றான் பிரவீன்.

அப்போது திடீரென்று குரங்கு காமிராவோடு பாய்ந்து தாவி ஓட ஆரம்பித்தது. இதைச் சற்றும் எதிர் பார்க்காத அவர்கள் இருவரும் திகைத்தனர். குரங்கு சிறிது தூரம் ஓடிய பின்னர் அவர்கள் இருவரும் தன்னைத் தொடர்ந்து வருகிறார்களா என்று நோட்டம் விட்டது. அவர்கள் ஓடி வராமல் நின்று கொண்டே இருந்ததால் அதுவும் நிலத்தில் உட்கார்ந்து கொண்டது.

குரங்கு இப்போது மிகுந்த பதட்டத்தோடு காணப்பட்டது. நிலை கொள்ளாமல் தவித்தது. காமிராவை வைத்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வந்தது. அப்போதுதான் பிரவீன் குரங்கைக் கவனித்தான்.

"மாமா, இது நாம் காப்பாற்றிய குரங்குதான். உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா?" என்று கத்தினான் பிரவீன்.

"அப்படியா, எனக்குச் சரியாக நினைவு இல்லை. நீ எப்படி இது நாம் காப்பாற்றிய குரங்குதான் என்று கண்டுபிடித்தாய்?" என்றார் மாமா.

"குரங்கின் வாலைப் பாருங்கள். வாலின் நுனி வெட்டுப்பட்டு மொட்டையாக இருக்கிறது. அன்றே நான் கவனித்து இருக்கிறேன்," என்றான் பிரவீன்.

"அப்படியா! சரி, குரங்கு நம்மிடம் ஏதோ சொல்ல விரும்புகிறது. நம்மால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அநேகமாக அது நம்மை எங்கோ கூப்பிடுகிறது. அது காமிராவை எடுத்துக் கொண்டு போக விரும்பி இருந்தால் இந் நேரம் ஓடிப் போயிருக்கலாம். ஆனால் அது சிறிது தூரம் ஓடிய பின்னே நாம் தொடர்ந்து வராமல் நிற்பதை அறிந்து நின்று விடுகிறது பார். நாம் அதைத் தொடர்ந்து போய்ப் பார்க்கலாம் வா," என்றார் மாமா.



இருவரும் தன்னைத் தொடர்ந்து வருவதை அறிந்த குரங்கு வேகமாக ஓடத் துவங்கியது. அப்போது திடீரென்று அந்தக் காடே பரபரப்படைந்து மான்களும், குரங்குகளும் மற்றக் காட்டு விலங்குகளும் திடீரென்று வெறி கொண்டவை போல அந்த இடத்தை விட்டு ஓட ஆரம்பித்தன.

"எதனால் விலங்குகள் இவ்வாறு நடந்து கொள்கின்றன?" என்று கேட்டவாறே பிரவீன் குரங்கின் பின்னால் ஓடிக் கொண்டு இருந்தான்.

"என்னாலும் ஒன்றும் அறிந்து கொள்ள முடியவில்லை," என்றார் மாமா.

காட்டில் இருந்த பறவைகள் கூட ஒரே நேரத்தில் பதட்டத்தோடு குரல் எழுப்பிக் கொண்டே பறந்து சென்றன. சிறிது தூரம் ஓடிய பின்னே அவர்கள் கல்லும், பாறையும் மிகுந்து இருந்த வெட்ட வெளிப் பகுதியை அடைந்தனர். மரமோ, செடி, கொடியோ இல்லாத அந்தப் பகுதியில் நிழல் கொஞ்சம்கூட இல்லை.

இதுவரை அவர்களுக்கு முன்னால் ஓடிக் கொண்டு இருந்த குரங்கு ஒரு பாறையின் மீது ஏறி அமர்ந்து கொண்டது. பிரவீன் ஓடிச் சென்று

அதன் கையில் இருந்த காமிராவைப் பாய்ந்து பிடுங்கிக் கொண்டான். குரங்கு இதைக் கவனிக்கவே இல்லை. அதன் பார்வை எல்லாம் காட்டின் மேலேயே பதிந்து இருந்தது.

திடீரென்று குரங்கு உரத்த குரலில் 'கீக்கி..' என்று கத்திக் கொண்டே தன் கையால் காட்டுப் பகுதியைச் சுட்டிக் காட்டியது.

பிரவீனும், அவன் மாமாவும் திரும்பிப் பார்த்தனர். அந்தக் காட்சி அவர்கள் இரத்தத்தை பயத்தால் உறைய வைத்தது.

அவர்கள் சிறிது நேரத்திற்கு முன் தூங்கிக் கொண்டு இருந்த அந்தப் பகுதி காட்டுத் தீப்பற்றி எரிந்து கொண்டு இருந்தது! வெப்பத்தால் நன்றாகக் காய்ந்து போய் இருந்த புற்களும், மூங்கில்களும், 'திகுதிகு' வென்று எரிந்து கொண்டிருந்தன. அந்த இடம் முழுவதுமே பயங்கரமான தீ நாக்குகளால் சூழப்பட்டு வேகமாக எரிந்து கொண்டிருந்தது.

''நாம் மட்டும் அந்த இடத்தில் தூங்கிக் கொண்டு இருந்திருந்தால் காட்டுத் தீக்குப் பலியாகி இருப்போம். நான்கு பக்கங்களிலும் தீப் பிடித்து எரியும் போது நம்மால் வெளியேறி தப்பிக்க முடியாது.'' என்றார் மாமா.

''உண்மைதான். இந்தக் குரங்கு மட்டும் நம்மை இங்கு அழைத்து வராமல் இருந்தால் நாம் கருகிப் போயிருப்போம். அதன் உயிரைச் சேற்றிலிருந்து காப்பாற்றியதற்கு நன்றிக் கடனாக அது நெருப்பிலிருந்து நம்மைக் காப்பாற்றி விட்டது!'' அவன் குரல் நன்றிப் பெருக்கில் தழுதழுத்தது.

''விலங்குகள், காட்டுத் தீ, வெள்ளம், பூகம்பம் ஆகியவை ஏற்படப் போவதை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் ஆற்றல் கொண்டவை. அதனால்தான் காட்டுத் தீ ஏற்படப் போவதை அறிந்து குரங்கு நம் உயிரைக் காப்பாற்றி இருக்கிறது.'' என்று சொல்லிக் கொண்டே மாமா அந்தக் குரங்கை நன்றியோடு தடவிக் கொடுத்தார்.

அந்தக் காட்சியைப் பிரவீன் 'கிளிக்' செய்து அழகாகப் படம் பிடித்துக் கொண்டான். பிறகு இரண்டு பேரும் குரங்கின் செயலைப் பற்றிப் பாராட்டிப் பேசியவாறே வீடு திரும்பினார்கள்.



அவன் பாரி அல்ல!

அலைந்து திரிந்து
அரை வயிறு உண்டு
அலுப்புடன் உறங்கிட
தேடினான் ஓரிடம்.
அதோ நம் கூவம்,
அருகில் அவன், பாவம்!
அயர்ந்து கண் மூடினான்!
அடுத்த கணம் சயனம்!

அதுவரை காத்திருந்த
அரக்கக் கொசுப்படைகள்
ஆரவார வேகத்தில்
அப்பினவாம் அவன் மேலே
உரிமையுடன் குருதியதை
உறிஞ்சினவே, உறிஞ்சினவே!
உறக்கமின்றிப் புரண்டவனும்
உணர்ந்து விழித்தோடினான்.

உயிர்வாழ உடம்பினுள்ளே,
ஓடுவதோ கொஞ்ச ரத்தம்!
ஆனந்தமாய் அதையும் தர
அவனொன்றும் பாரி இல்லை!
பாவம், அவன் பிச்சைக்காரன்!

— புனிதா பொன்சிங்,
சென்னை — 20.



பிருந்தாவணக்



நாட்டுக்காக...

பாரதத்தைப் பாரில் உயர்த்தப்
பாடு படுங்கள்;
வீரம் மிகுந்த குடிமகனாய்
வாழ்ந்து காட்டுங்கள்;

நாட்டைக் குலைக்கும் சக்திகளை
நசுக்க வாருங்கள்;
நாட்டில் வாழ்ந்த நல்லவரை
நாளும் நினையுங்கள்;

ஜாதி பேத வேற்றுமைகள்
மறந்து வாழுங்கள்;
நீதி நேர்மை காத்திடவே
நியாயம் தேடுங்கள்.

நாட்டுக்காகப் பாடுபடும் நாளைத்
தேடுங்கள் — நாட்டின்
கோட்டை கொடியைக் காத்திடவே,
ஒன்று கூடுங்கள்;

தேசபக்திப் பாடல்களை நாளும்
பாடுங்கள் — நீங்கள்
தேசத்தின்மேல் நேசம் வைத்து
வாழ்ந்து காட்டுங்கள்.

சட்டத்திற்குக் கட்டுப்பட்டு
நிமிர்ந்து நில்லுங்கள்;
திட்டங்களைத் தீட்டி நாட்டை
உயர்த்த வாருங்கள்.

— வெண்புறா.



மரத்தினைக் காப்போம்..

இயற்கை என்பது இறைவன் ஆலயம்
அழித்திடல் நன்றாமோ?
செயற்கை உலகிலே வாழும் மனிதரே,
சிந்தனை செய்திடுவீர்!

மரங்கள் உதவியால் மழைகள் பொழியுது
மறந்திடல் நன்றாமோ?
சரங் களாய் மழை தந்துயிர் காப்பதும்
தழைத்திடும் கானகமே!

அறிவு ஆறினில் ஊறிய மானுடா!
அரணது மரமதுவே!
சரிவு டைந்தபின் பாது காப்பது
சாத்தியமோ உரைப்பாய்!

கண்ணுக் கினியன காணுதலே நன்று
கண்டிடு மரங்களிலே!
கண்ணைப் பேணிடும் இமையைப் போலவே
காத்திடு மரமதனை!

மரத்தை வெட்டிடும் கோடரி இனி இந்த
மண்ணுக்குள் புதையட்டுமே!
வரத்தை அருளிடும் வருண தேவனே
வந்திடுவார் உடனே!

— மு. முரளிதரன், வடசித்தூர்.

கவியரங்கம்

குதிரை பாரீர்!


தாவித் தாவி ஓடிவரும்
குதிரையைப் பாரு!
தங்க நிறம் கலந்திருக்கும்
மேனியைப் பாரு!

குதித்து, குதித்து ஓடிவரும்
குதிரையும் பாரு!
குட்டிக் குட்டிப் பிள்ளைகண்டு
குதிக்குது பாரு!

எட்டி, எட்டி உதைத்திடுமே
கிட்டத்தில் போனால்
கட்டி அன்பால் அணைத்திடலாம்
குதிரையை நாமே!

தாவித் தாவி ஓடிவரும்
குதிரையைப் பாரு!
தங்க நிறம் கலந்திருக்கும்
மேனியைப் பாரு!

— மா. விஜயகுமார், பாப்பிரெட்டிப்பட்டி




திசைச் சூரியன்



சொல்லாமல் வருவது வழக்கு
மறையும் பக்கம் மேற்கு;
மனத்தில் ஐயம் நீக்கு;
நின்று கிழக்கில் நோக்கு.
கைகள் இரண்டையும் தூக்கு;
வலக்கை பக்கம் தெற்கு;
வாதம் வேண்டாம் இதற்கு;
இடக்கை பக்கம் வடக்கு;
இனிமேல் கையை மடக்கு;
விரலை முறித்தால் சொடக்கு.

— ஒ. சபீர் சலாம், பனைக்குளம்.

சின்னஞ் சிறு நாய்க்குட்டி
சேட்டை செய்வதில் படுகட்டி!
தின்ன ஏதும் தந்திட்டால்,
துள்ளி வாலை ஆட்டுமே!



சுட்டிக்குட்டி

சீட்டி சப்தம் கேட்டதும்
சிறிய காதை உயர்த்துமே!
பாட்டி வருகை கண்டதும்
பாய்ந்து அன்பைப் பொழியுமே!

பாலைக் குடிக்கப் பூனையார்
பதுங்கிப் பதுங்கி வருகையில்
வாலை நிமிர்த்திக் குரைக்குமே!
வாசல் பக்கம் துரத்துமே!

— மீ. ப. நாராயணன், மதுரை—1.

மின்மினி ஒளிரும் மரத்தைப்பார்

ஏக பிறந்த டிசம்பர் மாதம்
இருபத் தைந்தாம் தேதியில்
காசி னிக்குத் தேவர் எல்லாம்
கூடி வந்து வாழ்த்தினர்!

விண்ணில் தவழும் மின் மினியை
வரிசை யாய் 'பர்' மரத்திலே
கண் சிமிட்டி வாழ்த்துக் கூறக்
கட்டித் தொங்க விட்டனர்!

மரத்தில் ஜோதி கண்டு உலக
மாந்தர் தேவ மைந்தனும்
பிறந்து விட்ட செய்தி அறிந்து
பாடி ஆடி மகிழ்ந்தனர்!

அருமை ஏசு அவத ரித்த
அந்தத் தினமே கிறிஸ்த் மஸாம்!
வருடம் தோறும் அன்று மரத்தின்
வடிவம் அமைத்துப் பாடினர்!

'கிறிஸ்த்மஸ் மரம்' என்ற பெயரைக்
கொண்ட அந்த மரத்தையே
கிறிஸ்த்மஸ் இரவில் இன்றும் மக்கள்
கூடி அமைத்துக் களிக்கிறார்!

'போனி ஃபஸ்ட்ர யோ'வாம் லண்டன்
போதகர் ஜெர் மனியிலே
ஆண்டு ஆயிரம் வாக்கில் மரத்தை
அலங்க ரிக்கத் தொடங்கினார்!

அடுத்த தாக அமெரிக் காவின்
அழகு 'டன்பர்' நகரிலே
எட்டு வயதுச் சிறுமி ஒருத்தி
ஏதோ நோயில் விழுந்தனள்!

பண்டி கையின் போது ஏக்கம்
போக்க விரும்பி மரத்திலே
வண்ண மலர்கள், மெழுகு வர்த்தி
வைக்கச் சொல்லி மகிழ்ந்தனள்!

கண்ணா டியின் துண்டைக் கூடக்
கட்டித் தொங்க விடுவதும்
பின்னா ளிலே அந்த நாட்டில்
பழக்கம் ஆகி விட்டதாம்!

இங்கி லாந்தின் பீட்டர் ஆல்பர்ட்
என்ற அரச குமரனாம்;
மங்க ளமாய் உச்சி மரத்தில்
முயன்று சிலையை வைத்தனன்!

இரண்டு கையை விரித்து நீட்டி
இனிய முகத்துத் தேவதை
மரத்தில் நிற்கும் உருவம் அமைக்கும்
முறையும் வந்து விட்டதாம்!

மதச்சீர் திருத்தம் கண்ட ஜெர்மன்
மார்ட்டின் லூதர் என்பவர்
நிதமும் போலக் கிறிஸ்த்மஸ் இரவு
நடந்து சென்று வந்தாரே!

மரங்க ளுக்கு மேலே வானில்
மின் மினிகள் ஒளிர்வதைப்
பரவ சமாய்க் கண்டு மனதில்
பெரிதும் மகிழ்ந்து துள்ளினார்!

உடனே மரத்தின் கிளையில் ஒன்றை
ஒடித்து வந்து வீட்டிலே
நட்டு கிறிஸ்த்மஸ் மரத்தை அமைத்து
நன்கு அலங்க ரித்தாரே!

வண்ணத் துண்டுக் கண்ணா டிகள்
விரும்பும் வண்ணத் தாளுடன்
எண்ணம் போல மெழுகு வர்த்தி
ஏற்றி அழகு படுத்தினார்!

"புனித மான கிறிஸ்த்மஸ் மரத்தைப்
புவியின் மாந்தர் யாவரும்
என்னைப் போல அமைக்க வேண்டும்"
என்று லூதர் சொன்னாரே!

இன்றும் லூதர் சொன்ன விதம்
இல்லம் தோறும் மரத்திலே
மின் சரத்தில் விளக்கு ஏற்றி
மின் மினியை அழைக்கிறார்!

— அ. ஜயராமன்



மன்னும்... மலுக்கும்!

கவிஞர் தமிழ்முடி



குருடரும் முடவருமாகிய இரட்டைப் புலவர்கள், ஒரு சமயம் திருவண்ணாமலைக்குச் சென்றார்கள். அங்கே 'சத்பந்தாண்டான்' என்ற செல்வனைப் பற்றிக் கேள்விப் பட்டார்கள். அவனைப் போற்றிப் பாடிப் பெரும் பொருளைப் பரிசாக விரும்பிச் சென்றார்கள்.

ஆனால் அவனோ மிகவும் திமிர் படைத்தவன். யாரையும் மதிக்காத செருக்குடையவன். புலவர்களின் அருமை பெருமைகளை அறியாத புல்லன்.



அதனை அந்தப் புலவர்கள் அறியவில்லை. அதனால் அவன் வீடு தேடிச் சென்றார்கள். அப்பொழுது அவன் தலைச் சவரம் செய்து கொண்டிருந்தான்.

வந்த புலவர்களைக் கண்டான். 'வாருங்கள்,' என்று வரவேற்கவில்லை.

அதைப் பொருட் படுத்தாமல், வந்தவர்கள், "நாங்கள் செந்தமிழ் பாடும் இரட்டைப் புலவர்கள். தங்களைப் பாடிப் பரிசு பெற வந்துள்ளோம். தங்கள் விருப்பம் எப்படியோ?" என்றார்கள்.

அதைக் கேட்ட சம்பந்தாண்டான், "ஓகோ நீங்கள் புலவர்களா? எதைப் பற்றிப் பாடுவீர்கள்?" என்றான் இளப்பமாக.

அதைச் சற்றும் பொருட் படுத்தாமல், "நாங்கள் எதையும் பாடுவோம்," என்றார்கள் பெருமையுடன் அவர்கள்.

அதைக் கேட்டதும், அவர்களை எப்படியாவது அவமானப்படுத்தி, ஏதும் தராமல் அனுப்பிவிட வேண்டுமென முடிவு செய்தான்.

அதனால் அவர்களை நோக்கி, "இப்பொழுது நான் சவரம் செய்து கொண்டிருக்கும் நிகழ்ச்சியையே வைத்துப் பாடுங்கள். அதுவும்



என்னுடைய நண்பர் பாண்டு ஒரு தொழிலதிபர். தொழில் ரீதியாய் அடிக்கடி வெளிநாடு சென்று வருவார். தன் குழந்தைகளுக்கு ஏதாவது அதிசய விளையாட்டுச் சாமான்கள் வாங்கி வருவார். இந்த முறை துபாய் போய் வந்த போது தான் ஏதோ பேசும் கிளி வாங்கி வந்திருப்பதாய்ச் சொன்னார்.

அதைப் பார்க்க நான் அவர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவரது கடைக் குட்டிப் பையன் பிண்ட்டு உற்சாகத்துடன் என்னை வரவேற்றான். அந்தக் கிளியைப் பற்றிக் கேட்டதும் அவன், ''அங்கிள், நான் கிளியைக் கொண்டு வரேன். நீங்க அதுகிட்டே நீ ஒரு முட்டாள்னு சொல்லணும். சொல்றீங்களா?'' என்று கேட்டான்.

''கிளியைத்தானே முட்டாள்னு சொல்லணும்? எடுத்து வா, சொல்றேன்,'' என்றேன் நான்.

பிண்ட்டு கிளியைத் தூக்கி வந்தான். அவனில் பாதி உயரம் போல இருந்தது. பஞ்சவர்ணக் கிளி மாதிரி கலர்.

அந்தக் கிளியின் முகத்தெதிரே, ''நீ ஒரு முட்டாள்,'' என்று சொன்னேன் நான்.

அடுத்த கணம் எனக்கு ஷாக். என்னைப் பார்த்து, ''நீ ஒரு முட்டாள்,'' என்றது கிளி.

சொன்னதைச் சொல்லுமாம் கிளிப் பிள்ளை. அந்தப் பொம்மைக் கிளிக்குள்ளே ஏதோ டேப்ரிகார்டர் செட்டப். பிண்ட்டு தந்திரமாய் என் மூக்கை உடைத்ததோடு நிற்கவில்லை. அப்போது ஒரு சிரிப்புச் சிரித்தான் பாருங்கள், காமெராவோடு இருந்த என் கை துறுதுறுத்தது.

கிளிக் செய்தேன். அந்தச் சிரிப்பைத்தான் அட்டையில் பார்க்கிறீர்கள்.

— ராஜா பொன்சிங்.

'மன்னு' எனத் தொடங்கி 'மலுக்கு' என்று முடியும் படி பாடும்,'' என்றான் கிண்டலாக.

அது அந்தப் புலவர்களுக்குப் பெருத்த அவமானத்தையும், ஆத்திரத்தையும் உண்டாக்கி விட்டது. எப்படியும் இன்றைக்கு இந்தச் செல்வனின் செருக்கையும், செந்தமிழ்ப் புலவர்களை மதியாத ஆணவத்தையும் அடியோடு அழித்துவிட வேண்டும் என்ற ஆவேசத்துடன் பாடத் தொடங்கினார்கள். கேள்வியும் பதிலுமாக அமைத்து.

முதல் புலவர், இரண்டாவது புலவரை நோக்கி, ''இந்தச் சம்பந்தாண்டான் 'மழு மழு' என்று தலைச் சவரம் பண்ணும் காரணம் என்னவோ?'' என்று கேட்டார்.

''அந்தக் காரணம் தெரியாதா? சொல்லுகிறேன் கேளும். இந்தச் சம்பந்தாண்டானுக்குள்ள இளமையான இரண்டு மனைவியர்களுக்குள்ளே சண்டை வந்து, அவர்களுக்கு இடையிலே அகப்பட்டுக் கொண்டால், அவர்கள் இவன் குடுமியைப் பிடித்து இழுத்துக் கொண்டு, 'நங்கு, நங்கு' என்று கொட்டாமல் தடுத்துக் கொள்வதற்காகவேதான், இப்படிச் சவரம் செய்து கொள்கிறான்,'' என்று கூறி முடித்தார் — பாட்டாகவே!

இதோ அந்த அற்புத நகைச்சுவை ததும்பும் பாடல்!

மன்னுதிரு அண்ணா மலைச்சம்பத்
தாண்டாற்குப்
பன்னுந் தலைச்சவரம் பண்ணுவதேன்?—
மின்னின்
இளைத்த இடைமாதர் இவன் குடுமி பற்றி
வளைத் திழுத்துக் குட்டா மலுக்கு.

அதைக் கேட்ட சம்பந்தாண்டான், பெரும் அவமானம் அடைந்து தலை கவிழ்ந்தான். அதனால் அன்று முதல் தமிழ்ப் புலவர்களைத் தாழ்வாக மதித்து, அவமதிப்பதை அடியோடு விட்டு, அவர்களை மரியாதையுடன் வரவேற்று உபசரித்துப் பரிசளித்துப் போற்றினான்.

[redacted]



புத்திமான் பலவான் ஆவான்

காட்சி — 1

நேரம்: மாலை — இடம்: தோட்டம்

சித்ரா: அழகான தோட்டத்திலே ஆடிப்பாடித் திரிஞ்சு விளையாடற துன்னாலே தனி ஆனந்தம், இல்லே?

ரமா: (பலகாரம் தின்று கொண்டே): அதுவும் வீட்டிலேருந்து பலகாரம் கொண்டு வந்து சாப்பிடற துன்னா அதைவிட ஆனந்தம்.

பாலு: என்ன ஆனந்தம்!

ரமா: இந்தத் தோட்டத்திலே விளையாடறதுன்னா ஆனந்தம் வராமே, அழுகையா வரும்?

சித்ரா: அழுகை — நீ பாடினா வரும்.

பாலு: பரவாயில்லை. நீ பேசி னாலே அழுகை வரும்.

சித்ரா: என்ன சொன்னே?

பாலு: தப்பு.. உன்னைப் பார்த் தாலே அழுகை வரும்.

சுசி: ஏன் இந்தத் தகராறு... விளையாடலாமா?

பாலு: முதல்லே கொண்டு வந்த பலகாரத்தைச் சாப்பிடுவோம்.

(முரடன் சுந்தர், ராமு இருவரும் வருகிறார்கள்)

சுந்தர்: நீங்க இங்கே சாப்பிடக் கூடாது.

பாலு: ஏம்பா, சாப்பிட்டா என்ன? உனக்கும் வேணும்னா கேளு...

சித்ரா: ஒரு பிடி சோறு போட றோம்.

பாலு: ஏன், ஒரு பானை சோறு வேணும்னா முதல்லியே சொல்ல ணும்.

சுந்தர்: டேய்! நான் முரடன், மகா முரடன்.

பாலு: இப்படிக் கேட்டு வாங்கித் தின்னே முரடனாயிட்டியா?

ராமு: அவன்கிட்டே எதிர்த்துப் பேசாதே.

சித்ரா: பேசினா என்ன? பல்லை உடைச்சுக் கையிலே கொடுத்திடு வானா?

ராமு: ஆமாம்.

பாலு: இரண்டு பேரும் இதுக்கு முந்தி எங்கியாவது கல்லு உடைச்சுக் கிட்டிருந்தீங்களா?

சுந்தர்: டேய் ராமு, என்னைப் பத்தி இவங்களுக்குத் தெரியாது.

சித்ரா: தெரியும்.

சுந்தர்: என்னன்னு?

பாலு: கல்லு உடைக்கிறவன்னு.

கூத்தபிரான்

தகராறு பண்ணாமே போ.

சந்தர்: இந்தச் சந்தர் பேர் சொன்னா இந்த ஊரே நடுங்கும்.

பாலு: பூகம்பத்தும் போது பிறந்தியோ என்னவோ! ஊரே நடுங்குமாம்...

ராமு: டேய்! நீங்க எல்லாரும் யாரு? ஊருக்குப் புதுசா?

சுசிலா: ஆமாம். பட்டணத்திலிருந்து லீவுக்கு வந்திருக்கோம்.

சந்தர்: அப்படியா சேதி? நம்ம பிரதாபத்தைச் சொல்லுடா ராமா.

பாலு: பிரதாபமா... உனக்கா?

சந்தர்: நான் பெரிய இடத்துப் பிள்ளை.

ரமா: அதை இவனே சொல்லிக்கிறான், பாவம்.

(சிரிப்பு)

ராமு: இவன்செல்லமானபிள்ளை.

சித்ரா: அதுக்கு என்ன, வெல்லமா உனக்கு வாங்கித் தர முடியும்?

ராமு: இந்தத் தோட்டம் அவனோடது. ஆமாம். புரிஞ்சுதா?

பாலு: மேலே பாரு ஆகாசம். அது எங்களோடது. தெரிஞ்சுதா? தோட்டம் அவனோடதுன்னா.. என்ன அதுக்கு? நாங்க விளையாடுவோம்.

சந்தர்: என் அனுமதியில்லாமே யாரும் தோட்டத்துக்குள்ளே வரக்கூடாது. அப்படி வந்து தோட்டத்திலே விளையாடணும்னு ஆசையிருந்தா...

ராமு: தினம் ஏதாவது ஒரு தின்பண்டம் அவங்க, அவங்க வீட்டிலேயிருந்து விளையாட வரும் போது கொண்டு வந்து கொடுக்கணும் ஆமாம்.

சுசிலா: நல்லா இருக்கு நியாயம்.

சித்ரா: வேணும்னா, கேட்டு வாங்கித் திங்கறதுதானே?

பாலு: அடிச்சுத் திங்கறவனுக்கு அதிகாரம் வேறயா?

சந்தர்: வீண் பேச்சு வேண்டாம். நான் சொன்னா சொன்னதுதான். சாப்பிட என்ன கொண்டாந்திருக்கீங்க?

பாலு: ஏண்டா, நாலு நாளாப் பட்டினியா?

சந்தர்: என்ன கொண்டு வந்திருக்கீங்க?

சித்ரா: பருத்திக் கொட்டை, புண்ணாக்கு, கொண்டாந்திருக்கிறோம்.

ராமு: அதெல்லாம் இவன்கிட்டேயே கொடுங்க.

சந்தர்: டேய், ராமு!

சித்ரா: எதுவும் கொடுக்க முடியாது.. வா, ரமாமணி அந்தத் தோப்பிலே போய் விளையாடலாம்.

சந்தர்: அந்தத் தோப்பும் எங்களுடையதுதான்.

பாலு: தெருவிலே விளையாடறோம். அப்ப என்ன பண்ணுவே?

ராமு: வேண்டாம் பாலு. இங்கேயே விளையாடலாம்.

சித்ரா: இங்கே வந்து விளையாட, இந்த இவனுக்கு...

சந்தர்: இவன் கிவன்னு பேசாதே, மரியாதை கொடு.

சுசிலா: என்ன ஒவ்வொண்ணா 'கொடு கொடு'ன்னு கேட்டு வாங்கித் திங்கற ஆளா நீ?



பாலு: எங்களைக் கேளேன் உதை கொடுன்னு. பேசாமே நாங்க கொடுத்து அனுப்பறோம்.

சந்தர்: என்னடா பார்த்துக்கிட்டு நிக்கறே? இவன் என்னை உதைப் பேன்னு சொல்றான். சும்மா இருக் கியே!

ராமு: போயிட்டுப் போறான் பொடிப்பயல்! போங்க போங்க!

சந்தர்: போறீங்களா... இல்லை, ஜிம்மியை ஏவி விடட்டுமா?

சித்ரா: உங்களை ஏவி விட்ட பிறகு ஜிம்மி எதுக்கு? வாங்க. போவோம்.

பாலு: ஜிம்மியையா ஏவி விடறே? இரு. இரு. நான் அம்மியைத் தூக்கிப் பறக்க விடறேன்.

சித்ரா: வேற எங்கியாவது போவோம். பத்துக் காக்காய்க்குப் போட்டுத் தின்னாலும் திம்பமே தவிர. உங்களுக்குப் போட மாட்டோம். வாங்க. போகலாம்.

ரமா: வேண்டாம் சித்ரா. இந்தத் தோட்டம் எவ்வளவு அழகாயிருக்கு!

சித்ரா: அதோட இரண்டு ஆந்தை யுமிருக்கு.

சந்தர்: நம்மை ஆந்தைங்கிறாங்க.

பாலு: தப்பு ஐயா. தப்பு. என்ன சித்ரா. தோட்டத்திலே ஆந்தை மட்டுமா இருக்கும்? கழுகுகளும் இருக்கும்.

ராமு: ஆ! நம்மை கழுகுங்கிறாங்க. விடக் கூடாது.

சித்ரா: என்ன இது. தொந்தரவாப் போச்சு!

பாலு: அதானே? ஆந்தைன்னா லும் ஆத்திரம் வருது. கழுகுன்னாலும் கொத்தற மாதிரி பார்க்கிறாங்க. வாங்க. போகலாம்.



ரமா: வேண்டாம் பாலு. இங்கேயே விளையாடலாம். இந்தத் தோட்டத்தை விட்டுப் போக மனசே இல்லை.

சுசிலா: ஆமாம் சித்ரா. ரமாமணி சொல்ற மாதிரி இங்கேயே விளையாடலாம்.

ரமா: ஆமாம் சித்ரா.

சித்ரா: சரி பாலு.. இங்கேயே விளையாடலாம்.

பாலு: விளையாடலாம்.

சந்தர்: அப்போ கொடுங்க.

சித்ரா: ஏன் பறக்கிறே?

பாலு: கொஞ்சம் குண்டாயிருந்துட்டா மத்தவங்களை மிரட்டிப் பயமுறுத்தறதா?

சந்தர்: நான் வல்லவன்.

சித்ரா: வல்லவனுக்கும் வல்லவன் உண்டு.

சந்தர்: அந்தக் கதையெல்லாம் எனக்கு வேண்டாம். தின்பண்டம் தர்றீங்களா? இல்லைட்டா என் தோட்டத்திலே விளையாடக் கூடாது போங்க.

சித்ரா: இந்தா..(கொடுக்கிறான்)

ரமா: எடுத்துக்க.(தன் பலகாரத்தை நீட்டுகிறான்)

சுசி: பிடி! (கையில் எடுத்துப் போடுகிறாள்)

சந்தர்: டேய், உன் பங்கு?

பாலு: இந்தா (கொடுக்கிறான்) ஜீரணமாகக் கூடாது. (சந்தர் ராமு இருவரும் எல்லாவற்றையும் வாங்கிக் கொள்கிறார்கள்)

சந்தர்: என்னடா, ஜீரணமாகக் கூடாதுன்னு சொல்லிக்கிட்டே கொடுக்கறே?

பாலு: அதுக்காக அது ஜீரணமாகாமலா போகப் போகுது?

சந்தர்: அவங்க எல்லாம் வாயை மூடிக்கிட்டு ஒழுங்காக் கொடுத்தாங்க.

பாலு: அவங்க, மனசிலே நினைச்சுக்கிட்டு வெளியே சொல்லாமே கொடுத்திருப்பாங்க. நீங்க வாங்க, இனி நாம விளையாடலாம்.

சந்தர்: தினம் விளையாட இங்கே வாணுமானால்...

சித்ரா: மறக்காமே உன்னைக் கவனிக்கிறோம்.

சந்தர்: ஆமாம். வாடா போகலாம்.

காட்சி — 2

நேரம்: மாலை.

இடம்: தெருவில் ஒரு பக்கம்.

ரமா: என்ன சித்ரா, விளையாடப் போகலாமா?

சித்ரா: போகலாம். போனா, அந்தத் தண்டச் சோறுகளுக்குத் திங்கக் கொடுக்கணுமே!

ரமா: கொடுத்தாப் போச்சு.

சித்ரா: தினம் இப்படியே கொடுக்க முடியுமா?

ரமா: வேற எங்கேயாவது போய் விளையாடலாம்னு நினைச்சா, எல்லாமே அவன் இடம்தான்கிறான்.

சித்ரா: இதோட நாலு நாளா, நாம திங்கறமோ இல்லியோ, வீட்டிலே செய்யற பலகாரம் எல்லாம் தவறாம அவன் சாப்பிடறான்.

சுசி: சாப்பிடறான்னு ஏன் சொல்றே? கொட்டிக்கிறான்னு சொல்லு. என்ன பண்றது?

சித்ரா: வாங்க, இன்னிக்குத் தெருவிலேயே விளையாடலாம்.

ரமா: வேண்டாம் சித்ரா. அந்தத் தோட்டத்துக்கே போகலாம். என் கிட்டே நாலு சாக்லேட் இருக்கு. கொடுத்து விளையாடலாம்.

சித்ரா: சரி. போய் விளையாடலாம்னா அந்தப் பாலுவையும் காணும்.

ரமா: வந்தா தன்னாலே தோட்டத்துக்கு வருவான்.

சுசிலா: அதோ பாலு வர்றான். கூட யாரையோ அழைச்சிக்கிட்டு வரான்.

(மௌலியும் பாலுவும் வருகிறார்கள்)

சித்ரா: என்ன பாலு, விளையாடப் போகலாமா?

பாலு: போகலாம். அதுக்கு முன்னே இந்த மௌலியை அறிமுகப்



படுத்தறேன். டேய், இவ சித்ரா, மணி, சுசிலா.

மூவரும்: நமஸ்காரம்.

மௌளலி: நமஸ்காரம்.

பாலு: சித்ரா, மௌளலியும் இன்னிக்கு நம்ம கூட விளையாடத் தோட்டத்துக்கு வரப் போறான்.

ரமா: நீ ஏதாவது வீட்டிலேயிருந்து கொண்டாந்திருக்கியா.

சுசிலா: யாரைக் கேட்கிறே? மௌளலியையா? ஐயோ பாவம்!

பாலு: நம்ம மௌளலியை என்னன்னு நினைச்சீங்க? மூளையுள்ளவன்.

சித்ரா: அப்போ நமக்கு எல்லாம் மூளை கிடையாதா? கிடையாதான்னு கேட்டேன்.

பாலு: என் வரைக்கும் நிச்சயம் எனக்கு நம்பிக்கை உண்டு. உங்களைப் பத்தி நான் சொல்ல முடியாது.

சித்ரா: எங்களுக்கும் மூளை இருக்கு.

பாலு: என்ன பிரயோசனம்? மூளை வேலை செய்யற அளவுக்கு இல்லியே! அடுத்தாற்போல மௌளலியைப் பாரு. பார்க்கப் பிரகாசமா என் மாதிரிதான் இருக்கான்! என் மாதிரி புத்திசாலியா இருக்கான். என் மாதிரி யோசித்துப் பேசறான். என் மாதிரி...

ரமா: போதும் போதும்.

சித்ரா: உன் மாதிரியே அவன் இருக்கிறதை அவன்கிட்டேயே சொல்லு. நீங்க வாங்க விளையாடப் போகலாம்.

பாலு: சித்ரா... சித்ரா! நில்லு நில்லு, மௌளலி பார்க்கப் பித்துக்குளி மாதிரிதானே இருக்கான்?

மௌளலி: நான் பித்துக்குளியா? ஏண்டா வாலு.

பாலு: ஒரு பேச்சுக்குச் சொன்னேன், இப்போ பாரு. பித்துக்குளி மாதிரி இருக்கிற இவன் அறிவு பிரமாதம். இவன்கிட்டே நம்ம சந்தரைப் பத்திச் சொன்னேன். அதுக்கு இவன் அந்தச் சந்தரை மூக்குடைக்கிறாப்பல சரியான திட்டம் சொல்லி இருக்கான்.

ரமா: என்ன திட்டம்?

பாலு: அதை இங்கே சொல்லலாமா?

சித்: என்ன செய்யப் போறானாம்?

பாலு: அவசரப்படாமே வாங்க! மௌலி சொன்னதுக்கு நீங்க ஆமாம் போடணும்.

சித்: எனக்குக் கோவிந்தா போட்டுப் பழக்கமில்லேடா.

பாலு: இது, கோவிந்தா இல்லை, நடிப்பு! வாங்க வந்து வேடிக்கை பாருங்க. வல்லவன்னு அவன் சொன்னான். இல்லை? இப்போ வல்லவனுக்கு வல்லவன் உண்டுங்கிறதைக் காட்டறேன்.

சுசி: எப்படியோ விளையாட்றதைக் கெடுக்காமே இருந்தால் சரி.

பாலு: வாங்க போகலாம்.

காட்சி — 3

இடம்: தோட்டம்:
நேரம்: மாலை.

சந்: என்னடா ராமு... இன்னும் விளையாட வரல்லே.

ராமு: அவங்க வீட்டிலே பலகாரம் செய்ய நேரமாயிருக்கும். வராமே போயிடுவாங்களா...? நாலு நாளா வர்றாங்களே!

சந்: நாலு நாளா நாலுவிதப் பலகாரம். வாய்க்கு ருசியா இருக்கு.

ராமு: அதிலேயும் ஓசியிலே வர்றது பாரு. ருசியாத்தான் இருக்கும். அதோ வர்றாங்கடா.

சந்: என்னடா, இன்னொரு பையனும் வர்றான்!

ராமு: இன்னிக்கு அவன் வீட்டிலே என்ன... பலகாரமோ?

(சித்ரா, பாலு, மௌலி, ரமா மணி, சுசிலா வருகிறார்கள்.)

சந்: என்னடா பாலு, தோட்டத்துக்குப் புதுசா ஒரு பையனைக் கூட்டியாந்திருக்கே? நம்ம தோட்டத்திலே விளையாடணும்னா...

பாலு: ஐயோ, ஐயோ... விதிகள் எல்லாம் சொல்லாமே இருப்பேனா?

சந்: விதிகள் சொன்னியா? பலே!

பாலு: சொன்னேன், இருந்தாலும் உன் வாயாலேயே இன்னொரு தரம் சொல்லிடு, கேட்கட்டும்.

சந்: என் அனுமதியில்லாமே யாரும் தோட்டத்து உள்ளே வரக் கூடாது.

ராமு: அப்படி வந்து தோட்டத்துக்குள்ளே விளையாட ஆசையாயிருந்தா...

சந்: தினம் ஏதாவது ஒரு தின்பண்டம் அவங்க வீட்டிலிருந்து விளையாட வரும் போது கொண்டு வந்து கொடுக்கணும்.

மௌலி: இதுதானே? தினம் கொடுத்துட்டாப் போச்சு.

> "நீங்க சினிமாவை ரொம்ப இன்ட்ரஸ்டா பார்க்கறாப்பலே இருக்கே...?"
>
> "ஆமா! எப்படிக் கண்டு பிடிச்சீங்க?"
>
> "என் கையிலே இருக்கிற பா... காரனை நீங்க எடுத்துச் சாப்பிட்டு... கிட்டிருக்கீங்க."
>
> — எஸ். ர...

சந்: ஆமாம், இன்னிக்கு என்ன கொண்டு வந்திருக்கீங்க, கொடுங்க.

மௌலி: இனிமே... நாங்க எல்லோரும் எங்க வீட்டிலிருந்தே ஒரே தின்பண்டமா கொண்டு வரப் போறோம்.

சந்: எப்படி?

மௌ: நாங்க எல்லாரும் ஒண்ணா, ஒற்றுமையா, சண்டையில்லாமே பழகணும்கிறதுக்காக என்ன செய்யப் போறோம் தெரியுமா?

சந்: என்ன செய்யப் போறீங்க?

மௌ: ஒரு நாளைக்கு லட்டு...

சந்: பலே!

மௌ: இன்னொரு நாளைக்கு மைசூர்ப்பாகு...

சந்: பேஷ்!

மௌ: இன்னொரு நாளைக்கு ஜிலேபி, அல்வா, சர்க்கரைப் பொங்கல், பிட்டு, அதிரசம், இப்படி வரிசையா அம்மாவைத் தினம் செய்யச் சொல்லியிருக்கோம். என்ன?

எல்லோரும்: ஆமாம்.


சித்: ஜிலேபி செய்தா, அப்போ அஞ்சு ஜிலேபி கொண்டு வந்து கொடுப்போம்.

எல்லோரும்: ஆமாம்.

சந்: பலே, பேஷ், ஆமாம் உங்களுக்கு விடுமுறை இன்னும் எத்தனை நாள் இருக்கு?

சித்: ஆறு நாள்தான் இருக்கு.

மௌ: அதனாலே... இந்த ஆறு



நாள்லேயும்.

சந்: ஆறு நாளிலேயும் உங்க வீட்டிலே என்ன என்ன பண்ணப் போறாங்க? என்னென்ன செய்யச் சொல்லியிருக்கீங்க?

மௌ: அவங்க ஆறு நாளைக்கும் சேர்த்து முன் கூட்டியே வாங்கி முடிச்சிட்டாங்க.

சந்: என்னது....? என்னது?

மௌலி: வயிறு நிறையப் பசியாறத் திங்கிற அளவுக்குத் தினமும் கிடைக்கும். என்ன?

எல்லோ: ஆமாம், கிடைக்கும்.

சந்: என்னது?

மௌ: கண்ணை மூடிக்க. இந்த ஆறு நாளைக்கும் ஆறு பேர் வீட்டிலேருந்து ஒரு தின்பண்டம் கொண்டு வரப் போறோம் இல்லியா?

சந்: ஆமாம்...

மௌலி: அதைத் தர்றோம். பாலு, அந்தச் சீசாவை எடு. கண்ணை மூடிக்கணும்.

சந்: மூடிக்கிட்டேன்; மூடிக்கிட்டேன்.

மௌ: கையை நீட்டு (சந்தர் கையை நீட்டுதல்) பாலு, அந்தச் சீசாவை எடு! எண்ணு அஞ்சு கொடு.

பாலு: (எண்ணி ஆறு ஆறு அரிசி மிட்டாயை வைத்துவிட்டு) கண்ணைத் திறந்து பாரு.

சந்: ஆ! இது என்ன அரிசி மிட்டாய்?

மௌ: இதுதான் ஆறு நாளைக்கும் எங்க அஞ்சு பேர் வீட்டிலேயும்.

எல்: ஆமாம்.

மௌ: மொத்தம் முப்பது மிட்டாய். உன் கையிலே அஞ்சு இருக்கு. இதோ சீசாவிலே இருபத்தஞ்சு இருக்கு.

பாலு: ஆளை விடு.

சந்: அரிசி மிட்டாயா?

பாலு: பின்னே என்ன, லட்டு, ஜிலேபி, மைசூர் பாகு கிடைக்கும்னா ஆசைப்பட்டே?

மௌ: எப்படிடா, பாலு?

சந்: பிரமாதம், பிரமாதம்! உண்மையிலே பிரமாதம்?

பாலு: என்னடா பிரமாதம்னு, உன்னைக் கேட்டா இவன் சொல்றான்.

சந்: டேய், உண்மையிலேயே நான்தான் தோற்றேன். நீங்க என்னை ஜெயிச்சுட்டீங்க. என் திமிராலே நான் குதிச்சேன். உங்க அறிவாலே என்னைத் தலைகுனியச் செய்துட்டீங்க. வல்லவனுக்கு வல்லவன் உண்டுங்கிறதைத் தெரிஞ்சுக்கிட்டேன்.

சித்: தெரிஞ்சுக்கிட்டியா. இனிமே ஒண்ணாச் சேர்ந்து விளையாடலாம் வாங்க.

(சிரித்துக் கொண்டு ஓடுகிறார்கள்).



கேளுங்கள் சொல்லப்படும்



* எம். சையது அபுதாஹிர், சன்னாநல்லூர்.

கே: ஆயுள் தண்டனை பெற்றவர் ஆயுள் முழுவதும் சிறையில் இருக்க வேண்டுமா?

ப: சில கொடூரங்களைப் பார்க்கும் போது அப்படி இருந்தால் நன்றாய் இருக்கும் என்று கூடத் தோன்றுகிறது. ஆனால் அப்படி இல்லை. ஆயுள் தண்டனையைப் பதினாலு ஆண்டுகள் வரைதான் என்று நிர்ணயம் பண்ணியிருக்கிறார்கள். அதிலும் சிறையில் ரொம்ப ஒழுங்காக நடந்து



கொள்கிற கைதி என்றால், எட்டு ஆண்டு சிறைத் தண்டனைக்குப் பிறகு பரோலில் வெளிவர அனுமதிக்கப்படுகிறான். ஆனால் ஒன்று. அவனது தண்டனை காலம் முடிகிற வரை அருகில் உள்ள காவல் நிலையத்துக்கு வந்து அவன் கையொப்பம் போட்டுக் கொண்டிருக்க வேண்டும். அதெல்லாம் பேஜார் வேலை தம்பி. சாதாரண தண்டனை கூட நமக்கு வேண்டாம்.

* சையது முஸ்தபா, திருச்சி — 17.

கே: கவிஞனுக்கும் கலைஞனுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: சொல்லளவில்தான் இருவருக்கும் வேறுபாடு என்று தோன்றுகிறது. அதிலும் இரண்டாவது எழுத்தான 'வி' 'லை' மட்டும்



தான் வித்தியாசம். மற்றபடி இரு ஜாதிக்கும் ஒற்றுமைதான் அதிகம். சிந்தனைக்கு விருந்து படைப்பதில் இருவருக்கும் ஒற்றுமை. கவிஞன் சொல்லைச் செதுக்கினால் கலைஞன் கல்லைச் செதுக்குகிறான். அவன் செவி வழி புகுந்து சிந்தையைத் தொட்டால், இவன் பார்வையில் புகுந்து மனசைப் பரவசப்படுத்துகிறான். சராசரி மனிதனால் சொல்ல முடியாத விதத்தில் எதையோ சொல்லி அதற்குள் ஆயிரம் ஆயிரம் அர்த்தங்களைச் செருகி வைப்பான் கவிஞன். அதே போல் மேம்போக்கான பார்வையில் ஒதுக்க முடியாதவாறு நோக்கும்தோறும் நோக்கும்தோறும் புதுப் புது அர்த்தங்கள் புலனாகிற மாதிரி கைவினை காட்டுகிறவன் கலைஞன் ஆகிறான். இருவருக்கும் பொதுவான ஓர் அம்சம் அழகு. அழகு. அழகு! அதாவது மனசைத் தொடுகிற அழகு. அருவருப்பில் கூட அழகு மெருகேற்றக்கூடிய ஜாலக்காரர்கள் இந்தக் கவிஞனும் கலைஞனும்.

* கே. எஸ். குமணன், கல்லிடைக்குறிச்சி.

கே: உணவு உண்டபின் குளிக்கக் கூடாது என்கிறார்களே! அப்படிக் குளித்தால் தவறா? உடல் நலத்துக்கு ஏதேனும் ஊறு

சின்ன அண்ணன்

விளைவிக்குமா?

ப: இதெல்லாம் சுத்தத்தின்—மேலும் சுத்தத்தின் அடிப்படையில் சொல்லப்பட்ட அறிவுரை என்று எடுத்துக் கொள். இல்லையோ பின்னே? குளித்து முடித்து உடல் சுத்தத்தோடு உணவு உண்டால் அது உடலுக்கு ஆரோக்கியம். காலையில் எழுந்ததும் காள்காவென்று சில பேருக்கு அகோரப் பசியாய் இருக்கும். அதற்காக முதலில் வயிற்றுக்கு அடைத்துக் கொண்டு, அப்புறம்




சாவகாசமாய்க் குளித்துக் கொள்ளலாம் என்றால் — உடம்பில் இருக்கிற அழுக்கு உங்களை அறியாமல் உள்ளுக்கு இறங்கி விடாதா? அதற்காகத்தான் பெரியவர்கள் சாப்பிட்ட பிறகு குளிக்கக் கூடாது என்று எதிர்மறையாய்ச் சொல்லி வைத்திருக்கிறார்கள். மற்றபடி விஞ்ஞான ரீதியாக, அதனால் எந்த ஊறும் கிடையாது. சோறு உள்ளுக்குப் போகாமல் இருந்தால் சரிதான்.

* மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.

கே: உங்களுக்கு ஜல்லிக்கட்டில் 'மாடு பிடித்த' அனுபவம் உண்டா?

ப: 'மாடு பிடித்த' என்ன? மாடு பிடித்ததை நேரில் பார்த்த அனுபவம் கூட இல்லை. சினிமாவில் மாடு பிடி செட்டப்பைப் பார்த்ததோடு சரி. ரொம்பத் திரில்லிங்காய் இருக்கும் என்று என் தெற்கத்தி நண்பர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். நான் தென்னாட்டிலேயே வடநாட்டான். எங்க பக்கத்திலே மாட்டுப் பொங்கல் அன்றைக்கு வீதியோரத்தில் வாரைத் தடுப்புக் கட்டி மாடுகளை விரட்டி விடுவார்கள். தடுப்புக்கு அப்பாலிருந்து ஊய் ஊயென்று விசில் சத்தமும் துணிந்த கட்டைகளிலரின் சீண்டலும் மட்டும் இருக்கும். இதிலேயே ரோஷப்பட்ட சில மூர்க்க மாடுகள் அப்பால் நிற்பவரை இழுத்துப் போட்டுக் கிழித்து விட்டுப் போய் விடும். ஒரு முறை என் நெருங்கிய நண்பன் ஒருவன் இப்படி மாடு குத்திக் குதறி எறிந்து குடல் சரிய துடித்து அடங்கியதை நேருக்கு நேர் பார்த்த பிறகு — போதுமடா சாமி என்று



அந்தத் திசைக்கே ஒரு பெரிய கும்பிடு போட்டு விட்டேன்.

* கே. அண்ணாத்துரை, உடுமலைப் பேட்டை.

கே: டைப்ரைட்டரை 1867 — இல் கிறிஸ்டோபர் சார்ல்ஸ் என்பவர் கண்டுபிடித்தார் என்றும், 1714 — இல் பிரிட்டிஷ்காரர் கண்டுபிடித்தார் என்றும் சொல்கிறார்களே, எது உண்மை?

ப: இரண்டுமே உண்மைதான். ஆனால் இரண்டுக்கும் ஒரு சின்ன வித்தியாசம் இருக்கிறது. 1714ல் இங்கிலாந்து பொறியியல் நிபுணர் மில்ஸ் என்பவர்தான் முதன் முதலாக டைப்ரைட்டரை வடிவமைத்தார். ஆனால் அது செயல்பாட்டுக்கு உதவும்படியாய் இல்லை. அதற்குப் பிறகு ஜூலை 14, 1868 ல்தான் எல்லோராலும் பயன்படுத்தத் தோதான இப்போதைய டைப்ரைட்டர் உருவானது. உருவாக்கியவர்கள் கிறிஸ்டோபர் லட்ஹாம் ஷோல்ஸ், கார்லோஸ் கிளிட்டன். இந்த இருவர்தான் டைப்ரைட்டர் பேடண்ட் உரிமை பெற்றவர்கள். பிறகு 1874 ல்தான் டைப்ரைட்டர் என்ற ஒன்று மார்க்கெட்டுக்கு வந்தது. அதுவரை துப்பாக்கித் தயாரித்த நிறுவனம் ஒன்று டைப்ரைட்டர் தயாரித்து விற்பனைக்கு விட்டது. அந்த நிறுவனம் 'ரெமிங்டன்' அண்டு சன்ஸ்.

ஒரு திருத்தம்

சென்ற இதழில், 'அதிக ஒளியைப் பார்க்கும் போது கண்கள் கூசுவது ஏன்?' என்ற கேள்விக்கு விடையாக, காமிராவில் உள்ள டயாஃப்ரம் போன்று கண்ணிலே உள்ள உறுப்பு Retina என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது தவறு. அந்த உறுப்பின் பெயர் — IRIS. அதாவது விழித்திரைப் படலம், நடுவே விழிமணிக்குரிய துளையுடைய கருவிழிச் சவ்வு என்பது அகராதி அர்த்தம்.

சரி, இந்த Retina என்பது என்ன? இது கண் விழியின் பின்புறத் திரை. இந்தத் திரையில்தான் நாம் பார்க்கும் பிம்பங்கள் விழுந்து மூளைக்கு உணர்த்துகிறது.



சார் தபால்!

பட்டாசுச் செலவு மிச்சம்!

* இம்மாத கோகுலம் எங்கள் வீட்டில் பட்டாசுச் செலவைக் குறைத்துவிட்டது. ஏனெனில் கோகுலத்தில் இடம் பெற்ற சிரிப்பு வெடிகள்தான் அதற்குக் காரணம்.

ஏம்பலம். சி. இராஜகோபாலன்.

* ஜி. ஜயராமன் அவர்கள் எழுதிய கவிதை — குழந்தைக் கவிஞரின் வாழ்க்கை வரலாற்றை அழகாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். குழந்தைக் கவிஞரின் அருகிலேயே நாம் இருப்பது போன்ற உணர்வு பெற்றேன்.

தேனி. 'தேனி முருகேசன்'

* தீபாவளியின் தீப ஒளியில் எங்களின் தீய இருளைப் போக்கி தியாகத் தீபம் ஏற்ற அறிவுரை வழங்கி வாழ்த்துக் கூறிய சின்ன அண்ணனுக்கு இந்தச் சின்னவனின் நன்றி.

தண்ணீரில் மிதக்கும் தம்பி வினோத் குமாரைப் பார்த்ததும் என் மனமும் முகமும் ஆச்சரியத்தில் மிதந்தன.

என்ன முழிக்கிறீங்க? உண்மையில் எங்களை முழிக்க வைத்து விட்டார் ஜெ! நவம்பர் கோகுலம் நவரசமாய் இருந்தது.

வந்தவாசி. சா. இரா. மணி.

* வைரச் சுரங்கத்திற்கு ஒரு தங்கச் சாவி என்ற 16 பக்கப் படக்கதை சூப்பர் சார்! ஆடம்பரச் செலவு செய்ய விரும்பும் ஆணவ அரசனைத் திருத்திய அருமையான கதை.

தச்சநல்லூர். ராஜீவ் பிரியன்.

* மலர்ச் சோலையில் புகுந்து தேனீக்கள் தேனைத் திரட்டுவது போல எங்களுக்குப் பல விஷயங்களைத் திரட்டி அறிவுத் தேனாய் வெளியிடும் பத்திரிகை கோகுலம். நன்றே அந்தக் கோகுலத்தில் புதுமையாக தீபாவளியை எப்படிக் கொண்டாடுவது எனப் பலரைக் கேட்டறிந்து எங்களுக்கு தந்தது மிகச் சிறப்பு!

பூந்தோட்டம். து. பாண்டியன்.

* பேசும், கேட்கும் சக்தியற்ற தாய் தந்தையர்க்குச் சைகைகள் மூலமே அனைத்தையும் தெரிவிக்கும் மகன் மகனைப் பார்த்ததும் பூரித்துப் போனேன்.

வந்தவாசி. எஸ். கோவிந்தசாமி.

* இந்த இதழில் வெளிவந்துள்ள திரு. நீலவன் எழுதிய 'இன்னா செய்தாரை...' என்ற சிறுகதையைப் படித்து முடித்ததும் கண்கள் பனித்து விட்டன. இதுபோன்ற நல்ல சிறுகதைகளை வெளியிடுவதால்தான் குழந்தைகள் உலகில் தனக்கென தனியிடத்தைப் பெற்றுச் சிறப்புடன் விளங்குகிறது.

கே. கே. புதூர். ஜி. திருமலைசாமி.

* 'அன்று' சிறுகதை பொதுத் தேர்வு எழுதிய ஒவ்வொருவருக்கும் இருக்கும் அச்சத்தையும், பதற்றத்தையும் நன்கு விளக்கியது. அதே சமயம் விடாமுயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் செயல்பட்டால் தேர்வில் வெற்றி பெறலாம் என்பதையும் தெளிவாக்கியது.

புன்செய்புளியம்பட்டி. பி. எல். கிரிஜா.

* 'நாம் யாரை நோவது?' என்ற கதையின் மூலம் 'யாவரும் பாவம் செய்தல் கூடாது' என்ற கருத்தைத் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் நன்றாகத் தெளிவுபடுத்தியிருந்த விதம் மிக அருமை!

சுவாமிமலை. ஏ. கே. அருள்சாமி.

* 'தீபாவளி சற்று வித்தியாசமாகக் கொண்டாடிப் பார்க்கலாமே!' என்று சொன்ன நண்(பி)பர்களின் பேட்டி என் போன்ற மாணவச் செல்வங்களின் எண்ணங்கள் எப்போதுமே வித்தியாசமானதுதான் என்பதை உணர வைத்தது.

மொரப்பூர். மு. திருநாவுக்கரசு.

* 'யாருக்கு வரும்?' என்ற தலைப்பில் பிருந்தாவனம் பகுதியில் வெளிவந்திருக்கும் எனது கவிதையில் — எழுதியவர் பெயர் 'மாலன்' என்று ஒரு சிறந்த எழுத்தாளரின் பெயரைப் பிரசுரித்து விட்டதில் கொஞ்சம் கவலை. அது மா. வோ. தாமோதரம் என்றோ, மாயன் என்றோ குறிப்பிடப்பட்டிருந்தால் மகிழ்ச்சி மேலும் கூடியிருக்கும்.

சென்னை — 106. மாயன்.



கண்வலி

டாக்டர். கு. கணேசன்

ஜெகதீஷை உங்களுக்குத் தெரியாதில்லையா?

வாருங்கள். அறிமுகம் செய்கிறேன்.

இவன்தான் ஜெகதீஷ். தொம்பக்குளம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் ஆறாம் வகுப்பில் படிக்கிறான். படிப்பில் கெட்டிக்காரன். எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பான். எல்லோரிடமும் கலகலப்பாகப் பேசுவான். எங்கள் ஊர்ச் சந்தைக்கு வரும்போதெல்லாம் என்னைச் சந்திக்கத் தவற மாட்டான் ஜெகதீஷ்.

இதோ இன்றும் அவன் வந்திருக்கிறான்.

எங்கள் சந்திப்பை நீங்களும்தான் கொஞ்சம் கவனியுங்களேன் —

ஜெகதீஷ்: வணக்கம், மாமா!

நான்: வணக்கம், ஜெகதீஷ்! வா, உட்கார்.

ஜெகதீஷ்: நன்றி, மாமா!

நான்: என்ன விஷயமாக வந்திருக்கிறாய், ஜெகதீஷ்? வீட்டில் எல்லோரும் செளக்கியமா?

ஜெகதீஷ்: அம்மாவும் அப்பாவும் நல்ல செளக்கியம், மாமா. தங்கைக்கு இரண்டு நாட்களாகக் கண்வலி. அம்மா உங்களிடம் கண்வலி மருந்து வாங்கி வரச் சொன்னார். அதனால் தான் வந்தேன். அதோடு கண்வலியைப் பற்றி நான் தெரிந்து கொள்ளவும் ஆர்வமாய் இருக்கிறேன், மாமா!

நான்: சந்தோஷம், ஜெகதீஷ். உன் ஆர்வத்திற்கு என்றேனும் தடை போட்டிருக்கிறேனா? கண்வலியைப் பற்றி விரிவாகவே சொல்கிறேன், கேள்....


'கண்வலி' என்பது நம் கண்ணில் வெள்ளையாகத் தெரியும் விழிவெண் படலத்தில் சிலவகை பாக்டீரியாக் கிருமிகளோ அல்லது வைரஸ் கிருமிகளோ தாக்கும்போது வரக்கூடிய ஒருவகைக் கண் நோய். இதை நாங்கள் 'கண் ஜங்க்டிவைட்டிஸ்' (Conjunctivitis) என்று அழைப்போம். சில சமயங்களில் மருந்து, மாத்திரை, புகை போன்றவை உடம்புக்கு ஒத்துக் கொள்ளாமல் ஒவ்வாமை (Allergy) காரணமாகவும் கண்வலி வரலாம்.

ஜெகதீஷ்: கண்வலியைச் சில பேர் 'மெட்ராஸ்—ஐ' என்று அழைக்கிறார்களே, அது ஏன், மாமா?

நான்: மெட்ராஸ்—ஐ என்பது கண்வலிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு காரணப் பெயர், ஜெகதீஷ்! சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னை நகரம் முழுவதும் இந்தக் 'கண்வலி' நோய் அதிகமாகப் பரவியிருந்தது. பின்பு அங்கிருந்து மற்ற நகரங்களுக்கும் அது பரவியது. இதன் காரணமாகச் சிலர் கண்வலியை 'மெட்ராஸ்—ஐ' என்று அழைக்கிறார்கள்.

ஜெகதீஷ்: கண்வலி எப்படியிருக்கும், மாமா?

நான்: கண்வலி வந்தவர்களுக்குக் கண்கள் இரண்டும் ஆப்பிள் பழம் போல் சிவந்திருக்கும். கண்களில் அரிப்பும், நமைச்சலும் உண்டாகும். கண் இமைகளைத் திறக்க இயலாத அளவுக்குப் பிசிறு வெளியேறும். இமைகள் வீங்கும். இதுபோன்ற



அறிகுறிகளை வைத்து ஒருவருக்குக் கண்வலி வந்திருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம்.

ஜெகதீஷ்: மாமா, கண்வலி எப்படி வருகிறது என்பதையும் எனக்குச் சொல்லுங்களேன்.

நான்: சொல்கிறேன், ஜெகதீஷ்! கண்வலியை உண்டாக்கக் கூடிய பாக்டீரியாவோ அல்லது வைரஸோ தூசு மூலமாகவும் கண்களை அடைகின்றன. எடுத்துக்காட்டாக அழுக்குத் துவாலையால் கண்களைத் துடைத்தால் கண்வலி வரலாம்; கண்வலி வந்தவர்கள் உபயோகித்த சோப்பு, பற்பசை, துவாலை, கைக்குட்டை போன்றவற்றை மற்றவர்கள் உபயோகித்தால் அவர்களுக்கும் கண்வலி வரக்கூடும்...

ஜெகதீஷ்: கண்வலி வந்தால் பார்வை பாதிக்குமா, மாமா?

நான்: இல்லை, ஜெகதீஷ்! பொதுவாகக் கண்வலியால் பார்வை பாதிப்பதில்லை. சில சமயங்களில் 'டிரக்கோமா' வைரஸ்ஸினால் கண்வலி வந்திருந்தால் பார்வை பாதிக்கக் கூடும். எனவே, கண்வலி வந்தவர்கள் தாங்களே கடைகளில் மருந்து வாங்கி உபயோகிப்பதைத் தவிர்த்து, மருத்துவர் தரும் மருந்துகளையே கண்வலிக்கு உபயோகிக்க வேண்டியது அவசியம்.

ஜெகதீஷ்: சரி மாமா, கண்வலி வந்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் ஏதேனும் இருக்கிறதா?

நான்: இருக்கிறதே! கண்வலியால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவர் தரும்மருந்துகளைச் சரியான அளவில் முறையான நேரங்களில் குறிப்பிட்ட நாட்களுக்கு உபயோகித்து வர வேண்டும். கண்களில் வெளிப்படும் பிசிறினைச் சுத்தமான துணியால் துடைத்து எடுத்துவிட வேண்டும். பின்பு அத்துணிகளை எவரும் தொட்டுவிடா வண்ணம் எரித்துவிட வேண்டும். கண்களைக் கசக்கக் கூடாது. கண்களில் வெளிச்சம் பட்டால் கண்கள் கூசும். இதைத் தவிர்க்கத் தற்காலிகமாகக் கண்களுக்குத் துணித் திரையோ அல்லது குளிர் கண் கண்ணாடியோ அணிந்து கொள்ளலாம்.

ஜெகதீஷ்: ஏன் மாமா, கண்வலி வராமல் தடுக்க முடியாதா?

நான்: முடியுமே... நாம் நினைத்தால் எதுதான் முடியாது, ஜெகதீஷ்?

அடிக்கடி முகத்தைக் கழுவி, கண்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். கைவிரல்களில் அழுக்கு சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பலரும் குளிக்கும் பொதுக் கிணறுகளிலும், குளங்களிலும் குளிப்பதைத் தவிர்க்க வேண்டும். கண்வலி வந்தவர்களுடன் நெருங்கிப்பழகுவதைத் தவிர்க்க வேண்டும். அவர்கள் உபயோகித்த சோப்பு, துவாலை, பற்பசை, கைக்குட்டை போன்ற பொருட்களை மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது. இதுபோன்ற வழிமுறைகளினால் கண்வலி வராமல் தவிர்க்கலாம், ஜெகதீஷ்!

ஜெகதீஷ்: நன்றி, மாமா. கண்வலியைப் பற்றிய பயம் இனி எனக்கு இல்லை. நீங்கள் சொன்ன வழிமுறைகளைக் கடைப்பிடித்து எனக்குக் கண்வலி வராமல் பார்த்துக் கொள்வேன். நாளை தங்கையை உங்களிடம் அழைத்து வருகிறேன். அவளைப் பரிசோதித்த பின்பே மருந்து கொடுங்கள். வருகிறேன், மாமா!

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: ஜி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—



Coconut Cream
Try-Me
CARAMILK
COFFY BITE
Eclairs
Parry's
டிரை-மீ
கேரமில்க்
சாக்லேட் எக்ளேர்ஸ்
கோகனட் க்ரீம்
காப்பிபைட்
மிட்டாயை வாயில் போட்ட பிறகு மிட்டாயின் மேலுறையை எறிந்து விடாதீர்கள்... பாரிஸ் மிட்டாய்களின் வண்ண வண்ண மேலுறைகளைக் கொண்டு நீங்கள் என்னென்ன செய்யலாம் என்பதைப் பாருங்கள்.

REGISTERED NO. TN MS (S) 281

Registered as a Newspaper in Srilanka

